
நற்றுணையாவது நமசிவாயவே

# சைவ நீதி

சித்திரை – வைகாசி

## Saiva Neethi



Price
£ 1
€ 1.25
$ 2

## கே.பி வித்யாதரன் எழுதிய

# 2014

## ஜய வருட ராசி பலன்கள்

# Best Food

364 - 366, Bath Road
Hounslow  Middlesex TW4 7HT
**Tel : 020 8577 6002**
**Fax : 020 8570 2323**

எங்கள் வியாபார நிலையத்தில் ஒவ்வொருமாதமும்
அதிரடி மலிவு விற்பனையாக
பல பொருட்களை மக்களுக்கு விற்பனை செய்கிறோம்.
ஒவ்வொரு மாதமும் எங்கள் கிளைகளுக்குச் சென்று மலிவு விலை
பொருட்களை பெற்றுக்கொண்டு கணிசமான பணத்தை
சேமியுங்கள்



மேன்மைகொள்

# சைவ நீதி

*அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு - குறள்*

திருவள்ளுவர் ஆண்டு 2044
ஜய : சித்திரை – வைகாசி
மலர் : 1 இதழ் : 12
ஏப்ரல் 2014

*பொறுப்பாசிரியர் :*
பத்மினி சிவானந்தசோதி

*பதிப்பாசிரியர் :*
நா. சிவானந்தசோதி

*முகவரி :*
41, HADDINGTON ROAD
BROMLEY
KENT BR1 5RG, U.K.
Email : jothy5@yahoo.co.uk

*வெளியீடு :*
திருமுருகன் அறிவகம்
லண்டன்

Thirumurugan Arivagam
London

| | | |
|---|---|---|
| கணக்கு எண் | : | 29513668 |
| வங்கி இலக்கம் | : | 77 91 29 |
| வங்கி | : | Lloyds TSB |

*வடிவமைப்பு :*
கமலா ஆர்ட்ஸ்

Layout :
Kamala Arts

## முதலாம் திருமுறை
## சம்பந்தர் சுவாமிகள் அருளியது
## திருப்பிரமபுரம்

(அருள்மிகு சட்டைநாத சுவாமி திருக்கோயில்,
சீர்காழி, நாகப்பட்டினம் மாவட்டம்)

திருச்சிற்றம்பலம்

**ஒருமைபெண்மைஉடை யன்சடையன்விடை
ஊரும்இவன் என்ன
அருமையாகஉரை செய்யஅமர்ந்தெனது
உள்ளம்கவர் கள்வன்
கருமைபெற்றகடல் கொள்ள மதிந்ததோர்
காலம்இது என்னப்
பெருமைபெற்றபிர மாபுரமேவிய
பெம்மான்இவன் அன்றே.**

தெளிவுரை : ஒரே வடிவத்தில் பெண்ணுருவும் ஆணுருவும் கொண்டு இரு உருவங்களைக் காட்டுபவனாகி, சடை முடியுடன் இடபத்தில் அமரும் சிவபெருமான் அருமையான உரைகளைச் சொல்லும் பொருட்டு எனது உள்ளம் அமர்ந்து என்னைக் கவர்ந்தவன். ஊழிக் காலத்திலும் அழியாத பெருமையுடைய பிரமாபுரம் மேவிய பெருமான் இவனல்லவா !

---

உங்கள் வீட்டுக்கு சைவ நீதியை வரவழைக்க நீங்கள் செய்ய வேண்டியது £ 1.50 கான பணத்தை காசோலை மூலமாக அனுப்பிவைத்தால் புத்தகம் உங்கள் வீட்டில்






## சைவப்பெருமக்களுக்கு!!!

கடந்த மாதம் சைவ நீதிக்கு நீங்கள் தந்த ஆதரவு மிகுந்த மகிழ்ச்சியை கொடுத்தது. சைவ நீதி இதழை தொடர்ந்து நடத்துவதற்கான காரணம் எம் மக்கள் சைவத்தைப் பற்றி சிறிதளதாவது தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆசையே. கடந்த வாரம் நண்பர் ஒருவர் என்னுடன் பேசும்போது சைவ சமயத்தைப் பற்றிய வாக்குவாதம் வந்தது. அப்போது சைவம் பற்றிய அடிப்படை அறிவுகூட எம் மக்களிடம் இல்லை என்பதை அறிந்து மிகுந்த கவலையுற்றேன்.

அதன் காரணம், சென்னை கபாலீஸ்வரர் கோவில் பாடல் பெற்ற தலம். அது குறித்து ஒரு சிறிய கதை ஒன்று உண்டு. மயிலாப்பூரைச் சேர்ந்த ஒரு வணிகரின் மகள் திருமண வயதில் இறந்துவிட்டார். மனம் தாளாத தந்தை தன் மகளின் உடலை ஒரு சாடியில் வைத்து பாதுகாத்தார். அந்த சமயத்தில் அங்கு வந்த ஞான சம்பந்தர் விஷயத்தை கேள்வியுற்று ஒரு பாடல் பாடி அந்த பெண்ணுக்கு உயிர் குடுத்ததாக புராண செய்தி. ஞான சம்பந்தரையும் அவர் புரிந்த அற்புதங்களைப் பற்றியும் எம் மக்களுக்கு தெரிந்திருக்கவேண்டும். சைவம் வாழ வழிவகுத்த மாணிக்கவாசகரைப்பற்றியும் தெரிந்திருக்க வேண்டும். ஈழத்தில் சைவத்தை வளர்த்த ஆறுமுக நாவலரைப்பற்றி அறிந்திருக்க வேண்டும். இவர்கள் ஒருவரைப் பற்றியும் அறியாமல் சைவத்தை அறிய முடியாது. இதன் காரணமாகவே சைவ நீதியை தொடர்ந்து வெளியிட்டுக் கொண்டு இருக்கிறேன்.



சைவ நீதி இதழுக்கு இதுவரையில் பூரண ஆதரவு தந்து என்னை ஊக்கப்படுத்திய சைவக் கோவில்கள், லண்டன் கனகதுர்க்கை அம்மன் கோவில், குறோய்டன் சக்தி விநாயகர் கோவில், வோல்த்தம்ஸ்ரோ கற்பக விநாயகர் கோவில், ஆர்ச்வே முருகன் கோவில், நியூ மோல்டன் முருகன் கோவில், வோல்த்தம்ஸ்ரோ பத்ரகாளியம்மன் கோவில், இவர்களுக்கு எமது நன்றிகள்



திருவிளையாடல்

# தடாதகையாரின் திருமணப் படலம்!

உலகத்துக்கே ஒரு தாயை ஈன்றெடுத்துக் கொடுத்த காஞ்சனமாலையும், உலகத்தாயான தடாதகை பிராட்டியும் தங்கள் குல தலைமையை இழந்து அடைந்த கவலைக்கு அளவே இல்லை. அவருக்குரிய ஈமச்சடங்குகளை தடாதகையே முன்னின்று செய்தாள். தந்தையில்லாத வீடு... மகளுக்கு திருமணம் செய்து வைத்துவிட்டால் வீட்டுக்கு மருமகன் வந்துவிடுவார். தடாதகையை நல்லபடியாக பார்த்துக் கொள்வார். இவளுக்கு திருமணம் செய்து வைத்துவிட்டால் நல்லதென முடிவெடுத்து, மகளிடம் சொன்னாள் காஞ்சனமாலை. மகள் அவளிடம், அம்மா! ஒரு தாயாக இருந்து உனக்குரிய கடமையை நீ சொன்னாய். ஆனால், தந்தைக்கு கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுவது எனது கடமை. தந்தையார் என்னிடம் சொன்னபடி நான் உலகமெங்கும் சுற்றி, அனைத்து தேசங்களையும் என் ஆட்சியின் கீழ் கொண்டு வரவேண்டியிருக்கிறது. நீ என்னை வாழ்த்தி வழியனுப்பு! திரும்பி வந்ததும், உன் விருப்பப்படியே திருமணம் நடக்கும், என்றாள். மகளின் விருப்பத்திற்கு தாயும் குறுக்கே நிற்கவில்லை. அமைச்சர் சுமதி போருக்குரிய அனைத்து ஏற்பாடுகளையும் செய்தார். போர்க்கோலம் பூண்ட தடாதகை பிராட்டி, தாயிடம் நல்லாசி பெற்று புறப்பட்டாள். தாரை, தப்பட்டை ஆர்ப்பரிக்க, சங்குகள் முழங்க அவளது நால்வகைப் படையும் கிளம்பியது.

இவர்களது படையைப் பார்த்தவுடனேயே எதிரிகளெல்லாம் அஞ்சி, நடுங்கி அவளை சரணடைந்தனர். பூவுலகில் வெற்றிக்கொடி நாட்டி தடாதகை பிராட்டியார், தேவலோகத்திற்குச் சென்றாள். புத்திரகாமேஷ்டி யாகம் செய்தால், குழந்தை பிறக்குமென மலையத்துவஜனுக்கு வாக்களித்த இந்திரன், கலங்கிப் போனான். நமது யோசனையால் பிறந்த குழந்தையே, நம்மை நோக்கி படையெடுத்து வருகிறதே என அஞ்சி நடுங்கினான். பதவியை விட்டுவிட்டு, ஓடி ஒளிந்து கொண்டான். தடாதகை பிராட்டியார் தேவேந்திரனுக்குச் சொந்தமான சங்கநிதி, பதுமநிதி, சிந்தாமணி, காமதேனு, கற்பகதரு போன்ற மிகப் பெரிய செல்வங்களையெல்லாம் தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டாள். தேவ கன்னியர்களை தனக்கு பணிபுரிவதற்காக தன்னோடு வரச்சொன்னாள். பிறகு, கயிலை மலையையும் தன் வசமாக்கிக் கொள்வதற்காக படைகளுடன் அங்கு புறப்பட்டாள். தடாதகை பிராட்டியார் வாழ்க! அமைச்சர் சுமதி வாழ்க! என்ற கோஷம் விண்ணைப் பிளந்தது.கயிலையை அவள் அடைந்ததும், சிவபெருமான் அவளை முகம் மலர வரவேற்றார். தடாதகை பிராட்டியார் மதுரையிலிருந்து கிளம்பியபோதே, சுந்தரேஸ்வர பெருமானும் அவள் அறியாவண்ணம் அவளது தேரிலேயே அமர்ந்து வந்தார் என்பதை, அவளால் உணர முடியவில்லை. இதை அறியாத நந்திதேவர், பிராட்டியாரின் படை கண்டு நடுங்கி நின்றார். இப்படி ஒரு படை வந்திருக்கிறதே! நம்மையே அடிமைப் படுத்த வந்துள்ள இந்தப் பெண்மணியை நீங்கள் வரவேற்கிறீர்களே! என் கட்டுக்காவலை மீறி இவர்கள் உள்ளே வந்துள்ளார்கள். இப்போது நாம் என்ன செய்வது? என சிவனிடம் யோசனை கேட்டார்.

சிவபெருமான் அவரிடம், போருக்கென வந்தவர்களிடம் மோதிப்பார்த்து விட வேண்டியது தான். நீ நம் படைகளுடன் புறப்படு, என்றார். சக்திதேவியான தடாதகை பிராட்டியாரின் வீரத்தை உலகுக்கு உணர்த்துவதற்காக, சிவபெருமான் இப்படியொரு நாடகம் ஆடினார். நந்தி தேவரின் தலைமையில் புறப்பட்ட படைகள் அனைத்தும் தடாதகை பிராட்டியால் விரட்டியடிக்கப்பட்டன. சிவகணங்கள் ஓடி ஒளிந்து கொண்டனர். சூரியன், சந்திரன், அக்னி, வருணன் முதலான தேவர்களின் அஸ்திரங்களை எல்லாம் தடாதகை பிராட்டியார் அழித்தாள். பூதங்களின் வலிமை பிராட்டியின் வலிமை முன்னால் எடுபடவில்லை. வேறு வழியின்றி சிவபெருமானே அவளுடன் போர் செய்ய கிளம்பினார். அவர் அன்னையின் முன் வந்து நின்றதும், அந்த அதிசயம் நிகழ்ந்தது. அவளது தனங்களில் ஒன்று மறைந்தது. மன்மதனின் கணைகள் அவளைத் தாக்கியது போன்ற உணர்வு ஏற்பட்டது. ஆயுதங்களை கீழே போட்டு விட்டு, நாணத்தால் தலை குனிந்து நின்றாள் தடாதகை. அமைச்சர் சுமதி ஆச்சரியப்பட்டார். அவருக்கு தான் மீனாட்சியின் தன ரகசியம் தெரியுமே! எதிரே நிற்பது சிவபெருமான் என்பதும், அவளே அவரை மணந்து கொள்வார் என்பதும் தெரிந்து விட்டது. தடாதகை பிராட்டியார் குனிந்த தலைநிமிராமல், அவரது பாதத்தில் விழுந்தாள். அதுவரையில் இருந்த வீரம், காதலாக மாறிவிட்டது.

உலகையே வென்று நம் கைக்குள் கொண்டு வந்தாலும், மனிதன் இறைவனிடமே அடைக்கலமாக வேண்டும் என்பதை உணர்த்தியது இந்தக் காட்சி. சிவபெருமான் அவளைத் திருமணம் செய்து கொள்ளப்போவதாக அறிவித்தார். பின்னர் மீனாட்சி மதுரை திரும்பினாள். தாய் காஞ்சனமாலை வெற்றிக் கனி பறித்து வந்த மகளை வரவேற்றாள். உலகை வென்றதுடன், ஈசனின் இதயத்தையும் தன் மகள் வென்று வந்தாள் என்ற செய்தியறிந்து, மகளுக்கு மணநாள் குறிக்க ஏற்பாடு செய்தாள். இறைவனுக்கே திருமணம் நடத்தி வைக்கும் பாக்கியம் கிடைத்தது குறித்து அமைச்சர் சுமதி ஆனந்தம் கொண்டார். திருமண பட்டோலை எழுதி, பல தேசத்து மன்னர்களுக்கும் அனுப்பினார். மதுரை மக்களுக்கு தடாதகை பிராட்டியாருக்கு திருமணம் நடக்க இருப்பது குறித்து முரசறைந்து அறிவிக்க ஏற்பாடு செய்தார். மக்கள் மகிழ்ந்தனர். தங்கள் வீட்டு திருமணம் அல்லவா? நகரை அவர்கள் அலங்கரித்த விதம் அலாதியாக இருந்தது. தங்கள் வீடுகளை சுத்தம் செய்து வண்ண ஓவியங்களைத் தீட்டினர். நகர் முழுவதும் கமுகு, வாழை மரத்தோரணங்களைக் காண முடிந்தது. இறைவனுக்கு அம்பாளின் அவதாரமான தடாதகை பிராட்டியுடன் நடக்கப் போகும் திருமணத்துக்கு முனிவர்களும், தேவர்களும் வந்து சேர்ந்தனர். சிவபெருமானுக்கும், தடாதகை பிராட்டியாருக்கும் செய்யப்பட்ட அலங்காரத்தை சொல்லி மாளாது. தடாதகை பிராட்டி தன் மக்களை மீன் போல் பாதுகாத்தவள். அதாவது, மீன்கள் தங்கள் கண்களாலேயே குஞ்சுகளுக்கு உணவூட்டுபவை. சற்றும் இமைக்காதவை. இக்காரணத்தால், எங்கள் மீனாட்சிக்கு கல்யாணம் என மக்கள் ஆரவாரம் செய்தனர்.


அந்த மீனாட்சிக்கு சரஸ்வதியும், லட்சுமியும் வந்திருந்து அலங்காரம் செய்தனர். ஊர் மகிழ்ந்திருந்த வேளையில், காஞ்சனமாலைக்கு மட்டும் கண்ணீர் வழிந்தது. இதையெல்லாம் பார்க்க தன் கணவர் மலையத்துவஜன் இல்லையே என்று! தந்தையில்லாத மீனாட்சிக்கு தந்தையாயும், தமையனாயும் இருந்து திருமணத்தை நடத்தி வைக்க அந்த மகாவிஷ்ணுவே வந்துவிட்டார். ஈசனுக்கு பட்டு அங்கவஸ்திரம், விதவிதமான நகைகள் அணிவிக்கப்பட்டு மிக அழகாக இருந்தார். இவரல்லவோ சுந்தரன் என்று மக்கள் ஆனந்தமாகப் பேசினர். சுந்தர ஈஸ்வரன் எங்கள் மீனாட்சியின் கரம் பற்ற வந்துள்ளான், என புகழ்ந்தனர். இதனால் சிவபெருமானுக்கு சுந்தரேஸ்வரன் என்ற பெயர் உண்டாயிற்று. அமைச்சர் சுமதி ஆனந்தக் கண்ணீர் வழிய நின்றிருந்தார். மணமேடைக்கு மணமக்கள் வந்தனர். அவர்கள் மாலை மாற்றி கொண்டனர். பிரம்மா வேதமந்திரம் முழங்க, திருமால் தாரை வார்த்துக்கொடுக்க, மணமகளுக்கு திருமாங்கல்யத்தை அணிவித்தார் சுந்தரேசர். அவளது பாதத்தில் மெட்டி அணிவித்தார். எங்கும் பூ மழை பொழிந்தது. மீனாட்சி அம்மியில் கால் வைக்கவும், திருமணத்துக்கு வந்திருந்த வசிஷ்டரின் மனைவி அருந்ததி தேவி, மீனாட்சியின் முன்னால் வந்து நின்று, தங்களின் பார்வை என் மீது பட நான் இங்கே காத்திருக்கிறேன், என்று தலை வணங்கி கைகூப்பி நின்றாள். அருந்ததிக்கு ஈசனும், பிராட்டியும் அருள் செய்தனர். மதுரையிலேயே தங்கி, தன் மகளுடன் நல்லாட்சி செய்ய வேண்டுமென காஞ்சன மாலை இறைவனிடம் வேண்டிக் கொண்டாள். இறைவனும் அந்தக் கோரிக்கையை ஏற்றார். மீனாட்சியுடன் இணைந்து மதுரை நகரை அரசாள முடிவெடுத்தார். ●

## நடன தரிசனம்!

திருவான்மியூர் மருந்தீஸ்வரர் கோயில் சிவலிங்கம் பால் நிறமான சுயம்பு மூர்த்தம். வால்மீகி ரிஷி வழிபட்ட இத்தலத்தில் அவரது உற்சவத் திருமேனி உள்ளது. மேலைக் கோபுர வாயிலில் பவுர்ணமி தோறும் வால்மீகி முனிவருக்கு தியாகராஜர் நடன தரிசனம் கொடுக்கின்றார் என்பது ஐதீகம்.

# பைரவர் யாருடைய அம்சம்?

பைரவர், வீரபத்திரர், க்ஷேத்ர பாலர் ஆகிய மூவரும் சிவபெருமானுடைய அம்சம் தான். தீய அரக்கர்களை அழித்தபோது பைரவராகவும், தட்சனின் யாகத்தை அழித்தபோது வீரபத்திரராகவும், திருத்தலங்களைக் காக்கும் நிலையில் க்ஷேத்ர பாலராகவும் போற்றப்படுகிறார். புராண அடிப்படையில் இன்னும் எவ்வளவோ விஷயங்கள் இருக்கின்றன. வில்வம், செம்பருத்தி, தவிர்த்த மற்ற மலர்களை பைரவருக்கு பயன்படுத்தலாம். சம்பா சாதம், உளுத்தம்பருப்பு கலந்த தயிர்சாதம், அப்பம், மிளகுவடை ஆகியவை இவருக்குரிய நைவேத்யம். எதிரிகளுக்குப் பயம் தந்து தன்னை அண்டியவர்களுக்கு அருள் செய்வதால் இவருக்குப் பைரவர் என்று பெயர். துன்பங்களும், துயரங்களும் வாழ்க்கையில் தொடர்கதையாகிப் போனால் வாழ்க்கை என்பதை வாழப் பிடிக்காமல் மனம் ஏங்கும். அப்படி சோகத்தின் விளிம்பில் இருப்பவர்களுக்கு ஆறுதல் கூறி அவர்களுக்கு நம்பிக்கை ஊட்டும் அமுத மொழியாக பைரவர் வழிபாடு கூறப்படுகிறது. கடவுள் வழிபாடு செய்துவிட்டு அதற்கான பலன்களை எதிர்பார்க்கும் பக்தர்களுக்கு உடனடி நிவாரணம் தரும் கடவுளாக பைரவர் விளங்குகின்றார்.



### பயம் நீங்க யாரை வழிபட வேண்டும்?


வாழ்க்கையில் சந்திக்கும் துன்பங்களால் ஏற்படும் பயம் நீங்க, பைரவரை வழிபட வேண்டும். சீர்காழி திருத்தலத்தில் அருளும் சட்டநாதரும், திருவெண்காடு தலத்தில் அருளும் அகோரமூர்த்தியும் பைரவ அம்சம் என்பார்கள். ஞாயிற்றுக்கிழமைகளில் இந்தத் தலங்களுக்குச் சென்று, இந்த தெய்வங்களைத் தரிசித்து வழிபட, அல்லல்கள் நீங்கும். காளஹஸ்தி கோயிலில் இரண்டு பைரவர்களைத் தரிசிக்கலாம். அவர்களில் ஒருவர், பாதாள பைரவர். கட்டுமானப் பணிகள் துவங்குவதற்கு முன்னதாக இந்த பைரவர்களை வழிபட, பணிகள் தடையின்றித் தொடரும் என்பது நம்பிக்கை. பழநி மலை அடிவாரத்தில் இந்தியாவிலேயே மிக உயரமான விஜய பைரவர் எழுந்தருளியுள்ளார். இவர் சகல தோஷங்களையும் நிவர்த்தி செய்யும் மூர்த்தி ஆவார். சேலம் சிருங்கேரி மடத்தில் பாரதி தீர்த்த சுவாமிகளால் யந்திர ஸ்தாபிதம் செய்யப் பட்ட பைரவர் சன்னதி உள்ளது. ஆபத்துத்தாரண மூர்த்தியாக அருளும் இவர் சாந்நித்தியம் மிகுந்தவர். மேலும், இங்குள்ள காசி விசாலாட்சி சமேத காசி விஸ்வநாதர் திருக்கோயிலில் அருளும் கால பைரவரைத் தரிசித்து வழிபடுவதும் விசேஷம்!

சென்னை - திருவான்மியூர் மருந்தீஸ்வரர் கோயிலில் ஏழு பைரவர் சன்னதிகள் உள்ளன. தேய்பிறை அஷ்டமி நாட்களில் பைரவருக்கு வடைமாலை சாற்றி, மனதார வழிபட, தீயசக்திகளால் ஏற்படும் துன்பங்கள் நீங்கும்; சத்ரு பயம் அகலும்; எடுத்த காரியங்களில் வெற்றி கிட்டும். ●

---

### சிவதீட்சை பெறுவது எப்படி? அதற்குரிய தகுதி என்ன?

தீட்சை என்றால் அறியாமையைப் போக்கி நல்லறிவைத் தருவது என்று பொருள். இன்பமாய் வாழ்வதற்கு அடிப்படைக் காரணமே நல்ல அறிவு தான். ஆனால், தீய பழக்க வழக்கம் கொண்டவர்கள், தீமை புரிபவர்கள் பயத்துடன் வாழ வேண்டியுள்ளது. இவர்களுக்கு இறையருளும் கிட்டாது. இவர்கள் இப்படி செய்வதற்குக் காரணம் அறியாமைதான். படிப்பினாலோ, வயதினாலோ, செல்வத்தினாலோ இந்த அறியாமை இருளைப் போக்க இயலாது. நல்ல குருநாதரிடம் உபதேசம் பெற்று இறைவழிபாடு செய்பவர்களுக்கு மாத்திரமே அறியாமை நீங்கி, நல்லறிவும் இறையருளும் கிடைக்கும். இதற்குப் பெயர் தான் தீட்சை பெறுதல். தீய பழக்கங்களை விடுதல், தீய செயல்களைச் செய்யாதிருத்தல் ஆகியன தீட்சை பெறுவதற்கு அடிப்படைத் தகுதிகள். நிலையான இன்பமும் முழுமையான இறையருளும் நமக்குக் கிடைக்க வேண்டும் என்ற எண்ணமே மேலான தகுதி.



# சர்வ மங்களம் தரும் சாயுஜ்ய லிங்கம்!

லிங்கரூபமாய் எழுந்தருளியிருக்கும் முழுமுதல் இறைவன், சில திருத்தலங்களில் வித்தியாசமாகவும் திகழ்கிறார். பிருங்கி முனிவர் வண்டு வடிவம் எடுத்து சிவபெருமானை வழிபட்டார். அதன் அடிப்படையில் வண்டு துளைத்த குறியுடனுள்ள சிவலிங்கத்தை திருநல்லூரில் காணலாம். நீடூர் திருத்தலத்தில் நண்டு ஒன்றும் அருள்சோமநாதரை வழிபட்டதால், இங்குள்ள சிவலிங்கத்தின் உச்சியில் நண்டு நுழையும் அளவிற்கு துளை உள்ளது. குடவாசல் தலத்தில் அமைந்துள்ள ஸ்ரீகோணேசுவரரை கருடன் வழிபட்டார் அப்படி வழிபட்ட போது கருடனுடைய கால்சுவடுகள் லிங்கத்தின் மீது படிந்தது. அந்த அடையாளத்தை இன்றும் தரிசிக்கலாம். கும்பகோணத்திற்கு அருகிலுள்ள திருந்துதேவன்குடி தலத்தில் குதிரையும் வண்டும் ஈசனை வழிபட்டு முக்தி அடைந்தன. அவற்றின் காலடிச் சுவடுகள் லிங்கத்தில் பதிந்திருப்பதைக் காணலாம். திருக்கொண்டீஸ்வரம் தலத்தில் சுயம்புலிங்கமாக பசுபதீஸ்வரர் அருள்புரிகிறார். இந்த லிங்கத்தை பசு வழிபட்டதால், பசுவின் கொம்பால் ஏற்பட்ட பிளவு காணப்படுகிறது. திருக்கடையூர் அமிர்தகடேஸ்வரர் லிங்கத் திருமேனியில், எமனின் பாசக்கயிறு பட்டதால் ஏற்பட்ட தழும்பு உள்ளது. ராமேஸ்வரத்தில் அருள்புரியும் ராமநாதர் லிங்கத்தை அனுமன் தன் வாலால் கட்டி இழுத்ததால், அனுமனின் வால்பட்ட தழும்பு லிங்கத்தில் பதிந்திருக்கிறது. இதே போல் ஆந்திர மாநிலம் ராமகிரியில் உள்ள சிவன் கோவிலில் அருள்புரியும் லிங்கத்திலும் அனுமனின் வால்பட்ட தழும்பு உள்ளது.

திருவிஜயமங்கைத் திருத்தலத்தில் உள்ள ஸ்ரீவிஜயநாதேஸ்வரர் லிங்கத்தில் அர்ஜுனனின் அம்புபட்ட தழும்பு உள்ளதைக் காணலாம். வித்தியாசமான லிங்கங்கள் சில திருத்தலங்களில் காணப்படுவதுபோல புனிதமான நீரில் நனையும் சிவலிங்கங்களும் உள்ளன. ஸ்ரீரங்கம் அருகிலுள்ள திருவானைக்கா ஆலயத்தில் அருள்புரியும் ஜம்புகேஸ்வரர் லிங்கத்தைச் சுற்றி எப்பொழுதும் தண்ணீர் ஊறிக்கொண்டேயிருக்கும். லிங்கம் தண்ணீரில் மூழ்கி மறையாமலிருக்க நீரை அடிக்கடி முகந்து வெளியேற்றிக் கொண்டிருப்பார்கள். இந்த சிவ லிங்கத்தை கருவறையின் மேற்குப் பகுதியில் உள்ள சாளரத்தின் வழியாகத்தான் தரிசிப்பார்கள். சீர்காழி திருக்காளமுடையார் கோவிலிலும் லிங்கம் தண்ணீரில் மூழ்கியிருப்பதைக் காணலாம். திருவேடகம் திருத்தலத்தில் மூலவர் லிங்கத்தின் முடியிலுள்ள பள்ளத்திலிருந்து தண்ணீர் ஊறி வெளிவந்து கொண்டிருக்கும். தஞ்சை பெரிய கோவில் மூலவர் பெரிய திருவுருவில் அருள்புரிகிறார். கருவறையைச் சுற்றி சந்திரகாந்தக் கற்கள் அமைந்திருப்பதால், கோடைக்காலத்தில் கருவறையின் உட்சுவர்களில் நீர்த் துளிகள் படிந்து, சிவலிங்கம் குளிர்ச்சியாக இருக்கும். மேலும், பெரிய கோயிலிலுள்ள சிவகங்கைத் தீர்த்த குளத்தின் நடுவில் ஒரு லிங்கம் அமைந்துள்ளது. இந்த லிங்கம் தீர்த்தக்குளத்தில் மூழ்கியே இருக்கும். கடுமையான கோடைக்காலத்தில் நீர் வற்றும்போது மட்டும் லிங்கத்தை தரிசிக்கலாம்.

கங்கைகொண்ட சோழபுரத்தில் அமைந்துள்ள கருவறையில் மேல்தளம் சந்திரகாந்தக் கற்களால் அமைந்துள்ளதால், எப்பொழுதும் சொட்டுச் சொட்டாக நீர்த்துளிகள் சிவலிங்கத்தின்மீது விழுந்த வண்ணம் உள்ளது. திருச்செங்கோடு அர்த்தநாரீஸ்

வரர் மூலவரின் திருவடியில் தேவதீர்த்த நீர் எப்போதும் சுரந்து கொண்டிருக்கும். இந்த நீர் பிரசாதமாக பக்தர்களுக்கு வழங்கப்படுகிறது. சிவலிங்கங்களில் பலவிதங்கள் உள்ளது போல், பாணப்பகுதியில் பட்டைகள் அமைந்துள்ள சிவலிங்கங்களையும் சில திருத்தலங்களில் தரிசிக்கலாம். அவை தாராலிங்கம் என்று கூறப்படுகின்றன. காஞ்சி கைலாசநாதர் கோவில், மாமல்லபுரத்தில் உள்ள கற்கோவில்கள், தென்னாற்காடு மாவட்டம் பனைமலையில் உள்ள சிவன் கோயில், பொன்பரப்பி சிவன் கோயில், திருப்பட்டூர் பிரம்மபுரீஸ்வரர் கோயில் போன்ற ஆலயங்களின் வளாகத்திலும் தாராலிங்கங்கள் உள்ளன. தாராலிங்கங்கள் ஐந்து வகைப்படும் என்று சிற்ப சாஸ்திரம் கூறுகிறது. 4,8,16,32,64 என்ற விகிதத்தில் பட்டைகள் அதாவது தாரைகள் அமைத்திருப்பார்கள். நான்கு பட்டைகள் கொண்ட லிங்கங்களை வேதலிங்கம் என்று போற்றுவர், சக்கரப்பள்ளி என்ற பாடல் பெற்ற திருத்தலத்தில் மூலவர் நான்கு பட்டை லிங்கமாகத் திகழ்கிறார் கோவை காரமடை ஸ்ரீரங்கநாதர் ஆலயத்தில் நாற்பட்டை லிங்கமாகத் திகழ்கிறார். பொதுவாக, நான்கு பட்டைகள் கொண்ட லிங்கத்தை சர்வதோபத்ர தாரா லிங்கம் என்பர்.

எண் பட்டைகளைக் கொண்ட அஷ்டதாரா லிங்கம் காஞ்சி கைலாசநாதர் கோயிலிலும் காணப் படுகிறது. இதன் எட்டுப் பட்டைகளும் நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா ஆகியவற்றைக் குறிக்கும் என்பர். மேலும் எட்டு பைரவ சக்திகளையும், இறைவனின் அஷ்ட வீரச் செயல்களையும் குறிப்பன என்பர் சிதம்பரம் நவலிங்க சந்நிதியிலும் எட்டு திசைலிங்கங்கள் உள்ளன. இவை அஷ்டதாரா லிங்கங்களாகும். பதினாறு பட்டைகள் உடைய லிங்கம் சோடச தாராலிங்கம் எனப்படும். இந்த லிங்கத்தை சந்திரகலா லிங்கம் என்றும் சொல்வர். இவ்வகை லிங்கங்கள் குளிர்ச்சியான கல்லில் உருவானவையாகும். பெரும்பாலும் சந்திரக் காந்தக் கல்லில் உருவானதாக இருக்கும். சிதம்பரம் நவலிங்க சந்நிதியின் மையத்திலும், பழையாறை மேற்றளியிலும், பொன்பரப்பி தலத்திலும் திருப்பட்டூர் பிரம்மபுரீஸ்வரர் கோயில் வளாகத்தில் உள்ள கோயிலிலும் சோடச தாராலிங்கம் உள்ளது. முப்பத்திரண்டு பட்டைகளுடன் காட்சி தரும் லிங்கத்தை தர்மதாரா லிங்கம் என்பர். காஞ்சியம் பதியில் 32 பட்டைகள் கொண்ட லிங்கத்தை தரிசக்கலாம்.64 பட்டைகளுடன் திகழும் அபூர்வ லிங்கத் திருவுரு கலைகள், சிவபெருமானின் 64 லீலா விநோதங்கள், 64 யோகியர்களைக் குறிக்கும் என்பர். இவ்வகை லிங்கத்தை காஞ்சியம்பதியில் தரிசிக்கலாம். மேலும் அறுபத்து நான்கு பட்டைகள் கொண்ட லிங்கம் பைரவரையும் குறிப்பதாக ஆகமங்கள் கூறுகின்றன. பொதுவாக தாரா லிங்கங்களை வழிபடுவதால், இறைவனின் பூரண அருள் கிட்டுவதுடன் சிவபதம் கிட்டும் என்றும் சொல்வர். எனவே இதை சாயுஜ்ய லிங்கம் என்றும் போற்றுவர். இந்தத் தாராலிங்கத்தின் மேல் தாராபாத்திரம் மூலமாக அபிஷேகம் செய்யும்போது, அபிஷேக நீர் தாரைகளின் வழியே பிரிந்து செல்லும் காட்சியை தரிசிப்பதால் பரம்பொருளின் முழுமையான அருளைப் பெற்று வளமுடன் வாழலாம் என்பர். •

## லிங்க வடிவில் சிவனை வழிபடுவது ஏன்?



லிங்கம் என்றால், உருவமற்ற அருவ வடிவிலான பொருளின் அடையாளம் எனப் பொருள். கை, கால் போன்ற எந்த உருவ அமைப்பும் இல்லாமல் அருவ வடிவில் பிரகாசிக்கும் சிவனின் அடையாளமே லிங்கமாகும். இவ்வுலகில் பெயர் மற்றும் உருவத்துடன் தோன்றும் அனைத்தும், இறுதியில் பிரளய காலத்தில் அதனதன் பெயர் மற்றும் உருவம் மறைந்து அருவமாக இறைவனிடத்தில் (லிங்கத்துக்குள்) அடங்குகிறது என்னும் சிறப்பும் லிங்கத்துக்கு உண்டு. ஒவ்வொரு மாதமும் அமாவாசைக்கு முதல் நாள் கிருஷ்ணபட்ச சதுர்த்தசியன்று சிவராத்திரி எனப்படும். மாக (மாசி) மாதத்தில் நிகழும் இந்த நாள் மகா சிவராத்திரி எனப்படும். இந்த மகா சிவராத்திரி நாளன்று நள்ளிரவு நேரத்தில் சிவலிங்கத்தின் வடிவத்தில் சிவன் தோன்றினார் என்கின்றன ஆகம சாஸ்திரங்கள். இவரே லிங்கோத்பவ மூர்த்தி என்றும் அழைக்கப்படுகிறார். அந்த நாள் முதல் சிவனை பக்தர்கள் லிங்க வடிவில் பூஜிக்க ஆரம்பித்தார்கள்.

# புழக்கத்தில் உள்ள சில பழமொழிகளும், விளக்கங்களும்!

பல நூற்றாண்டுக்கு முன்பிருந்தே தமிழில் பழமொழிகள் வழங்கி வருவதாக குறிப்பிடுகின்றனர். மக்கள் தங்களுக்குத் தோன்றும் கருத்துகளை எளிதாகவும், சுருக்கமாகவும் கூறியவைதான் பழமொழிகள். அவ்வாறு புழக்கத்தில் உள்ள சில பழமொழிகளும், விளக்கங்களும்...

### பசி வந்திட பத்தும் பறந்து போகும்

அறிவுடைமை, இன்சொல், ஈகை, தவம், காதல், தானம், தொழில், கல்வி, குலப்பெருமை, மானம் ஆகிய பத்து குணங்களும் பசி என்று வந்து விட்டால் பறந்து போகும் என்பது உண்மை. இந்தப் பத்தும் இளகியிருந்தால் பகைவன் வீட்டிலும் சாப்பிடலாம் என்பது மற்றொரு பழமொழி. அதை சித்த வைத்தியர்கள் பத்து மிளகு இருந்தால் பகைவன் வீட்டிலும் சாப்பிடலாம் என மிளகின் பெருமைகளை விளக்கும் சொல்லாக மாற்றி விட்டனர்.

### சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும்

இந்தப் பழமொழியின் உண்மையான விளக்கத்தை வாரியார் அவர்கள், குழந்தை பாக்கியம் இல்லாதவர்கள் கந்தர் சஷ்டியில் விரதம் இருந்தால் கருப்பையில் குழந்தை உருவாகும் என்று கூறுகிறார்.

### பெண் புத்தி பின் புத்தி

நெற்றிக்கண் எனும் ஞானக்கண், முதன் முதலில் பார்வதிதேவிக்குத்தான் இருந்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. பார்வதிதேவி சிவ பெருமானுடன் சேர்ந்தபோது, தன் ஞானம் எனும் மூன்றாம் கண்ணை சிவபெருமானுக்குக் கொடுத்து விட்டார் என்றும், சிவபெருமான் பார்வதிதேவியின் நெற்றிக் கண்ணை நினைவுகூரும் வகையில் செந்நிறத் திலகமிட்டார் என்றும் கூறப்பட்டுள்ளது. இதன் விளைவாகவே இன்றும் திருமணங்களில் மணப்பெண்ணுக்கு நெற்றியில் திலகம் இடப்படு கின்றது. அப்படி திலகம் பார்வதிதேவியின் நெற்றியில் இடப்படுவதற்கு முன், சிவபெருமான் தன்னை முழுமையாக பார்வதிதேவியின் கையில் கொடுத்து விட்டார். இதை நினைவுகூரும் வகையில் இன்றும் திருமணங்களில் பெண்ணின் கையில் முக் கண்ணுடைய தேங்காய் கொடுக்கப்பட்டு திலகம் இடப்படுகின்றது. ஞானத்தை புத்தி என்றும் கூறுவர். ஞானமாகிய புத்தியை சிவபெருமானுக்கு பார்வதி தேவி தன் மூன்றாம் கண்ணாக அன்பின் வழியாகக் கொடுத்து, அவரின் பின்னால் சக்தியாகத் தாங்கி நிற்கின்றாள். அக்னி எனும் ஞானத்தை சிவபெருமா னுக்குக் கொடுத்து அவரின் பின்னால் இருந்து புத்தியாக – சக்தியாக இருந்து செயல்படுகின்றார். இதுவே பெண்புத்தி பின்புத்தி என்று சொல்லப்படு கின்றது, பெண் சகோதரியாக இருந்தாலும் மனைவியாக இருந்தாலும், சக்தியைக் கொடுத்துப் பாதுகாக்கின்றாள். பெண் எனும் சகோதரி, முருகன் கை வேல் போன்று காப்பவள், மனைவி எனும் பெண் ஆனந்தம், கருணை, அன்பு எனும் நித்யானந்த நிலைக்கு நம்மை வழி நடத்துபவள்.

### ஆறிலும் சாவு; நூறிலும் சாவு

மகாபாரதத்தில் கர்ணன் ஐந்து பாண்டவர்க ளோடு ஆறாவதாகப் பிறந்திருந்தாலும் அவனுக்கு சாவு தான்; நூறு கௌரவர்களோடு இருந்திருந்தாலும் கர்ணனுக்கு சாவு தான்; எனவே சாவு என்பது நாம் நிச்சயிக்க முடியாத ஒன்று. விதிப்படியே நடக்கும். இதைத் தான் ஆறிலும் சாவு, நூறிலும் சாவு என்று முன்னோர்கள் கூறுகிறார்கள்.

### பந்திக்கு முந்து படைக்கு பிந்து

வீரம் விளைந்த பூமி என்று போற்றப்படும் நமது பூமியில் வீரர்களை படைக்கு பிந்து என்று கூறியிருக்க மாட்டார்கள். பந்தி (விருந்தினர்கள்) என்று வந்தால், அவர்களுக்கு முந்திக் கொண்டு உணவு பரிமாற வேண்டும். விருந்து படைக்கிறவர்கள், விருந்தினர்கள் சாப்பிட்ட பின்பே (பிந்து) சாப்பிட வேண்டும் என்பதே இதன் உண்மையான அர்த்தம். இதுவே பேச்சுவழக்கில் பந்திக்கு முந்து படைக்கு பிந்து என்று மாறிவிட்டது.

### குருவிக்குத் தக்கன ராமேஸ்வரம்

நம்முடைய தகுதிக்கும், வசதிக்கும் தகுந்தது தான் கிடைக்கும் என்ற அர்த்தத்தில் இந்த பழமொழி

உபயோகப்படுத்தப்படுகிறது. அதென்ன குருவிக்கு தக்கன ராமேஸ்வரம், குருவிக்கும் ராமேஸ்வரத்துக்கும் என்ன சம்பந்தம். குறி வைக்கத் தப்பாது ராமசரம் என்பதே உண்மையான பழமொழி. ராமனின் அம்பு (ராமசரம்) குறி வைத்துவிட்டால் தப்பாது இலக்கை அடையும் என்பதே இதன் அர்த்தம். இதுவே நாளடைவில் பேச்சுவழக்கில் குருவிக்கு தக்கன ராமேஸ்வரம் என்று கூறப்படுகிறது.

### சோழியன் குடுமி சும்மா ஆடாது!

சோழியன் என்பது பிராமண குலத்தில் ஒரு பிரிவு. பொதுவாக பிராமணர்கள் தலைக்குப் பின்பக்கம் அடர்த்தியாக குடுமி வைத்திருப்பர். ஆனால் சோழியன் பிரிவைச் சேர்ந்தவர்கள் மட்டும் மலையாள நம்பூதிரிகளைப் போல தலையின் முன்பக்கத்தில் முடியும் வண்ணம் முன் குடுமி வைத்திருப்பார்கள். சோழியர்களின் குடுமி தலையின் முன்பக்கத்திலேயே அடர்த்தியாக முடியப்பட்டாலும் அது சும்மாட்டுக்கு இணையாக ஆக முடியாது. அதாவது சும்மாடு என்பது சுமை தூக்குபவர்கள் தலையில் துணியைச் சுருட்டி வசதிக்காக வைத்துக் கொள்வது. முன்குடுமி எவ்வளவு கட்டையாக இருந்தாலும் சும்மாடாகாது. அவர்களும் சுமை தூக்கும் போது சும்மாடு வைக்கத்தான் வேண்டும். சோழியன் குடுமி சும்மாடு ஆகாது என்பது தான் உண்மையான பழமொழி. இதுவே தற்போது சோழியன் குடுமி சும்மா ஆடாது என உச்சரிக்கப்படுகிறது.

### கல்லைக் கண்டால் நாயைக் காணோம்; நாயைக் கண்டால் கல்லைக் காணோம்

பைரவரின் வாகனமாக நாயைப் பார்க்கும் போது, அதை இறைவனின் அம்சமாக நினைத்து வணங்க வேண்டும். நாயின் வடிவத்தில் இருக்கும் கற்சிலையை பார்க்கும் போது அதை நாய் என்று நினைத்தால் நாயாகவும், வெறும் கல் என்று நினைத்தால் கல்லாகவே தெரியும். ஒரு பொருளின் அல்லது ஒரு விஷயத்தின் அழகும் பெருமையும் காண்பவர்களின் பார்வையைப் பொருத்தே உள்ளது என்பதே இதன் உண்மையான அர்த்தம். ஆனால் இப்போது நாயைக் கண்டால் கல்லைக் கொண்டு எறிய வேண்டும் என்பது போல் இந்தப் பழமொழி அமைந்து விட்டது.

### தென்னை மரத்தில் தேள் கொட்டினால் பனை மரத்தில் நெறி கட்டும்!

தென்னை மரத்தில் தேள் கொட்டினால் தென்னைக்குத் தானே நெறி கட்ட வேண்டும்? பனைமரத்துக்கும் இதற்கும் என்ன சம்பந்தம் என யோசிக்கிறீர்களா. இந்தப் பழமொழியை அப்படியே படித்தால் அர்த்தம் சரியாக இருக்காது. எங்கோ ஒரு செயல் நடந்தால், அதன் விளைவு வேறு எங்கோ தெரியும் என்றுதான் நமக்குப் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் இதன் உள்ளர்த்தம் வேறு. தென்னை மரத்தில் ஏறுபவர்கள் பூச்சிக்கடிகளால் பாதிப்பு வராமலிருக்க ஒருவிதமான எண்ணெய் அல்லது சாந்தை உடலில் பூசிக்கொண்டு மரமேறு வார்கள். அப்படி ஏறும்போது மரத்தில் இருக்கும் தேள் கொட்டினால், அவர்களுக்கு அந்த எண்ணெயின் மருத்துவ குணத்தால் வலி தெரியாது! ஆனால் தேளின் விஷம் தோலினுள் ஊடுருவி இருந்தால், சிறிது நேரத்துக்குப் பிறகு கொட்டிய இடத்தில் நெறிகட்டிக் கொள்ளும். அதை பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் மற்றொரு மரத்தில் ஏறும்போது தான் அதன் உண்மையான வலி தெரியும். அதன் பின் மருத்துவ சிகிச்சை எடுப்பர். தென்னை மரத்தில் ஏறும் போது தேள் கொட்டினால் பனை மரத்தில் ஏறும் போது நெறிகட்டும் என்ற உண்மையான பழமொழியே இப்போது தென்னை மரத்தில் தேள் கொட்டினால் பனை மரத்தில் நெறிகட்டும் என்று கூறப்படுகிறது.

### கல்லானாலும் கணவன்; புல்லானாலும் புருஷன்

இந்தப் பழமொழியைப் படிக்கும் போது ஒரு பெண் தன் கணவனை கல்லுக்கும், புல்லுக்கும் ஒப்பிடுவது போல் உள்ளது. ஆனால் கள்வன் ஆனாலும் கணவன்; புலையன் (தீயவன்) ஆனாலும் புருஷன் என்பதுதான் உண்மையான பழமொழி. தனக்கு வாய்த்த கணவன், தீயபழக்கங்கள் மற்றும் தீயசேர்க்கையினால் கள்வனாகவும், தீயவனாகவும் இருந்தாலும் அவனை ஒதுக்கிவிடாமல் தன் அன்பினால் அவனைத் திருத்த வேண்டும் என்று அறிவுரை கூறுவதே இந்தப் பழமொழி. பெண்ணுக்கு பெருமை சேர்ப்பது போல் உள்ள இந்தப் பழமொழியே நாளடைவில் இப்படி மாறிவிட்டது.

### மாமியார் உடைத்தால் மண் குடம்; மருமகள் உடைத்தால் பொன் குடம்

ஒரே தவறை மாமியார் செய்யும் போது அது பெரிதாகக் கருதப்படுவதில்லை. ஆனால், வீட்டுக்கு வந்த மருமகள் அதே தவறைச் செய்துவிட்டால்,

அதை மாமியார் பெரிதுபடுத்திவிடுகிறார் என்பது தான் இதன் அர்த்தம். ஆனால் மாமியார் உழைத்தால் மண்ணுக்கு உரம்-மருமகளும் உழைத்தால் பொன்னுக்கு உரம் என்பது தான் உண்மையான பழமொழி. விவசாயிகள் வீட்டில் ஆண், பெண், குழந்தைகள் என அத்தனை பேரும் தங்கள் விளை நிலத்தில் உழைக்கின்றனர். இதில் ஆணுக்கு இணையாக பெண்கள் ஈடுபடும் போது வெளி மனிதர்களுக்குக் கொடுக்கும் கூலி மிச்சமாகிறது. அதோடு ஒற்றுமையின் விளைவாக உழைப்பினவ பலன் பெருகுகிறது. மாமியார் தங்கள் குடும்ப நிலத்தில் உழைத்தால், அது மண்ணுக்கு உரம். அதாவது அந்த வீட்டுத் தலைவனின் கரங்களைப் பலப்படுத்துவதின் மூலம் அவர்கள் சொந்த மண்ணுக்கு உரமாகும். வீட்டுக்கு வந்த மருமகளும் சேர்ந்து உழைத்தால் மண் பொன்னாகும். பொன்னுக்கே உரம் என்றார்கள். இவ்வளவு அருமையான கருத்துடைய பழமொழியே நாளடைவில் மாமியார்களைப் பற்றி ஒரு தவறான கருத்தைக் கூறுவது போல் அமைந்து விட்டது.

## அடி உதவுகிறார் போல் அண்ணன் தம்பி உதவமாட்டான்

இங்கு அடி என்பது நிலத்தடியைக் குறிக்கிறது. அந்தக் காலத்தில் பொதுவாக மாதம் மும்மாரி பொழிந்த காலம். ஆறு, குளம், ஏரி என்று எப்போதும் நிறைந்திருக்கும். உறவுகள் உன்னைக் காப்பாற்று வார்கள் என்று நம்பி சோம்பலாக இருக்காதே! நிலத்தை நம்பு, உன் உழைப்பை நம்பு என்பதை விளக்கும் இந்தப் பழமொழியே இப்போது தலைகீழாக மாறி விட்டது.

## ஆதாயம் இல்லாத செட்டி ஆற்றோடு போவானா?

பொதுவாக நகரத்தார் சிக்கனவாதிகள் என்று சொல்லப்படுவதுண்டு. பெரும்பாலும் வணிகத்தில் ஈடுபட்டிருக்கும் இவர்கள் தான் தான தர்மத்திலும் சிறந்து விளங்குகிறார்கள். இன்றைக்கு இருக்கும் கல்வி மற்றும் சமூக அறக்கட்டளைகளில் கணிசமானவை நகரத்தார்களின் நன்கொடையில் விளைந்தது. அந்தக் காலத்திலிருந்தே பல வகையான தான, தர்மங்கள் செய்து வந்தனர் நகரத்தார்கள். தானங்களில் சிறந்தது பசு தானம். எந்த ஒரு மங்கல நிகழ்ச்சி நடந்தாலும், பசுவைத் தானம் கொடுப்பது தலையாய தானமாய்க் கருதப்படுகிறது. அதற்குக் காரணம் எந்த வித பலனும் எதிர்பாராமல் தன் பாலை மக்களுக்குக் கொடையாக வழங்குவது பசு. அத்தகைய கொடை தரும் பசுவைக் கொடையாகத் தருவது புண்ணியம்தானே!.

ஆ-தானம் அதாவது பசு தானம் செய்வது வழக்கம். நகரத்தார்(செட்டியார்) எவரும் ஆ தானம் செய்யாது போனால், தன் வாழ்வில் செய்யத் தவறினால், அவன் தன் கடமையை ஆற்றாது போகிறான் என்பதாக வந்தது. ஆ தானம் செய்யாத செட்டி ஆற்றாது போகிறான் என்ற நகரத்தாரின் குணத்தைப் போற்றிய உண்மையான பழமொழி நாளடைவில் திரிந்து ஆதாயம் இல்லாத செட்டி ஆற்றோடு போவானா என்று தவறுதலாக பேச்சு வழக்கில் கூறப்பட்டு வருகிறது. ●

---

# மதுரை மீனாட்சி கோயிலில் எப்போது தரிசிக்கலாம்!



தினமும் காலை 5 மணிக்கு அம்மன் சன்னதி வாசலில் சித்தி விநாயகர், முருகனுக்கு பூஜை செய்யப்படும். காலை 5.10 மணிக்கு பள்ளியறையில் உள்ள சுவாமி, அம்மனுக்கு பூஜை செய்தவுடன், காலை 5.15 மணிக்கு, மூலஸ்தானத்தில் தீபாராதனை காட்டி, திரை விலக்கப்படும். காலை 5.30 மணிக்கு பள்ளியறையிலிருந்து சுவாமி, தனது சன்னதிக்கு புறப்படுவார். அங்கு காலை 5.45 மணிக்கு பூஜைகள் செய்து, திரை விலக்கப்படும். பின், பரிவார தெய்வங்களுக்கு பூஜை செய்யப்படும். காலை 6.30 மணிக்கு அம்மன் சன்னதியில் அபிஷேகத்திற்காக திரை போடப்படும். காலை 6.45 மணிக்கு திரை விலக்கப்பட்டு, தீபாராதனை நடக்கும். மீண்டும் திரை போடப்பட்டு காலசந்தி பூஜை நடத்தப்படும். பின் காலை 7.15 மணிக்கு திரை விலக்கப்பட்டவுடன், காலை 10.30 மணி வரை அம்மனை தரிசிக்கலாம். சுவாமி சன்னதியிலும் இதேமுறை பின்பற்றப்படுகிறது. மீண்டும் காலை 10.30 மணிக்கு திரை போடப்பட்டு அபிஷேகம் நடத்தப்படும். காலை 10.45 மணிக்கு திரை விலக்கப்பட்டு, தீபாராதனை காட்டி, மீண்டும் திரை போடப்படும். காலை 11.15 மணிக்கு திரை விலக்கப்பட்டவுடன் அலங்கார கோலத்தில் மதியம் 12.30மணி வரை அம்மனையும், சுவாமியையும் தரிசிக்கலாம். பின் நடை சாத்தப்படும். பக்தர்களின் வசதிக்காக, மாலை 3.45 மணிக்கு பூஜை செய்து, 4 மணிக்கு திரை விலக்கப்படும். இரவு 7.30 மணி வரை தரிசனம் செய்யலாம். இரவு 7.30 மணிக்கு அர்த்தசாம பூஜைக்காக திரை போடப்பட்டு, இரவு 8 மணிக்கு விலக்கப்படும். அப்போது அம்மனை வெள்ளை பட்டுபுடவை அல்லது காட்டன் புடவையில் இரவு 9.15 மணி வரை தரிசிக்கலாம். பின், பள்ளியறை பூஜை நடக்கும். விசேஷ நாட்களில் பூஜை நேரம் மாறுதலுக்குட்பட்டது.




# காசி- ராமேஸ்வரம் யாத்திரை செல்வது எப்படி?

இந்துவாக பிறந்த ஒவ்வொருவரது ஆசையும் வாழ் நாளில் ஒருதடவையாவது காசியாத்திரை செல்வது தான். காசியாத்திரை என்பது காசிக்கு மட்டும் செல்வது கிடையாது. காசியுடன் ராமேஸ்வரமும் செல்வது தான். அப்படியானால் காசி-ராமேஸ்வரம் யாத்திரை செல்வது எப்படி? என்பதை காண்போம்:

காசி யாத்திரை செல்ல விரும்புபவர்கள் முதலில் ராமேஸ்வரம் சென்று அங்குள்ள அக்னி தீர்த்தமாகிய கடலில் நீராடி ஈர உடையுடன் கடலில் மூன்று தடவை மூழ்கி எழ வேண்டும். ஒவ்வொரு தடவை மூழ்கும் போதும் ஒவ்வொரு பிடி மணல் எடுக்க வேண்டும். முதல் தடவை மூழ்கி எடுக்கும் மணலை சேது மாதவ என்று கூறி லிங்கமாக பிடித்தும், இரண்டாவது தடவை மூழ்கி எடுக்கும் மணலை பிந்து மாதவ என்று கூறி லிங்கமாக பிடித்தும், மூன்றாவது தடவை மூழ்கி எடுக்கும் மணலை வேணு மாதவ என்று கூறி லிங்கமாக பிடித்தும், கரையில் வைக்க வேண்டும். பின்னர் மூன்று லிங்கத்திற்கும் விபூதி சந்தனம் குங்குமம் இட்டு, வில்வ இலை போட்டு ஓம் நம சிவாய என்ற பஞ்சாட்சர மந்திரம் கூறி வாழைப்பழம் வெற்றிலை பாக்கு நைவேத்தியம் வைத்து, பின் சூட தீபாராதனை காட்டி கும்பிட வேண்டும். பின் சேது மாதவ லிங்கத்தை மட்டும் எடுத்து பத்திரமாக நாம் வைத்து கொள்ள வேண்டும்.

பிந்து மாதவ மற்றும் வேணு மாதவ லிங்கம் இரண்டையும் கடலில் போட்டு விட வேண்டும். அதன் பின் ராமநாதர் கோயிலுக்குள் உள்ள 22 தீர்த்தங்களில் (1. மகாலட்சுமி தீர்த்தம் : செல்வவளம், 2. சாவித்திரி தீர்த்தம்: பேச்சுத்திறன், 3. காயத்ரி தீர்த்தம்: உலகத்துக்கே நன்மை 4. சரஸ்வதி தீர்த்தம்: கல்வி அபிவிருத்தி, 5. சங்கு தீர்த்தம்: வாழ்க்கை வசதி அதிகரிப்பு, 6. சக்கர தீர்த்தம்: மனஉறுதி பெறுதல் 7. சேது மாதவ தீர்த்தம்: தடைபட்ட பணிகள் சுலபமாக முடிதல். 8. நள தீர்த்தம், 9. நீல தீர்த்தம், 10. கவய தீர்த்தம், 11. கவாட்ச தீர்த்தம், 12. கந்தமாதன தீர்த்தம்: எத்துறையிலும் வல்லுனர் ஆகுதல். 13. பிரம்மஹத்தி விமோசன தீர்த்தம், 14. கங்கா தீர்த்தம், 15. யமுனை தீர்த்தம், 16. கயா தீர்த்தம், 17. சர்வ தீர்த்தம்: எப்பிறவியிலும் செய்த பாவங்கள் நீங்குதல் 18. சிவ தீர்த்தம்: சகல பீடைகளும் ஒழிதல் 19. சத்யாமிர்த தீர்த்தம்: ஆயுள் விருத்தி 20. சந்திர தீர்த்தம்: கலையார்வம் பெருகுதல் 21. சூரிய தீர்த்தம்: முதன்மை ஸ்தானம் அடைதல் 22. கோடி தீர்த்தம்: முக்தி (மறுபிறவி இல்லாத நிலை) நீராடி விட்டு கோடி தீர்த்தத்தை மட்டும் ஒரு கேனில் வாங்கி வைத்துக்கொள்ள வேண்டும்.

அதன் பின் ஈர உடையை மாற்றி கொண்டு ராமநாதர் மற்றும் பர்வதவர்த்தினி அம்மனுக்கு மாலை



சாற்றி அர்ச்சனை செய்ய வேண்டும். பின் இறைவனை வழிபட்டு காசிக்கு கிளம்ப வேண்டும். உடனே காசிக்கு செல்ல இயலாதவர்கள் தம்முடன் வைத்திருக்கும் சேது மாதவ லிங்கத்தையும், கோடி தீர்த்தத்தையும் பூஜை அறையில் வைத்து காசி செல்லும் வரை பூஜை செய்ய வேண்டும். காசி செல்லும் போது மறக்காமல் சேது மாதவ லிங்கத்தையும், கோடி தீர்த்தத்தையும் எடுத்து செல்ல வேண்டும். காசி செல்பவர்கள் முதலில் அலகாபாத் சென்று அங்கு சேது மாதவ லிங்கத்தை திரிவேணி சங்கமத்தில் இட வேண்டும். பின் அங்கிருந்து ஒரு கேனில் தீர்த்தம் எடுத்து கொள்ள வேண்டும். பின் காசி சென்று அங்குள்ள விஸ்வநாதருக்கு ராமேஸ்வரத்தில் இருந்து எடுத்து சென்ற கோடி தீர்த்தத்தால் அபிஷேகம் செய்து வணங்க வேண்டும். பின்னர் தங்களுக்கு பிடித்த ஏதாவது ஒரு உணவு பொருளை விட்டு விட வேண்டும். பின்னர் கயா சென்று அங்கு நமது இறந்த மூதாதையருக்கு பித்ருக்கடன் செய்தும், மோட்ச தீபம் ஏற்றியும் வழிபட வேண்டும். இதனால் இறந்த மூதாதையரின் பரிபூரண ஆசி நமக்கும் நமது சந்ததியினருக்கும் கிடைக்கும்.

அதன் பின் ராமேஸ்வரம் வர வேண்டும். உடனே ராமேஸ்வரம் வர இயலாதவர்கள் 15 நாட்களுக்குள் ராமேஸ்வரம் செல்ல வேண்டும். அது வரை அலகாபாத்தில் எடுத்த தீர்த்தத்தை பூஜை அறையில் வைத்து வணங்க வேண்டும். ராமேஸ்வரம் செல்லும் போது அலகாபாத்தில் எடுத்த தீர்த்தத்தை ராமேஸ்வரம் ராமநாதருக்கு அபிஷேகம் செய்து வழிபட்டு காசி ராமேஸ்வர யாத்திரையை நிறைவு செய்ய வேண்டும. இப்படி செய்தால் தான் காசி ராமேஸ்வர யாத்திரையின் முழுபலனும் கிடைக்கும். •

## சிவனை பித்தா என்றழைத்தது ஏன்?



தேவார மூவரில் ஒருவரான சுந்தரர் தாம் அருளிய திருமுறையின் முதல் பாடலாக, பித்தா! பிறைசூடி பெருமானே என்று இறைவனைப் பித்தன் என்கிறார். என்னதான் தம்பிரன் தோழர் என்றாலும், அவர் இறைவனை அப்படி அழைத்தது சரியா? இப்படி ஒரு கேள்வி மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் முன்னிலையில் எழுந்தபோது, பித்தன் பெயர்க் காரணத்தை நகைச்சுவை இழையோட, அவர் ஒரு பாடலின் மூலம் அழகாக விளக்கினார்.

அந்தப் பாடல்:


*அளவறு பிழைகள் பொறுத்தருள் நின்னை*
*அணியுருப் பாதியில் வைத்தான்*
*தளர்பிழை மூன்றே பொறுப்பவள்தன்னை*
*சடைமுடி வைத்தனன் அதனால்*
*பிளவியல் மதியம் சூடிய பெருமான்*
*பித்தன் என்றொரு பெயர் பெற்றான்*

அம்பிகையிடம் சொல்வது போல் அமைந்த இந்தப் பாடலின் பொருள்: தாயே! அளவற்ற பிழைகள் பொறுக்கும் உன்னைத் தன் திரு உருவில் பாதியாக வைத்தான். ஆனால், தவறித் தன்னில் விழுந்த ஒருவனை மூன்று முறையே பொறுக்கும் கங்கை யைத் தன் தலைமேல் வைத்து ஆடுகிறான். அதனால் தான். பிளந்தது போன்ற இளம் சந்திரனைச் சூடிய பெருமான் பித்தன் என்பதாக ஒரு பெயர் பெற்றான்!

கணமங்கலம் என்னும் ஊர் சோழவள நாட்டின் செழிப்பிற்கு இலக்கணமாய் அமைந்துள்ள வளம் பொருந்திய தலங்களிலே ஒன்றாகும் ! நீர்வளமும், நிலவளமும், இறைவளமும் ஒருங்கே அமையப் பெற்ற தலத்திலே தாயனார் என்னும் சிவனடியார் அவதாரம் செய்தார். இவர் வேளாண் மரபைச் சேர்ந்தவர். சிவனடியார்களிடத்துப் பேரன்பு மிக்க இத்தொண்டர், இறைவனுக்குச் சம்பா அரிசியின் அமுதும், செங்கீரையையும், மாவடுவையும் நிவேதனப் பொருட்களாகத் தினந்தோறும் தவறாமல் அளித்து வந்தார். தாயனார் கோவிலுக்குச் செய்துவந்த திருப்பணிகள் பலவற்றுள் இதை ஒரு முக்கியத் திருப் பணியாகக் கொண்டிருந்தார். இவரது மனைவியும் இவரைப் போலவே இறைவனிடம் பக்தி கொண்டிருந் தாள். கணவனும் மனைவியும் தெய்வப் பணியை மட்டுமே வாழ்க்கையில் முக்கியமாகக் கொண்டிருந்த னர் ! இவ்வாறு இறைவனுக்குத் தவறாமல் பணிபுரியும் இவ்வன்பர்களுக்கு ஒரு சமயம் வறுமை ஏற்பட்டது. வறுமையைக் கண்டு அடியார் சற்றும் மனம் தளர வில்லை. தாம் செய்துவரும் தெய்வத் திருப்பணியை மட்டும் எப்பொழுதும் போல் தவறாது செய்து வந்தார். வறுமை நாளுக்கு நாள் அதிகமாயிற்று. அந்த நிலையிலும் அடியார் சற்றுகூட மனம் தளரவில்லை. கூலி ஆட்களை வைத்து வேலை வாங்கிய நாயனார் கூலிக்கு நெல் அறுக்கும் பணியில் இறங்கலானார். கூலி வேலை செய்து கிடைக்கும் நெல்லில் செந்நெல்லைக் கோயில் நைவேத்தியத்துக்கும், கார்நெல்லை தம் உணவிற்கும் வைத்துக் கொள்வார். இங்ஙனம் வறுமையையும் ஒரு பொருமையாக எண்ணி வாழ்ந்துவரும் நாளில் இவருக்கு இறைவனின் சோதனை ஏற்பட்டது. தொண்டர்க்குக் கிடைத்த கூலி முழுவதும் செந்நெல்லாகவே கிடைத்தது. நாயனாருக்குப் பெருமிதம் தாங்க வில்லை. செந்நெல் முழுவதையுமே கோயிலுக்கு வழங்கினார். இதனால் இவரது குடும்பத்திற்கு அரிசி இல்லாமற் போனது. அடியார் கீரையைப் பக்குவம் செய்து சாப்பிடத் தொடங்கினார். நாளடைவில் கீரைக்கும் பஞ்சம் வந்தது. அந்த சமயத்தில் அடியார் தண்ணீரைக் குடித்துக் குடித்து வயிற்றை நிரப்பிக் கொண்டார். இறைவனுக்கு திருவமுது படைப்பதற் காகவாவது நல்ல செந்நெல் கிடைக்கிறதே என்ற மனக்களிப்போடு தமது கடமையைத் தவறாது நடத்தி வந்தார் அடியார். ஒருநாள் நாயனார் இறைவனுக்கு திருவமுது படைப்பதற்கான செந்நெல், கீரை, மாவடு ஆகியவற்றை ஓர் கூடையில் சுமந்துக்கொண்டு புறப்பட்டார். பசியால் ஏற்பட்ட சோர்வு அவரை மிகவும் வருத்தியது.

அடியாருடன் அவரது மனைவியும் பஞ்ச கவ்வியம் எடுத்துக்கொண்டு நடக்க முடியாமல் சென்று கொண்டிருந்தாள். நாயனார் பசியினால் நிலத்தில் விழப்போனார். அம்மையார் தாங்கிக் கொண்டார். கூடையில் சுமந்து வந்த நிவேதனப் பொருள்கள் கீழே விழுந்து சிதறின. நாயனார் மனம் கலங்கினார். திருவமுது தரையில் வீழ்ந்த பின்னர் திருக்கோயிலுக்கு சென்றுதான் என்ன பயன்? என்று எண்ணித் துடித்தார். அடியார் உலகத்தில் உயிர் வாழவே விரும்பவில்லை. தம்மிடம் இருந்த அரிவாளால் கழுத்தை அரிந்துகொள்ள துணிந்தார். அவரது பக்தியின் ஆவேசத்தைக் கண்டு உடன்வந்த மனைவியார் செய்வதறியாது திகைத்தாள். அவள்


# அரிவாள் தாய நாயனார்



கழுத்தில் கிடக்கும் மாங்கல்யத்தை எடுத்துக் கண்ணில் ஒற்றியவாறு இறைவனை வணங்கி நின்றாள். அடியாரின் அன்பிற்கும், பக்திக்கும் கட்டுப் பட்ட அம்பலத்தரசன் தொண்டரைத் தடுத்தாட் கொண்டார். திருவமுது சிந்திய நிலவெடிப்பிலிருந்து உருத்திராக்ஷமாலையும், திருவெண்ணீரும் அணியப் பெற்ற திருக்கரம் ஒன்று வெளிப்பட்டது. அத்திருக் கரம் நாயனாரின் கையைப் பற்றியது. இறைவனின் ஸ்பரிசத்திலே மெய் உருகி நின்றார் நாயனார். அவர் கை நின்றும் அரிவாள் தானாக நழுவியது. நிலத்தில் இருந்து வெடுக் வெடுக் என்று ஒலி கேட்டது. அவ் வொலியைக் கேட்ட நாயனார் தான் நிலத்தில் கொட்டிய மாவடுவை எம்பெருமான் ஏற்றுக்கொண்டார் என்பதற்கு அறிகுறியாகத்தான் இவ் வோசை கேட்கிறது என்று உணர்ந்து அகமகிழ்ந்தார். நினைத்த மாத்திரத்திலேயே எழுந்தருளி அடியார்கள் துயர் துடைக்கும் இறைவனின் திருவருட் கருணையை எண்ணி எண்ணி மனம் உருகிய நாயனாரும் அவர் மனைவியாரும் நிலத்தில் வீழ்ந்து வணங்கி எழுந்தனர். அடியவரை ஆட்கொண்ட இறைவன் சக்தி சமேதராய்த் தம்பதியர்க்குப் பேரானந்த காட்சி அளித்தார். இறைவன் நாயனாருக்கும் அவர் தம் மனைவியாருக்கும் என்றென்றும் தம் அருகிலேயே இருந்து மகிழ்ந்து வாழும் பேரின்பப் பேற்றினை அருளினார். அரிவாளால் தம் கழுத்தை அரியத் துணிந்தமையால் இவருக்கு தாயனார் என்ற நாமத்துடன் அரிவாள் தாய நாயனார் என்னும் சிறப்பு திருநாமம் ஏற்பட்டது. அரிவாள் தாய நாயனாரும் அவரது மனைவியாரும் உலகில் நெடுங்காலம் வாழ்ந்து, இறைவனுக்குப் பற்பல அரிய திருப்பணி களைச் செய்தனர். இருவரும் பிறவாப் பெருவாழ்வு பெற்று இறைவனின் திருவடி நிழலிலே ஒன்றினர்! ●

# சிவ பக்திக்கு அர்த்தம் தெரியுமா உங்களுக்கு?

ஸ்ரீஹர தத்தர் என்பவர், வைஷ்ணவ குடும்பத்தில் பிறந்து, சிறந்த சிவபக்தராக விளங்கியவர். ஒரு நாள், காவிரி கரையில் அமர்ந்து, தியானம் செய்து கொண்டிருந்தார் ஹரதத்தர். அந்த சமயம், ஒரு வேடனும், அவனது மனைவியும் பேசிக் கொண்டது, இவர் காதில் விழுந்தது. அவ்விருவரும் காவிரியை கடந்து, அக்கரைக்கு செல்ல வேண்டியவர்கள். ஆற்றில் தண்ணீர் குறைவாகவே இருந்ததால், ஆற்றில் இறங்கி நடந்தே, அக்கரை சேர்ந்து விடலாம் என்றாள் மனைவி. அதற்கு அவள் கணவன், அப்படி செய்யக் கூடாது. கங்கையை காட்டிலும், காவிரி புனிதமானது. அதனடியில் உள்ள ஒவ்வொரு மணலும், ஒவ்வொரு சிவலிங்கம் என்று பெரியோர் சொல்வர். நாம், கர்ம வசத்தால் இந்த குலத்தில் பிறந்துள்ளோம். கரையிலிருந்தபடியே, ஒரு பாத்திரத்தில் ஜலத்தை எடுத்து, காவிரி ஸ்நானம் செய்து விடலாம். இந்த கர்ம சரீரத்துடன், காவிரியில் இறங்கி, சிவலிங்கங்களை மிதிக்க வேண்டாம். கொஞ்ச தூரம் சென்றால், மூங்கில் பாலம் வரும். அதன் வழியாக அக்கரை சேரலாம்... என்றான்.



அவனது பக்தியும், ஞானமும் ஹரதத்தரை கவர்ந்ததால், அவன் அருகில் சென்று, அவனை வணங்கி நின்றார். உடன் அவன் பதறிப் போய், சுவாமிகளே... நீங்கள், என்னை வணங்கலாமா, என்னை தொடலாமா, இதனால், எனக்கல்லவோ பாவம் வந்து சேரும்... என்றான். அதற்கு ஹரதத்தர், அய்யனே... உன்னை போல சிவபக்தியும், ஞானமும் கொண்ட எவரையும், நான் பார்த்ததில்லை. காவிரியின் மகிமையையும், அதிலுள்ள மணல் ஒவ்வொன்றையும் சிவலிங்கமாக கருதும் எண்ணம் கொண்டவர்கள், உன்னைத் தவிர வேறு யாரையும் நான் கண்டதில்லை. வேத சாஸ்திரங்களில் கரை கண்டவர்கள் என்று சொல்லிக் கொள்வோரிடம் கூட, உன்னுடைய இந்த மனோபாவம் இருந்ததில்லை. நீயல்லவோ உண்மையில் சிவ தத்துவமறிந்தவன்... என்று புகழ்ந்து பாராட்டினர். இது, சிவலிங்கம்; இது கல்; இது மண்; என்ற பேதமின்றி, சர்வத்தையும் சிவமாக பாவிக்கும் எண்ணமே, சிறந்த சிவபக்திக்கு அடையாளம். இப்படிப்பட்ட எண்ணம் எல்லாருக்கும் வந்து விடுமா? இதற்கு, மனம் பக்குவப்பட வேண்டும். பக்குவமில்லாத மனதில் பக்தி ஏற்படாது. எதிலும், பகவானை காணும் மனோபாவம் இருந்தால், நாளடைவில், மனம் பக்குவப்படும். ●

# திருவையாறு ஐயாறப்பன் திருக்கோவில்

தேவாரப்பாடல் பெற்ற திருத்தலம்

மூலவர் : ஐயாறப்பன், அம்மன்/தாயார் : தரும சம்வர்த்தினி, தீர்த்தம் : சூரிய புஷ்கரணி தீர்த்தம் பழமை : 1000-2000 வருடங்களுக்கு முன், மாவட்டம் : தஞ்சாவூர், மாநிலம் : தமிழ்நாடு

பாடியவர் : சம்பந்தர், தேவாரப்பாடல் பெற்ற காவிரி வடகரைத் தலங்களில் இது 51 வது தலம்.

திருவிழா : மகா சிவராத்திரி

தல சிறப்பு : இங்கு சிவன் சுயம்பு மூர்த்தியாக அருள்பாலிக்கிறார். கோயிலின் வெளிப்பிரகாரத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் நின்றுகொண்டு ஐயாறப்பா என உரக்க கொடுத்தால் ஏழு முறை திருப்பிக் கேட்கிறது. அந்த அளவிற்கு இந்த கோயிலில் கட்டடக்கலை அமைந்துள்ளது. வெளி நாட்டில் உள்ள இன்ஜினியர்கள் இந்த சப்தம் கேட்பது பற்றி ஆய்வு செய்தனர். ஆனால், இதற்கான காரணத்தை அறிய முடிய வில்லை.

கோயில் என்றாலே சுவாமி சன்னதியை சுற்றுவது முக்கியமான அம்சம். ஆனால், திருவையாறு ஐயாறப்பன் கோயிலில் சுவாமி சன்னதியை சுற்றக் கூடாது என்ற தடை உள்ளது. சிவனின் தேவாரப் பாடல் பெற்ற 274 சிவாலயங்களில் இது 51வது தேவாரத்தலம் ஆகும். அம்மனின் 51 சக்தி பீடங்களில் இது தர்ம சக்தி பீடம் ஆகும். சிவனுக்கு வடைமாலை: ஆஞ்சநேயருக்கு வடைமாலை சாத்துவார்கள். ஆனால் ஈசுவரனுக்கு ஒரு கோயிலில் வடைமாலை சாத்துகிறார்கள். இத்தலத்தில் தெற்கு கோபுர வாயிலில் வீற்றிருக்கும் ஆட்கொண்டேஸ்வரருக்கு வடைமாலை சாத்தும் வழக்கம் இன்றும் நடை பெறுகிறது. சிலசமயங்களில் லட்சம் வடைகளைக் கொண்ட மாலைகள்கூட சாற்றப்படுவதுண்டு.


இங்குள்ள தியான மண்டபம் கட்டப்பட்ட விதம் அபூர்வமானது. சுண்ணாம்பு மற்றும் கருப்பட்டி கலந்து இது கட்டப்பட்டது. இந்த பொருட்களை சேகரித்து வைக்க மிகப்பெரிய குழிகள் தோண்டப் பட்டிருந்தன. இதைக் கட்டியவர்களுக்கு தங்கமும் வெள்ளியும் கூலியாகத் தரப்பட்டதாம். இவற்றையும் இரண்டு குழிகள் தோண்டி போட்டுவைத்திருந்தனர். ஒருவர் தன்னால் முடிந்த அளவு இவற்றை அள்ளிச் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தது. இந்த நான்கு குழிகளும் இப்போதும் உள்ளன.


திருமணத்தடை, குழந்தை பாக்கியம், கல்வி யில் சிறந்து விளங்க இறைவனை பிரார்த்திக்கலாம்.

சுவாமி, அம்பாளுக்கு அபிஷேகம் செய்தும், வஸ்திரம் அணிவித்தும், நேர்த்திக்கடன் நிறை வேற்றலாம்.

தலபெருமை: இங்கே அம்பாள் அறம் வளர்த்த நாயகி எனப்படுகிறாள். ஆண்கள் தர்மம் செய்வதை விட குடும்பத்தில் உள்ள பெண்கள் தர்மம் செய்தால் இரட்டிப்பு பலன் கிடைக்கும் என்பது நம்பிக்கை. அந்த அடிப்படையில் உலக உயிர்களுக்கெல்லாம் படியளக்கும் நாயகியாக, பெண்களுக்கு தர்மத்தின் அவசியத்தை எடுத்துக்காட்டும் விதத்தில் தருமசம்வர்த்தினி என்ற பெயரில் அம்பாள் இங்கே எழுந்தருளி உள்ளாள். எல்லா நாட்களும் நல்ல நாட்களே என்பதை வலியுறுத்தும் வகையில் அஷ்டமி திதியில் இரவு நேரத்தில் அம்பாளுக்கு திருக்கல்யாணம் நடத்தப்படுகிறது.

இவ்வூர் இறைவனுக்கு அர்ச்சகர் ஒருவர் பூஜை செய்து வந்தார். ஒருமுறை காசிக்கு சென்றதால் அவரால் பூஜைக்கு உரிய நேரத்தில் வரமுடிய வில்லை. இந்த தகவல் அவ்வூர் அரசனுக்கு சென்றது. அவன் உடனடியாக கோயிலுக்கு வந்து பார்த்தபோது சம்பந்தப்பட்ட அர்ச்சகர் பூஜை செய்து கொண்டிருந் தார். மறுநாள் காசிக்கு சென்ற அர்ச்சகர் ஊரிலிருந்து திரும்பினார். ஊராரும் அரசனும் ஆச்சரியப்பட்டனர். இறைவன் இந்த அர்ச்சகர் மீது கொண்ட அன்பால் அர்ச்சகரின் வடிவில் வந்து, தனக்குத்தானே அபிஷேகம் செய்து கொண்டது தெரிய வந்தது. தன்னை வணங்குபவர்களுக்கு அன்பு செய்பவர் ஐயாறப்பர். அப்பர் பெருமான் இத்தலத்தில் வழிபட்டு கைலாய காட்சியை பெற்றார். எனவே இத்தலத்தில் வணங்கினால் கைலாயத்திற்கே சென்றதாக ஐதீகம். மானசரோவர் ஏரியில் மூழ்கிய அப்பர் பெருமான் இந்த திருத்தலத்தில் உள்ள குளத்தில் வந்து எழுந்தார்.





சூரிய புஷ்கரணி தீர்த்தம் எனப்படும் இந்த குளம் மிகவும் விசேஷமானது. இங்கே அம்பாள் மகாவிஷ்ணுவின் அம்சமாக கருதப்படுகிறாள். எனவே திருவையாறு எல்லைக் குட்பட்ட இடங்களில் பெருமாளுக்கு கோயில்களே கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது.


சன்னதி சுற்ற தடை: இங்கே மூலவர் சுயம்புவாக எழுந்தருளி உள்ளார். அவரது ஜடாமுடி கருவறையின் பின்பக்கமும் பரந்து விரிந்து கிடப்பதாக ஐதீகம். சிவபெருமானின் ஜடா முடியை மிதிக்கக்கூடாது என்பதால் சன்னதியை சுற்ற தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஆமையை மிதித்த தெட்சிணாமூர்த்தி: சுவாமி பிரகாரத்தில் உள்ள தெட்சிணாமூர்த்தி மிகவும் விசேஷமானவர். இவரை பெருமாள் வழிபட்டிருக்கிறார். பெருமாள் வழிபட்ட குரு தமிழகத்திலேயே இங்கு மட்டும்தான் உள்ளார். எனவே இவருக்கு ஹரிஉரு சிவயோக தெட்சிணாமூர்த்தி' என பெயர். இவர் முயலகனுக்கு பதிலாக ஆமையை மிதித்துள்ளது குறிப்பிடத்தக்கது. தட்சிணாமூர்த்தி மேல் நோக்கிய வலது கரத்தில் கபாலமும், கீழ் நோக்கிய வலது கரத்தில் சின்முத்திரையும், மேல் நோக்கிய இடது கரத்தில் சூலமும், கீழ் நோக்கிய இடது கரத்தில் சிவஞான போதமும் காணப்படுகின்றன.

நவக்கிரகங்களில் இது சூரிய ஸ்தலமாகும். சூரியபகவான் இத்தலத்தில் பூஜித்துள்ளார். இக்கோயில் ஐந்து பிரகாரங்களை கொண்டது. இங்குள்ள முக்தி மண்டபத்தில் அமர்ந்து தியானம் செய்தால் மனம் நிம்மதி கிடைக்கிறது. சூரியன் இந்த கோயிலில் மேற்கு திசை நோக்கி உள்ளார்.

தல வரலாறு: நந்தீஸ்வரருக்கும், நந்திகேசருக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை தெரிந்து கொள்ள வேண்டும். நந்தீஸ்வரர் சிவபெருமானின் முன் காளை வடிவில் இருப்பவர். நந்திகேசர் திருக்கைலாய பரம்பரையை உருவாக்கியவர். தருமபுரம் ஆதீனம், திருவாவடுதுறை ஆதீனம் ஆகியவை திருக்கைலாய பரம்பரையை சேர்ந்தவை. சிலாது மகரிஷி என்பவரின் மகனாக அவதரித்தவர் நந்திகேசர். பிறக்கும் போது இந்த குழந்தைக்கு நான்கு கைகள் இருந்தன. அவர் ஒரு பெட்டியில் இந்த குழந்தையை வைத்துவிட்டு மூடி திறந்தார். அப்போது குழந்தையின் இரண்டு கைகள் நீங்கி அழகான குழந்தையாக விளங்கியது. குழந்தையை திருவையாறு தலத்தில் விட்டு சென்றார். பரமேஸ்வரன் அந்த குழந்தைக்கு ஐந்து விதமான அபிஷேகம் செய்தார். அம்பிகையின் பால், நந்தி வாய் நுரை நீர், அமிர்தம், சைவ தீர்த்தம், சூரிய புஷ்கரணி தீர்த்தம் ஆகியவற்றால் அபிஷேகம் செய்தார். இந்த காரணத்தால் இறைவன் ஐயாறப்பர் எனப்பட்டார். •


## கோயிலில் பலி பீடத்தை தொட்டுக் கும்பிடலாமா?



**கோ**யிலில் கோபுர வாசலுக்கும், கொடி மரத்திற்கும் இடையில் உள்ள மேடைக்கு பலிபீடம் என்று பெயர். நித்யபூஜையின் முடிவில், பலிபீடத்தில் கோயிலிலுள்ள அனைத்து தெய்வங்களுக்கும், அன்னம் (சாதம்) வைப்பர். இதை பலி போடுதல் என்பர். இதனை தெய்வங்கள் சாப்பிட்டுச் செல்வதாக ஐதீகம். வழிபாட்டின் போது, பலிபீடத்தை தொட்டுக் கும்பிடுவதோ, உரசிச் செல்வதோ கூடாது. இன்னும் சொல்லப்போனால், பலிபீடம் நம் மீது பட்டு விட்டாலே ஒருமுறை குளிக்க வேண்டும் என்கிறது ஆகமங்கள்.

## திருச்செந்தூர் தேர்








# பழனி பங்குனி உத்திரம்


















# பழனி பங்குனி உத்திரம்

தமிழகத்தில் உள்ள மலைக்கோவில்களில் பழநி முருகன் கோவிலும் ஒன்று. பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி கோவில் திண்டுக்கல் மாவட்டத்தில் அமைந்துள்ளது. முருகனுக்கு உரிய அறுபடை வீடுகளில் மூன்றாம் படை வீடு பழநி ஆகும்.

கோவில் அமைந்திருக்கும் மலையின் உயரம் 150 மீ. மொத்தம் 693 படிக்கட்டுகள் ஏறினால் கோவிலை அடைந்துவிடலாம். மலையைச் சுற்றி 2.4 கி.மீ கிரிவலப் பாதை உள்ளது.

தல வரலாறு: இந்தக் கோவிலின் வரலாறு ஞானப்பழத்தில் இருந்து ஆரம்பிக்கிறது. கலகம் பண்ணுவதற்கென்றே பிறந்தவர் நாரதர். ஞானப்பழத்தை எடுத்துக்கொண்டு கைலாச மலையில் இருக்கும் சிவபெருமானையும் பார்வதியையும் காண சென்றார். பழத்தை கொடுத்து இந்தப் பழத்தை உண்டால் அதிக ஞானம் பெறலாம் என்று கூறினார். மேலும் முழுப்பழத்தையும் ஒருவரே உண்ண வேண்டும் என்றும் விதி விதித்தார். சிவ பெருமானோ தன் மகன்களான முருகனுக்கும், பிள்ளையாருக்கும் பகிர்ந்தளிக்க விரும்பினார்.

பின்னர் தன் மகன்கள் இருவரையும் அழைத்து உலகத்தை மூன்று முறை சுற்றி முதலில் வருபருக்கு ஞானப்பழம் பரிசு என்றார் சிவபெருமான். இதனைக் கேட்டு முருகன் தன் வாகனமான மயிலை எடுத்துக்கொண்டு உலகத்தை சுற்ற கிளம்ப, பிள்ளையாரோ தந்தையும் தாயுமே உலகம் என்று கூறி சிவபெருமானையும் பார்வதியையும் சுற்றி வந்து ஞானப்பழத்தை பெற்றுக்கொண்டார். உலகத்தை வலம் வந்து ஞானப்பழத்தை கேட்ட முருகன், நடந்தது அறிந்து, கோபமுற்று இந்த மலையில் வந்து தங்கிவிட்டார்.

சிவனும் பார்வதியும் இங்கு வந்து முருகனை சமாதானபடுத்தினர். ஞானப்பழமான உனக்கு எதற்கு இன்னொரு பழம் என்று கூறி சமாதானம் செய்தனர். முருகனை "பழம் நீ" என்றதால் இந்த இடம் பழநி என பெயர் பெற்றது. மலை அடிவாரத்தில் திருஆவினன் குடி குழந்தை வேலாயுதசுவாமி கோவிலும் உள்ளது. இந்தக் கோவிலே அறுபடை வீடுகளில் மூன்றாவதாக் கருதப்படுவது.

அமைவிடம்: இதற்கும் ஒரு கதை உண்டு. அகஸ்திய மாமுனிவர் தன் இருப்பிடத்திற்கு சிவகிரி, சக்திகிரி என்னும் இரண்டு மலைகளை எடுத்துச் செல்ல விரும்பினார். தன் சேவகனான இடும்பனிடம் இந்த மலைகளை தூக்கி வரச்சொன்னார். அவனும் காவடி போல் இரண்டு மலைகளையும் கம்பில் கட்டி தோளில் சுமந்து சென்றான். செல்லும் வழியில் தூக்கமுடியாமல் சோர்வுற்று மலையைக் கீழே வைத்தான். அச்சமயம் பார்த்து முருகன் ஞானப்பழம் கிடைக்காத கோபத்தில் சிவகிரி மலையின் மீது ஏற,

இடும்பனால் மலையை தூக்க முடியவில்லை. கோபமுற்ற முருகன் இடும்பனை அழிக்க, இடும்பன் இறந்தான்.

பின்னர் இடும்பனை தன் பக்தனாக ஏற்றுக் கொண்டான் முருகன். இடும்பனைப் போல் காவடி சுமந்து தன்னை வழிபடுவருக்கு சகல சௌபாக்கி யங்களும் உண்டாகும் என வரமளித்தான். இன்றும் மலை ஏறும் வழியில் இடும்பனுக்கு கோவில் உண்டு.

மூலவர் சிறப்பம் : இங்கு இருக்கும் மூலவர் சிலை பதினெட்டு சித்தர்களுள் ஒருவரான போகர் என்பவ ரால் உருவாக்கப்பட்டது. 4448 அறிய மூலிகைகளை கொண்டு இவர் ஒன்பது விதமான நஞ்சு பொருட்களை உருவாக்கினார். பின்னர் இந்த ஒன்பது விதமான நஞ்சு பொருட்களை கலந்து நவபாஷானம் என்னும் மூலிகையை உருவாக்கினார். பல்வேறு நோய்களுக்கு இந்த மூலிகையை பயன்படுத்தலாம் என்றும் கண்டறிந்தார். அப்படி சிறப்பு வாய்ந்த நவபாஷாணத்தைக் கொண்டு முருகன் சிலையை அவர் உருவாக்கினார். அவர் உருவாக்கிய அந்த சிலையே தற்போது பழநி முருகனாக நமக்கு காட்சியளிக்கிறது. பஞ்சாமிர்தத்தாலும், பாலாலும் அபிஷேகம் செய்தால் மருந்து வெளிவரும் என்பதை உணர்ந்து, தினமும் சிலைக்கு அபிஷேகம் செய்து வழிபட்டு வந்தார் போகர். தன்னுடையே சமாதியை போகர் பழநி கோவிலிலேயே அமைத்துக்கொண்டார்.

முருகனின் சிலை நவபாஷாணத்தால், சித்தர்க ளில் ஒருவரான போகரால் வடிவமைக்கப்பட்டது. நவபாஷாணம் எனப்படுவது ஒன்பது வகையான நச்சுப்பொருட்கள் சேர்ந்தது. இந்த நவபாஷாண சிலை மீன்களை போன்று செதில்களை கொண்டதாக கூறப்படுகிறது. தற்பொழுது இந்த சிலை சிறிது பழுதுபட்டுள்ளது. இரவில் இந்த சிலையின் மீது முழுவதுமாக சந்தனம் பூசப்பட்டு (சந்தனக்காப்பு) காலையில் விசுவரூப தரிசனம் செய்யும் அனைத்து பக்தர்களுக்கும் சிறு வில்லை பிரசாதமாக வழங்கப் படுகிறது இது மிகச்சிறந்த மருந்தாக கருதப்படுகிறது.

சிறப்புகள்: கையில் கோலுடன் ஆண்டியை காட்சியளிக்கும் முருகன் சிலை நமக்கு உணர்த்துவது யாதென்றால் ''அனைத்தையும் துறந்தால் கடவுளை அடையலாம்'' என்பதாகும்.

பெரும்பாலும் தமிழக கோவில்களில் மூலவர் சிலை கிழக்கு பார்த்தே அமைந்திருக்கும். ஆனால் இங்கு வடக்கு பார்த்து அமைந்துள்ளது. இதற்கு காரணம் சேர மன்னர்கள் வடக்கு திசையில் ஆதிக்கம் செலுத்தியதே!

பூஜைகள் மற்றும் விழாக்கள்: தினசரி இங்கு ஆறு கால பூஜைகள் நடைபெறுகிறது. விழாக்களை பொறுத்த வரையில் தைப்பூசம், பங்குனி உத்திரம், வைகாசி விசாகம், ஆடி கிருத்திகை, கந்த சஷ்டி விழா ஆகிய விழாக்கள் இங்கு சிறப்பாக கொண்டாடப் படும்.

பங்குனி உத்தரம் என்பது சைவக் கடவுளாகிய முருகனுக்குரிய சிறப்பு விரத தினமாகக் கொண்டாடப் படுகிறது. இது பங்குனி மாதத்தில் வரும் உத்தர நட்சத்திர தினமாகும். தமிழ் மாதங்களில் 12ம் மாதம் பங்குனி. நட்சத்திரங்களில் 12ம் நட்சத்திரம் உத்தரம். எனவே 12 கை வேலவனுக்குச் சிறப்பான தினமாகக் கொண்டாடப்படுகிறது. அநேகமான முருகன் கோயில் களில் இத்தினத்தில் வருடாந்த திருவிழாக்கள் (மஹோற்சவம்) நடைபெறும்.

அறுபடை வீடுகளில் மூன்றாம் படைவீடான திருவாவினன்குடி அமைந்து இருக்கும் பழனியில் பங்குனி மாதம் உத்தரம் நட்சத்திர திதியில் நடைபெறும் விழா பங்குனி உத்தரம் ஆகும். அனைத்து அறுபடைவீடுகளில் பங்குனி உத்தரம் விழா நடைபெற்றாலும், பழனியில் நடைபெறும் பங்குனி உத்திரம் திருவிழாவும், தேரோட்டமும், சிறப்பு வாய்ந்த திருவிழாவாகும்.

பழனியில் நடைபெறும் திருவிழாக்களில் தைப்பூசத்திற்கு அடுத்தபடியாக பங்குனி உத்திர திருவிழா மிகவும் சிறப்பு வாய்ந்தது. இத்திருவிழாவில் கடுமையான கோடை வெயிலில் தகிக்கும் முருகபெருமானுக்கு இந்தியாவில் உள்ள பல்வேறு புண்ணிய நதிகளில் இருந்து தீர்த்தம் எடுத்து வந்து பக்தர்கள் முருகனுக்கு அபிஷேகம் செய்து வழிபடுவார்கள்.

திண்டுக்கல் மாவட்டமும், அதைச்சுற்றியுள்ள மாவட்டங்களிலிருந்து, சைவ சமயத்தவர்கள், ஈரோடு மாவட்டம், கொடுமுடிக்குச் சென்று காவிரி நதியில் தீர்த்தம் (புனித நீர்) கொண்டுவந்து, பழனியில் போகரால் நிறுவப்பட்ட நவபாசாண முருகனுக்கு செலுத்துவார்கள். பங்குனியில் வெயில் கடுமையாக இருக்கும், நவபாசாணத்தால் ஆன முருகன் சிலை வெப்பத்தால் சிதைந்து போகாமல் இருக்க மூலிகை கள் கலந்த காவிரி நதியின் நீரால் குளிர்விப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட திருவிழா பங்குனி உத்தரம் திருவிழா. காசி, ராமேஸ்வரம், கொடுமுடி உள்ளிட்ட பல்வேறு புண்ணிய நதிகளில் இருந்து தீர்த்தங்கள் எடுத்து கிரி வீதி வழியாக மேள தாளங்கள் முழங்க ஊர்வலமாக வந்து பின்னர் மலைக்கோவில் சென்று முருகனுக்கு தீர்த்தங்களால் அபிஷேகம் செய்து வழிபாடு நடத்துவர்.


பக்தர்கள் நேர்த்திக் கடன் செலுத்தும் பொருட்டு இங்கு தங்கத் தேர் பவனியும் தினந் தோறும் மாலை நடைபெறுகிறது. ●

# கே.பி வித்யாதரன் எழுதிய

# 2014

# ஜய வருட ராசி பலன்கள்

**14.4.2014 முதல் 13.04.2015**





## மேஷம்

மற்றவர்களை மனமுவந்து பாராட்டுவதில் வல்லவர்களே! இந்த ஜய வருடம் உங்களுக்கு 6வது ராசியில் பிறப்பதால் பயணங்களும், செலவுகளும் உங்களை துரத்தும். சிலருக்கு வேற்றுமாநிலம் அல்லது வெளி நாட்டில் வேலைக் கிடைக்கும். வருடம் பிறக்கும் போது உங்களுடைய ராசிநாதனான செவ்வாய் வக்ரமாகி நிற்பதால் அலர்ஜி, இன்பெக்ஷன், சோர்வு, களைப்பு மற்றும் அவ்வப்போது சிறுசிறு விபத்துகளும் வந்து நீங்கும். சகோதர வகையில் மனத்தாங்கல் வரும். வீடு, மனை வாங்குவது, விற்பது எதுவாக இருந்தாலும் யோசித்து முடிவெடுப்பது நல்லது.

ஜூன் 12 வரை உங்கள் யோகாதிபதியான குரு பகவான் 3ம் வீட்டில் முடங்கிக் கிடப்பதனால் காரியத் தடைகளும், உறவினர், நண்பர் பகையும் வந்துப் போகும். இளைய சகோதர வகையில் செலவுகளும், பிரிவுகளும் வந்து நீங்கும். ஜூன் 13ந் தேதி முதல் குரு 4ம் வீட்டில் சென்று அமர்வதால் ஒரளவு பணவரவு அதிகரிக்கும். ஆனால் தாயாரின் உடல் நிலை பாதிக்கும். வாகனம் அடிக்கடி பழுதாகும். உறவினர்களில் சிலர் கண்டும் காணாமல் சென்றுக் கொண்டிருப்பார்கள். பூர்வீக சொத்துப் பிரச்னை தலைத்தூக்கும். அவசரப்பட்டு நீதிமன்றம் செல்ல வேண்டாம். பங்குச் சந்தையில் பணம் போட்டு சிக்கிக் கொள்ளாதீர்கள். பேருந்து, புகை வண்டியில் படிகட்டுப் பயணத்தை தவிர்ப்பது நல்லது. சாலைகளை கடக்கும் போது அவசரம் வேண்டாம். அரசுக்கு செலுத்த வேண்டிய வரிகளில் தாமதமின்றி செலுத்தப்பாருங்கள். சுக்ரன் சாதகமாக இருப்பதால் மனைவிவழியில் உதவிகள் உண்டு. வெளிவட்டாரத்தில் புகழடைவீர்கள். உறவினர், நண்பர்கள் வீட்டு விசேஷத்தை முன்னின்று நடத்துவீர்கள். உத்யோகம், உயர்கல்வியின் பொருட்டு பிள்ளைகளைப் பிரிய வேண்டி வரும்.

ஜூன் 20ந் தேதி வரை கேது உங்கள் ராசியிலேயே நீடிப்பதால் பெரிய நோய் இருப்பதைப் போல் நினைப்பீர்கள். முன்கோபம் அதிகமாகும். உணர்ச்சி வேகத்தில் பேசி சிலரின் நட்பை இழப்பீர்கள். உறவினர்களிடம் அதிக உரிமை எடுத்துக் கொள்ள வேண்டாம். ஜூன் 21ந் தேதி முதல் உங்கள் ராசியை விட்டு கேதுபகவான் விலகுவதால் படபடப்பு, டென்ஷன் குறையும். ஆரோக்யம் அழகுக் கூடும். இதமாகப் பேசி சில காரியங்களை முடிப்பீர்கள். தோல் நோய், தலை வலி விலகும். புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவீர்கள். குலதெய்வக் கோவிலை புதுப்பிக்க உதவுவீர்கள். கௌரவப் பதவிகள் தேடி வரும்.

டிசம்பர் 15 வரை கண்டகச் சனி நடைபெறுவதாலும், ஜூன் 20 வரை ராகு சனியுடன் சம்பந்தப்பட்டிருப்பதாலும் மனைவிக்கு மாதவிடாய்க் கோளாறு, அறுவை சிகிச்சை வந்துப் போகும். வீண் சந்தேங்களாலும், ஈகோ பிரச்னையாலும் பிரியும் நிலைக்கு சிலர் தள்ளப்படுவீர்கள். சின்ன சின்ன பிரச்னைகளை பெரிதாக்காமலும், பழைய பிரச்னைகளை பேசாமலும் இருப்பது நல்லது. டிசம்பர் 15ந் தேதி வரை உங்கள் ராசியை சனி பார்ப்பதால் மறதி, மனஇறுக்கம், வீண் சந்தேகம் வந்து நீங்கும். பணம், நகை வாங்கித் தருவதில் குறுக்கே நிற்க வேண்டாம். 14.7.2014 முதல் 3.9.2014 வரை உங்கள் ராசிநாதனான செவ்வாய் சனியுடன் சேர்ந்து பலவீனமாவதால் அக்காலக்கட்டத்தில் விபத்துகள், பணயிழப்பு, ஏமாற்றங்கள் வந்துப் போகும். டிசம்பர் 16 முதல் அஷ்டமத்துச் சனி தொடங்குவதால் எதிர் வீடு, பக்கத்து வீட்டுக்காரர்களுடன் சண்டை, சச்சரவுகளை தவிர்ப்பது நல்லது.

ஐப்பசி மாதம் முதல் உங்கள் ராசிநாதன் செவ்வாய் வலுவடைவதால் அது முதல் மனதில் நிம்மதி, சகோதர வகையில் இருந்து வந்த பகை நீங்கும். சொத்துப் பிரச்னை தீரும். வீடு கட்டத் தொடங்குவீர்கள். சிலருக்கு வேலைக் கிடைக்கும். 25.9.2014 முதல் 18.10.2014 வரை சுக்ரன் வலுவிழந்து காணப்படுவதால் அக்காலக்கட்டத்தில் பல் வலி, பார்வைக் கோளாறு, ஆபரண இழப்பு, வாகன விபத்து, வாகனப் பராமரிப்புச் செலவு அதிகரிக்கும். ஆவணி, தை, மாசி மாதங்களில் பிள்ளைகளால் மகிழ்ச்சியும், நிம்மதியும் உண்டாகும். திருமணம் கூடி வரும். சிலர் வீடு கட்டி புது வீட்டிற்கு மாறுவீர்கள்.

வியாபாரத்தில் விளம்பர யுக்திகளை கையாளுவது நல்லது. பங்குதாரர்கள் அவ்வப்போது பிரச்னை தருவார்கள். வேலையாட்களிடம் ரகசியங்களை சொல்லிக் கொண்டிருக்காதீர்கள். நன்கு ஆராய்ந்து பின்னர் புதிய பங்குதாரர்களை சேர்ப்பது நல்லது. வெளிமாநில வேலையாட்களை நம்பகமான சிபாரிசு இல்லாமல் சேர்த்துக் கொள்ள வேண்டாம். ரியல் எஸ்டேட், கன்ஸ்ட்ரக்ஷன், டிராவல்ஸ், உணவு வகைகளால் ஆதாயமடைவீர்கள். அனுபவமில்லாத புதிய துறைகளில் முதலீடு செய்ய வேண்டாம். வைகாசி, ஆவணி, கார்த்திகை, தை மாதங்களில் லாபம் அதிகரிக்கும். புது ஒப்பந்தங்கள் வரும்.

உத்யோகத்தில் உயரதிகாரிகளைப் பற்றிய ரகசியங்களை சக ஊழியர்களிடம் தெரிவிக்க வேண்டாம். ஜூன் 13ந் தேதி முதல் உத்யோக ஸ்தானத்தை குரு பார்க்க இருப்பதால் சாப்ஃட்வேர் துறையில் பணியாற்றுபவர்கள் போராடி தங்கள் உத்யோகத்தை தக்க வைக்க வேண்டி வரும். இந்தாண்டு பிறக்கும் போது சனி உங்கள் யோகாதிபதி குருவின் நட்சத்திரத்தில் நிற்பதால் வெளி மாநிலம் மற்றும் அயல்நாட்டில் நல்ல வேலை வாய்ப்பு கூடி வரும்.

கலைத்துறையினரே! கடந்த வருடத்தை விட இந்தாண்டில் பரபரப்பாவீர்கள். மூத்த கலைஞர்களின் சிபாரிசு மூலம் நல்ல வாய்ப்புகள் பெறுவீர்கள். வெளியிடப்படாமல் முடங்கிக் கிடந்த உங்களின் படைப்புகள் ரிலீசாகி புகழடைவீர்கள். பழைய கடனில் ஒருபகுதியை பைசல் செய்வீர்கள்.

மாணவ மாணவிகளே! போட்டித் தேர்வுகளில் வெற்றி உண்டு. வகுப்பறையில் கடைசி வரிசையில் உட்கார வேண்டாம். சந்தேகங்களை தயங்காமல் கேளுங்கள். எதிர்பார்த்த கல்வி நிறுவனத்தில் போராடி சேர வேண்டிய சூழ்நிலை உருவாகும்.

கன்னிப் பெண்களே! உங்களின் சுகாதிபதியான சந்திரனின் நட்சத்திரத்தில் இந்தாண்டு பிறப்பதால் தள்ளிப் போன திருமணம் கூடி வரும். காதல் விவகாரத்தில் தெளிவு கிடைக்கும். உயர்கல்வியில் வெற்றி பெறுவீர்கள். எதிர்பார்த்த வேலைக் கிடைக்கும்.

கடந்தாண்டை விட நிம்மதியையும், பணவரவையும் தருவதாக அமையும்.



# ரிஷபம்

ஆக்கும் சக்தியும், அன்பால் அடக்கும் சக்தியும் மிக்கவர்களே! உங்கள் ராசிக்கு 2ம் வீட்டில் குருபகவான் வலுவாக அமர்ந்திருக்கும் போது இந்த ஜய ஆண்டு பிறப்பதால் பணவரவு அதிகரிக்கும். குடும்பத்தில் அடுத்தடுத்து நல்லது நடக்கும். கல்வியாளர்கள், அறிஞர்களின் ஆதரவுக் கிட்டும். இந்தப் புத்தாண்டு உங்களின் 5ம் வீட்டில் பிறப்பதால் அடிப்படை வசதிகள் உயரும். பிள்ளைகளால் மதிப்புக் கூடும். வரன் தேடி தேடி அலுத்துப் போன உங்களின் மகளுக்கு இந்தாண்டு கல்யாணம் சீரும் சிறப்புமாக முடியும். மகனின் உயர்கல்வி, உத்யோகம் சம்பந்தப்பட்ட முயற்சிகள் சாதகமாக முடியும். தூரத்து சொந்தம் தேடி வரும். பூர்வீக சொத்துப் பிரச்னை முடிவுக்கு வரும். அரசால் அனுகூலம் உண்டு.

ஜூன் 12ந் தேதி வரை உங்கள் ராசிக்கு தன ஸ்தானத்தில் குரு அமர்ந்திருப்பதால் நினைத்த காரியங்கள் சுலபமாக முடியும். திருமணம், சீமந்தம், கிரகப் பிரவேசம் போன்ற சுப நிகழ்ச்சிகளால் வீடு களைக்கட்டும். கணவன் மனைவிக்குள் நெருக்கம் அதிகரிக்கும். குழந்தை பாக்யம் கிடைக்கும். புது வாகனம் வாங்குவீர்கள். ஜூன் 13ந் தேதி முதல் வருடம் முடியும் வரை குரு 3ம் வீட்டில் அமர்வதால் புதிய முயற்சிகள், திட்டங்கள் தாமதமாகி முடியும். ஒரே வேலையை இரண்டு, மூன்று முறை முயன்று போராடி முடிக்க வேண்டி வரும். அவ்வப்போது சோர்வடைவீர்கள். திடீர் பயணங்கள் அதிகரிக்கும். பழைய கடனை நினைத்து அவ்வப்போது கலங்குவீர்கள். இளைய சகோதர வகையில் சங்கடங்கள் வரும். எதிர்காலம் பற்றிய கவலைகள் வந்துப் போகும். வங்கிக் காசோலையில் முன்னரே கையொப்பமிட்டு வைக்க வேண்டாம்.

ஜூன் 20ந் தேதி வரை ராகுபகவான் உங்கள் ராசிக்கு 6ம் வீட்டில் தொடர்வதால் உங்களின் சின்ன சின்ன கனவுகள் நனவாகும். வெளிநாட்டிலிருக்கும் நண்பர்கள், உறவினர்களால் ஆதாயமடைவீர்கள். ஷேர் மூலமாக பணம் வரும். வீடு கட்ட ப்ளான் அப்ரூவலாகி வரும். வங்கி லோன் கிடைக்கும். ஆனால் கேது 12ல் மறைந்து நிற்பதால் திட்டமிடாத பயணங்களும், செலவுகளும் அதிகரிக்கும். உங்களைச் சுற்றியிருப்பவர்களில் சுயநலவாதிகளை கண்டறிவீர்கள். சில நாட்கள் தூக்கம் குறையும். ஜூன் 21ந் தேதி முதல் உங்கள் ராசிக்கு 5ல் ராகு அமர்வதால் பிள்ளைகளின் பிடிவாத குணம் அதிகமாகும். மகனின் நட்பு வட்டத்தை கண்காணியுங்கள். பாதை மாற வாய்ப்பிருக்கிறது. மகளின் திருமணத்திற்காக வெளியில் கடன் வாங்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். கர்ப்பிணிப் பெண்கள் பயணங்களை தவிர்ப்பது நல்லது. கேது 21ந் தேதி முதல் லாப வீட்டில் நுழைவதால் அயல்நாடு செல்ல விசா கிடைக்கும். ஹிந்தி, தெலுங்குப் பேசுபவர்களால் திடீர் முன்னேற்றம் உண்டாகும். மனைவிவழியில் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கோவில் விசேஷங்கள், சுப நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்துவீர்கள். சொந்த ஊரில் இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவீர்கள்.

ஆவணி, தை, மாசி, பங்குனி மாதங்களில் திடீர் பணவரவு, வீடு, வாகனம் வாங்கும் யோகம், புதியவரின் நட்பெல்லாம் உண்டாகும். கல்யாண முயற்சிகள் பலிதமாகும்.

ஐப்பசி மாதம் உங்கள் ராசிநாதன் சுக்ரனும், சுகாதிபதி சூரியனும் வலுவிழந்து காணப்படுவதால் தொண்டைப் புகைச்சல், உஷ்ணத்தால் அடிவயிற்றில் வலி, முன்கோபம், குடும்பத்தில் சலசலப்பு, எவ்வளவு பணம் வந்தாலும் பற்றாக்குறை நீடிக்கும். அரசு விவகாரங்களில் அலட்சியம் வேண்டாம். பெற்றோரின் ஆரோக்யம் பாதிக்கும். அவர்களுடன் மனக்கசப்பு வந்து விலகும்.

டிசம்பர் 15 வரை உங்களின் யோகாதிபதியான சனி பகவான் 6ம் வீட்டில் நிற்பதால் பழைய பிரச்னைகளுக்கு தீர்வு கிடைக்கும். வி.ஐ.பிகள் அறிமுகமாவார்கள். வேலைக்கு விண்ணப்பித்து காத்திருந்தவர்களுக்கு நல்ல நிறுவனத்திலிருந்து அழைப்பு வரும். சிலர் சொந்த தொழில் தொடங்குவீர்கள். டிசம்பர் 16ந் தேதி முதல் சனி 7ல் அமர்ந்து கண்டகச் சனியாக உங்கள் ராசியைப் பார்க்க இருப்பதால் எதிலும் ஆர்வமின்மை, தாழ்வு மனப்பான்மை, சோர்வு, சலிப்பு வந்து நீங்கும். ஓய்வெடுக்க முடியாமல் உழைக்க வேண்டி வரும். கணவன் மனைவிக்குள் யார் ஜெயிப்பது, யார் தோற்பது என்ற போட்டிகளெல்லாம் வேண்டாம். வீண் சந்தேகத்தாலும் சண்டை, சச்சரவுகள் வரக்கூடும். மனைவிக்கு சிறுசிறு விபத்துகள், மருத்துவச் செலவுகள் வந்துப் போகும். யாருக்காகவும் யாரையும் பரிந்துரை செய்ய வேண்டாம். மனைவிவழி உறவினர்களுடன் மனஸ்தாபம் வந்து நீங்கும்.

வியாபாரம் சூடுபிடிக்கும். ஆனி, ஆடி மாதங்களில் பற்று வரவு உயரும். மக்களின் ரசனையைப் புரிந்துக் கொண்டு அதற்கேற்ப புதிய சரக்குகள் கொள்முதல் செய்து லாபம் ஈட்டுவீர்கள். வி.ஐ.பிகளும் வாடிக்கையாளர்களாக அறிமுகமாவார்கள். உங்களுக்கு முழு ஒத்துழைப்பு தரக்கூடிய பங்குதாரரும் அறிமுகமாவார். துரித உணவகம், மர வகைகள், வாகன உதிரி பாகங்கள், அழகு சாதனப் பொருட்களால் லாபமடைவீர்கள். பழைய பங்குதாரருடன் ஈகோ வரும்.

உத்யோகத்தில் மூத்த அதிகாரிகள் தொடர்ந்து உங்களுக்கு முன்னுரிமைத் தருவார்கள். உங்களின் நிர்வாகத் திறன் கூடும். ஜூன் 13ந் தேதி முதல் குரு 3ல் மறைவதால் அடுக்கடுக்கான வேலைகளால் அவதிக்குள்ளாவீர்கள். பல முக்கிய வேலைகளை மேலதிகாரி உங்களை நம்பி ஒப்படைப்பார். உங்களின் உத்யோக ஸ்தானாதிபதியான சனிபகவான் டிசம்பர் 16 முதல் 7ல் அமர்வதால் அவ்வப்போது இடமாற்றம் வருமோ என்ற ஒரு அச்சம் இருக்கும். உங்கள் மீது சிலர் வழக்குத் தொடர்வார்கள். நியாயமாக கிடைக்க வேண்டிய பதவி உயர்வு, சம்பள உயர்வை போராடி பெற வேண்டி வரும்.

கலைத்துறையினரே! சின்ன சின்ன வாய்ப்புகளை கடந்து இப்போது பெரிய வாய்ப்புகளும் வரும். வேற்றுமொழி வாய்ப்புகளால் புகழடைவீர்கள்.

மாணவ மாணவிகளே! சமயோஜித புத்தியால் சாதிப்பீர்கள். சின்ன சின்ன தவறுகளையும் திருத்திக் கொள்வீர்கள். ஆசிரியர் பாராட்டும்படி நடந்துக் கொள்வீர்கள்.

கன்னிப்பெண்களே! நேர்முகத் தேர்வில் வெற்றிப் பெற்று புது வேலையில் சேருவீர்கள். கல்யாணப் பேச்சு வார்த்தை சாதகமாக முடியும். அவ்வப்போது அலர்ஜி, இன்பெக்ஷன் வரக்கூடும். பெற்றோர் ஆதரிப்பார்கள்.

இந்த ஆண்டு உங்கள் திறமையை சோதிப்பதாக இருந்தாலும், கடின உழைப்பாலும், தன்னம்பிக்கையாலும் வெற்றி பெற வைக்கும்.



## மிதுனம்

சமாதானத்தை எல்லோரிடத்திலும் எதிர்பார்ப்பவர்களே! உங்கள் யோகாதிபதி சுக்ரன் 9ம் வீட்டில் நிற்கும் போது இந்தப் புத்தாண்டு பிறப்பதால் உங்களின் நிர்வாகத் திறன், ஆளுமைத் திறன் அதிகரிக்கும். புது வேலைக்கு முயற்சி செய்தீர்களே! நல்ல பதில் வரும். குடும்பத்தில் அமைதி நிலவும். இந்த ஜய வருடம் உங்கள் ராசிக்கு சுக ஸ்தானத்தில் பிறப்பதால் மாதக் கணக்கில் தள்ளிப் போன காரியங்களெல்லாம் விரைந்து முடிவடையும். பிரபலங்கள் நண்பர்களாவார்கள். தாயாரின் உடல் நிலை சீராகும். சொத்து வாங்க முன் பணம் தருவீர்கள். பழுதாகிக் கிடந்த வாகனத்தை மாற்றி புதுசு வாங்குவீர்கள். தாய்வழி உறவினர்களுடன் இருந்த மோதல்கள் விலகும்.

ஜூன் 12 வரை உங்கள் ராசியிலேயே குரு அமர்ந்து ஜென்ம குருவாக தொடர்வதால் ஆரோக்யத்தில் அக்கறை காட்டுங்கள். வாயுத் தொந்தரவால் நெஞ்சு வலிக்கும். யூரினரி இன்பெக்ஷன் வந்துச் செல்லும். வெளி உணவுகளை தவிர்ப்பது நல்லது. கணவன் மனைவிக்குள் வீண் சந்தேகத்தை தவிர்க்கப்பாருங்கள். பிரிவுகள் வரக்கூடும். தண்ணீரை காய்ச்சி அருந்துங்கள். உங்களைப் பற்றிய வதந்திகளை சிலர் பரப்புவார்கள். ஜூன் 13ந் தேதி முதல் குரு 2ம் வீட்டில் சென்று அமர்வதால் தினந்தோறும் எதிர்பார்த்து ஏமாந்த தொகை கைக்கு வரும். தடைப்பட்டிருந்த சுப நிகழ்ச்சிகளெல்லாம் அடுத்தடுத்து நடந்தேறும். கைமாற்றாகவும், கடனாகவும் வாங்கியிருந்த பணத்தையும் திருப்பித் தருவீர்கள். குடும்பத்தில் இருந்து வந்த கூச்சல், குழப்பம் விலகும். பிரிந்திருந்தவர்கள் ஒன்று சேருவீர்கள். வழக்கால் இருந்த நெருக்கடிகள் வந்து நீங்கும். மழலை பாக்யம் கிடைக்கும். வீண் பழியிலிருந்து விடுபடுவீர்கள். சொத்து சேர்க்கை உண்டு. விலகியிருந்த சொந்த பந்தங்களெல்லாம் வலிய வந்துப் பேசுவார்கள். பழைய பிரச்னைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். சொந்த ஊர் பொதுக் காரியங்களையெல்லாம் முன்னின்று நடத்தி வைப்பீர்கள். விலை உயர்ந்த ஆடை, ஆபரணம் வாங்குவீர்கள். மூத்த சகோதர வகையில் உதவிகள் உண்டு.

ஆனி, ஆடி மாதங்களில் தொண்டை புகைச்சல், சளித் தொந்தரவு, தவிர்க்க முடியாத செலவுகள் அதிகரிக்கும்.

ஜூன் 20ந் தேதி வரை கேது லாப வீட்டில் நிற்பதால் உங்களின் புகழ், கௌரவம் ஒருபடி உயரும். அரைக் குறையாக நின்ற வீடு கட்டும் பணியை தொடங்குவீர்கள். புது பதவிக்கு உங்களுடைய பெயர் பரிசீலனை செய்யப் படும். ஷேர் மூலமாக பணம் வரும். ஜூன் 21 முதல் கேது உங்கள் ராசிக்கு 10ல் நுழைவதால் வேலைச்சுமை அதிகரிக்கும். கௌரவக் குறைவான சம்பவங்கள் நிகழக்கூடும்.

ஜூன் 20ந் தேதி வரை ராகு 5ல் நிற்பதால் பிள்ளைகளால் அலைச்சல், செலவுகள் வந்துப் போகும். அவர்களிடம் உங்களின் எண்ணங்களை திணிக்க வேண்டாம். கர்ப்பிணிப் பெண்கள் சாலைகளைக் கடக்கும் போது கவனம் தேவை. பூர்வீக சொத்து பிரச்னையில் மூக்கை நுழைக்காதீர்கள். 21ந் தேதி முதல் ராகு 4ம் வீட்டில் நுழைவதால் தாயாரின் ஆரோக்யம் பாதிக்கும். வாகனத்தில் செல்லும் போது தலைக்கவசம் அணிந்துச் செல்லுங்கள். வீடு, மனை வாங்கும் போது தாய்பத்திரம், வில்லங்க சான்றிதழ்களையெல்லாம் சரி பார்த்து வாங்குங்கள். வீடு மாற வேண்டிய சூழ்நிலை உருவாகும். உடல் அசதி, சோர்வு, கை, கால் வலி வந்துப் போகும். தாய்வழி உறவினர்களுடன் மனஸ்தாபம் வந்து நீங்கும்.

டிசம்பர் 15ந் தேதி வரை சனிபகவான் 5ம் வீட்டில் தொடர்வதால் பிள்ளைகளை உயர்கல்வி, உத்யோகத்தின் பொருட்டு பிரிய வேண்டிய சூழ்நிலை உருவாகும். மகளின் திருமண விஷயத்தில் அவசரம் வேண்டாம். வரன் வீட்டாரைப் பற்றி விசாரித்து கல்யாணம் முடிப்பது நல்லது. மகனின் நட்பு வட்டத்தை கண்காணியுங்கள். பாதை மாற வாய்ப்பிருக்கிறது. சொத்து சம்பந்தப்பட்ட வழக்கில் வழக்கறிஞரிடம் கலந்தாலோசித்து முடிவெடுக்கப் பாருங்கள். டிசம்பர் 16 முதல் சனிபகவான் 6ம் வீட்டில் நுழைவதால் எதிர்த்தவர்கள் நண்பர்களாவார்கள். வேற்று மொழிப் பேசுபவர்களால் உதவிகள் உண்டு. குடும்பத்தில், கணவன் மனைவிக்குள் இருந்த சலசலப்புகள் நீங்கும். நீண்ட நாட்களாக எதிர்பார்த்து காத்திருந்த விசா கிடைக்கும். அண்டை மாநிலம், வெளிநாட்டிலிருப்பவர்கள் நண்பர்களாக அறிமுகமாவார்கள்.

வியாபாரத்தில் தள்ளுபடி விற்பனை மூலமாக லாபம் ஈட்டுவீர்கள். ஆவணி, புரட்டாசி மாதங்களில் தள்ளிப் போன ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். புது முதலீடுகளும் செய்து வியாபாரத்தை விரிவுப்படுத்துவீர்கள். இங்கிதமாகப் பேசி வாடிக்கையாளர்களை கவருவீர்கள். முரண்டுப் பிடித்த வேலையாட்கள் உங்களைப் புரிந்துக் கொள்வார்கள். உங்களின் புதுத் திட்டங்களுக்கு ஒத்தாசையாகவும் இருப்பார்கள். பங்குதாரர்கள் வளைந்து வருவார்கள். ஹார்டுவேர்ஸ், ஜீவல்லரி, செங்கல் சூளை, சிமெண்ட் போன்ற வகைகளால் லாபமடைவீர்கள்.

ஜூன் 12ந் தேதி வரை ஜென்ம குரு தொடர்வதால் ஓய்வெடுக்க முடியாதபடி வேலைகள் இருந்துக் கொண்டேயிருக்கும். 13ந் தேதி முதல் உங்கள் ராசியை விட்டு குரு விலகுவதால் அலுவலகத்தில் நிம்மதி உண்டு. உயரதிகாரிகள் உங்களின் கடின உழைப்பை புரிந்துக் கொள்வார்கள். தொந்தரவு தந்த அதிகாரி வேறு இடத்திற்கு மாற்றப்படுவார். மாசி, பங்குனி மாதங்களில் எதிர்பார்த்த சம்பள உயர்வு, பதவி உயர்வு கிடைக்கும். என்றாலும் கேது ஜூன் 21ந் தேதி முதல் 10ல் அமர்வதால் சக ஊழியர்கள் மத்தியில் உயரதிகாரிகளை விமர்சிக்க வேண்டாம். உங்கள் மீது சிலர் வீண் பழி சுமத்துவார்கள்.

கலைத்துறையினரே! வீண் வதந்திகள், கிசுகிசுக்களிலிருந்து விடுபடுவீர்கள். உதாசீனப்படுத்திய நிறுவனங்களிலிருந்து நல்ல வாய்ப்புகள் வரும். சம்பள பாக்கி கைக்கு வரும்.

மாணவ மாணவிகளே! அறிவாற்றல், நினைவாற்றல் கூடும். அதிக மதிப்பெண் பெறுவீர்கள். ஆசிரியர்களின் அன்பும், பாராட்டும் கிடைக்கும். விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் பெறுவீர்கள்.

கன்னிப் பெண்களே! ஸ்கின் அலர்ஜியும் விலகும். அழகுக் கூடும். உத்யோகம் அமையும். காதல் விவகாரத்தில் தெளிவு பிறக்கும். சிலர் உயர்கல்விக்காக அயல்நாடு செல்வீர்கள். எதிர்பார்த்தபடி நல்ல வரனும் அமைந்து திருமணம் சிறப்பாக முடியும்.

இந்த ஜய வருடம் முற்பகுதி கொஞ்சம் மந்தமாக இருந்தாலும் மையப்பகுதி முதல் திடீர் யோகங்களையும், அதிரடி முன்னேற்றங்களையும் அள்ளித் தரும்.



# கடகம்

குழந்தை மனசும், கொடுக்கும் குணமும் கொண்டவர்களே! உங்கள் பாதகாதிபதி சுக்ரன் 8ல் மறைந்திருக்கும் நேரத்தில் இந்தப் புத்தாண்டு பிறப்பதால் கடினமான காரியங்களையும் எளிதாக முடிப்பீர்கள். புது பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படு வீர்கள். வேலைக்கு விண்ணப் பித்து காத்திருந்தவர்களுக்கு நல்ல நிறுவனத்திலிருந்து அழைப்பு வரும். அரசு காரியங்கள் விரைந்து முடியும். வீடு கட்ட ப்ளான் அப்ரூவலாகி வரும். இந்த ஜய வருடம் உங்கள் ராசிக்கு 3&ம் வீட்டில் பிறப்பதால் தைரியமாக சில முக்கிய முடிவுகளெல்லாம் எடுப்பீர்கள். வழக்கில் சாதகமாக தீர்ப்பு வரும். அதிக வட்டிக்கு வாங்கியிருந்த கடனில் ஒரு பகுதியை பைசல் செய்ய வழி வகை பிறக்கும். இளைய சகோதர வகையில் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

சித்திரை, வைகாசி, ஆனி மாதங்களில் எதிர்பார்ப்பு கள் நிறைவேறும். தள்ளிப் போன விஷயங்கள் முடியும். எதிர்பாராத சந்திப்புகள் நிகழும். பழைய சொத்தை விற்று புது வீடு வாங்கும் யோகம் உண்டாகும். பிள்ளைகளால் மதிப்புக் கூடும். வீடு கட்டும் வேலையைத் தொடங்குவீர்கள்.

ஜூன் 12 வரை உங்கள் ராசிக்கு விரையஸ்தானமான 12ம் வீட்டில் குரு மறைந்து காணப்படுவதால் ஒரு பக்கம் பண வரவு இருந்தாலும் மறுபக்கம் அதற்கேற்ப செலவினங்களும் கூடிக் கொண்டேப் போகும். திடீர் பயணங்களால் அலைச்சல் அதிகரிக்கும். கனவுத் தொல்லையால் தூக்கம் குறையும். குடும்பத்தினருடன் குலதெய்வக் கோவிலுக்குச் சென்று காணிக்கையை செலுத்துவீர்கள். ஜூன் 13ந் தேதி முதல் குரு உங்கள் ராசிக்குள் நுழைந்து ஜென்ம குருவாக அமர்வதால் உடல் நலத்தில் அதிக அக்கறைக் காட்டுங்கள். பெரிய நோய் இருப்பதைப் போன்ற பிரம்மை வந்து விலகும். உணவு விஷயத்தில் கட்டுப்பாடு அவசியம். எண்ணெய் பதார்த்தங்கள், லாகிரி வஸ்துக்களை தவிர்ப்பது நல்லது. மஞ்சள் காமாலை, காய்ச்சலால் சோர்வடைவீர்கள். கணவன் மனைவிக்குள் வரும் சின்ன சின்ன பிரச்னைகளை யெல்லாம் பெரிதாக்கிக் கொண்டிருக்க வேண்டாம். ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. ஈகோ பிரச்னையால் மனஇறுக்கம் அதிகரிக்கும்.

ஜூன் 20ந் தேதி வரை சர்ப்ப கிரகங்களான ராகு 4ம் வீட்டிலும், கேது 10ம் வீட்டிலும் தொடர்வதால் உங்கள் மீது சிலர் வீண் பழி சுமத்த முயற்சி செய்வார்கள். வீடு, வாகனப் பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும். தாயாருக்கு முதுகு வலி, மூட்டு வலி வந்து நீங்கும். எடுத்த வேலைகளை உடனே முடிக்க முடியாமல் திணறுவீர்கள். உத்யோகத்தில் பிடிப்பற்றப் போக்கு வந்துச் செல்லும். முக்கிய கோப்புகளைக் கையாளும் போது அலட்சியம் வேண்டாம். தாய்வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். ஜூன் 21ந் தேதி முதல் ராகு 3ம் வீட்டில் நுழைவதால் படபடப்பு, பயம் விலகும். தைரியம் கூடும். உங்கள் வார்த்தைக்கு இனி மதிப்புக் கூடும். தள்ளிப் போன கல்யாணம் கூடி வரும். குழந்தை பாக்யம் கிடைக்கும். பங்குச் சந்தை மூலமாக பணம் வரும். பழைய சொந்த பந்தங்கள் தேடி வந்துப் பேசுவார்கள். ஆனால் கேது ஜூன் 2ந் தேதி முதல் 9ம் வீட்டில் நுழைவதால் சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும் அத்தியாவசியச் செலவுகள் அதிகரிக்கும். தந்தையாருக்கு மருத்துவச் செலவுகள் ஏற்படும். அவருடன் மோதல்களும் வந்துச் செல்லும். பிதுர்வழி சொத்துப் பிரச்னை தலைத்தூக்கும்.

டிசம்பர் 15 வரை சனி 4ம் வீட்டில் நின்று அர்த்தாஷ்டமச் சனியாக தொடர்வதால் வாகனத்தை இயக்கும் போது அலைப்பேசியை பயன்படுத்த வேண்டாம். ஓட்டுநர் உரிமத்தை புதுப்பிக்க தவறாதீர்கள். சிறுசிறு அபராத தொகை கட்ட வேண்டி வரும். தாய்வழி உறவினர்களுடன் மனக்கசப்பு வந்து நீங்கும். வழக்கில் அலட்சியம் வேண்டாம். சொத்துக்குரிய ஆவணங்கள், பத்திரங்கள் தொலைந்துவிடாமல் பார்த்துக் கொள்ளுங்கள். வங்கி லாக்கரில் பாதுகாப்பாக வைப்பது நல்லது. கூடாப்பழக்க வழக்கமுள்ள நண்பர்களை வீட்டில் சேர்க்க வேண்டாம். டிசம்பர் 16 முதல் சனி 5ம் வீட்டில் நுழைவதால் வீண் பழி, தோல்விமனப்பான்மையிலிருந்து விடுபடுவீர்கள். என்றாலும் பிள்ளைகளால் பிரச்னைகள் வரும். அவர்களின் எதிர்காலம் குறித்த கவலைகள் வந்துப் போகும். பூர்வீக சொத்து சிக்கல்கள் வரும்.

வியாபாரத்தில் போட்டிகளை சமாளிக்க அதிகம் உழைக்க வேண்டி வரும். வேலையாட்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்குவது நல்லது. வாடிக்கையாளர்களிடம் கனிவாகப் பழகுங்கள். பெரிய முதலீடுகளை தவிர்க்கவும். யாருக்கும் கடன் தர வேண்டாம். அனுபவமில்லாத தொழிலில் இறங்க வேண்டாம். மார்கழி பிற்பகுதி, பங்குனி மாதங்களில் புது தொடர்புகள் கிடைக்கும். லாபம் கணிசமாக உயரும். வேற்றுமதத்தவர்கள், மாநிலத்தவர்களின் நட்பால் ஆதாய மடைவீர்கள். பங்குதாரர்களுடன் சச்சரவு வரும். கமிஷன், புரோக்கரேஜ், ஏஜென்சி, மூலிகை வகைகளால் லாபமடை வீர்கள். அரசுக்கு செலுத்த வேண்டிய வரிகளில் தாமதம் வேண்டாம்.

உத்யோகத்தில் நிம்மதியற்றப் போக்கு நிலவும். கோபத்தை குறைத்துக் கொள்ளுங்கள். அதிகாரிகள் தவறுகளை சுட்டிக் காட்டினால் திருத்திக் கொள்வது நல்லது. அடிக்கடி இடமாற்றங்களும் வரும். எதிர்பார்த்த சலுகைகளும், சம்பள உயர்வும் தாமதமாகும். எவ்வளவு தான் உண்மையாக உழைத்தாலும் நல்ல பெயர் இல்லையே என்று அவ்வப்போது ஆதங்கப்படுவீர்கள். சக ஊழியர்க ளிடம் கவனமாகப் பழகுங்கள். உங்கள் திறமையை வேறு சிலர் பயன்படுத்தி முன்னேறுவார்கள். சிலர் உங்களைப் பற்றி தவறான புகார்களில் சிக்க வைத்து கோர்ட், கேஸ் என்று அலைக்கழிப்பார்கள்.

கலைத்துறையினரே! சுய விளம்பரத்தை விட்டு விட்டு யதார்த்தமான படைப்புகளை தரப்பாருங்கள். உங்களைப் பற்றிய வதந்திகள் வரும்.

மாணவ மாணவிகளே! டி.வி. சினிமா எல்லாம் விட்டு விட்டு படிப்பில் முழு கவனம் செலுத்துங்கள். மறதியால் மதிப்பெண் குறையும். நல்லவர்களுடன் நட்பை வளர்த்துக் கொள்ளுங்கள்.

கன்னிப் பெண்களே! காதலில் சிக்கிக் கொள்ளாதீர்கள். நண்பர்களிடம் உயர்கல்வி சம்பந்தமான விஷயங்களை விவாதிப்பதுடன் நிறுத்திக் கொள்ளுங்கள். கல்யாணம் தள்ளிப் போகும். போட்டித் தேர்வுகளில் சற்றே பின்னடைவு ஏற்படும்.

இந்த ஜய வருடம் ஆரோக்ய குறைவையும், அநாவசியச் செலவுகளையும் தருவதுடன் இடையிடையே வெற்றியையும் தரும்.



# சிம்மம்

உலகத்தைப் பற்றி கவலைப் படாமல் உங்களுக்கு சரியெனப் பட்டதை செய்பவர்களே! உங்கள் ராசிக்கு தனஸ்தானத்தில் இந்த ஜய வருடம் பிறப்பதால் பணப் புழக்கம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சிக்கு குறையிருக் காது. பிள்ளைகள் பொறுப்பாக நடந்துக் கொள்வார்கள். உங்கள் ராசியை சுக்ரன் பார்த்துக் கொண்டிருக்கும் நேரத்தில் இந்தப் புத்தாண்டு பிறப்பதால் உங்களின் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். அழகு, இளமைக் கூடும். வி.ஐ.பிகள் வீட்டு விசேஷங்களில் கலந்துக் கொள்ளுமளவிற்கு நெருக்கமாவீர்கள். பழுதாகிக் கிடந்த வாகனத்தை மாற்றி நவீன ரக வண்டி வாங்குவீர்கள். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். சகோதர வகையில் இருந்த மனவருத்தம் நீங்கும்.

வைகாசி, ஆனி மாதங்களில் உங்கள் ராசிநாதன் சூரியன் பலம் பெற்றிருப்பதால் புது முயற்சிகள் யாவும் பலிதமாகும். அரசாங்க விஷயம் சாதகமாக முடியும். வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். பாதியில் நின்ற வீடு கட்டும் பணியை தொடங்குவீர்கள். வங்கி லோன் கிடைக்கும். கடன் தொல்லைகளிலிருந்து விடுபடுவீர்கள்.

ஜூன் 12 வரை உங்கள் ராசிக்கு லாப வீட்டில் குரு தொடர்வதால் உங்களின் இலக்கை நோக்கி முன்னேறு வீர்கள். பெரிய பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். திருமணம், சீமந்தம், கிரகப் பிரவேசம் போன்ற சுப நிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். மகளுக்கு நல்ல வரன் அமையும். மகனுக்கு நல்ல நிறுவனத்தில் வேலை அமையும். மழலை பாக்யம் கிட்டும். ஜூன் 13ந் தேதி முதல் குரு உங்கள் ராசிக்கு 12ல் மறைவதால் வீண் விரையம், ஏமாற்றம், தூக்கமின்மை, செலவுகள் வந்துச் செல்லும். திடீர் பயணங்கள் அதிகரிக்கும். விலை உயர்ந்தப் பொருட்களை கவனமாக கையாளுங்கள். பணப்பற்றாக்குறையால் வெளியில் கடன் வாங்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். கோவில் கும்பாபிஷேகத்தை முன்னின்று நடத்துவீர்கள். உங்களை நீங்களே தாழ்த்திக் கொள்ளாதீர்கள்.

ஜூன் 20ந் தேதி வரை கேது 9ம் வீட்டில் நிற்பதால் சேமிப்புகள் கரையும். தந்தையாரின் ஆரோக்யம் பாதிக்கும். சிறுசிறு அறுவை சிகிச்சைகளும் வரக்கூடும். யாருக்கும் பணம், நகை வாங்கித் தருவதில் குறுக்கே நிற்க வேண்டாம். பிதுர் வழி சொத்துக்களை பெறுவதில் பிரச்சனைகள் வந்து நீங்கும். என்றாலும் ஜூன் 20ந் தேதி வரை ராகு 3ம் வீட்டில் இருப்பதால் சவால்கள், விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். மனோபலம் அதிகரிக்கும். இளைய சகோதர வகையில் உதவிகள் உண்டு. வேற்றுமதத்தவர், மொழியினரால் பயனடைவீர்கள். தடைப்பட்ட திருமணம் கூடி வரும்.

ஜூன் 21ந் தேதி முதல் நிழல் கிரகங்களான ராகு 2ம் வீட்டிலும் கேது 8லும் அமர்வதால் குடும்பத்தில் சலசலப்புகள் வரும். பார்வைக் கோளாறு வரக்கூடும். உங்கள் குடும்ப விஷயத்தில் மற்றவர்கள் தலையிட அனுமதிக்காதீர்கள். பலவீனம் இல்லாத மனிதர்களே இல்லை என்பதைப் புரிந்துக் கொண்டு நண்பர்கள், உறவினர்களிடம் இருக்கும் நல்ல விஷயங்களை மட்டும் எடுத்துக் கொள்ளுங்கள். வாகன விபத்துகள் ஏற்படக் கூடும். வரவுக்கு மிஞ்சிய செலவுகள் இருக்கும். சந்தேகத்தால் நல்லவர்களின் நட்பை இழக்க நேரிடும். அரசு விவகாரங்களில் அலட்சியம் வேண்டாம். வழக்கால் நெருக்கடி வந்து நீங்கும்.

டிசம்பர் 15 வரை சனிபகவான் 3ம் வீட்டில் தொடர்வ தால் எதிலும் வெற்றி பெறுவீர்கள். துணிச்சலாக சில முடிவுகள் எடுப்பீர்கள். புது வேலைக் கிடைக்கும். காணாமல் போன முக்கிய ஆவணம் கிடைக்கும். அயல்நாடு செல்லும் வாய்ப்பு வரும். உங்களை விட வயதில் குறைந்தவர்கள் மூலமாக ஆதாயமடைவீர்கள். மனைவி வழியில் பக்க பலமாக இருப்பார்கள். நகர எல்லையை ஒட்டியுள்ள பகுதியில் வீடு வாங்குவீர்கள். சிலர் புது முதலீடு செய்து தொழில் தொடங்குவீர்கள். டிசம்பர் 16ந் தேதி முதல் சனி 4&ல் அமர்ந்து அர்த்தாஷ்டமச் சனி தொடங்குவதால் வேலைச்சுமை, வாகனப் பழுது, தாயாருடன் மோதல்கள், அவருக்கு மூட்டு வலி, தைராய்டு பிரச்னை வந்துச் செல்லும்.

ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, மார்கழி பிற்பகுதி மற்றும் மாசி மாதங்களில் அநாவசியச் செலவுகள், குடும்பத்தில் சச்சரவு, முன்கோபம், ரத்தத்தில் ஹீமோகுளோபின் குறைதால், ஒற்றை தலை வலி, எதையோ இழந்ததைப் போல் ஒருவித கவலைகள், படபடப்பு வந்துச் செல்லும்.

வியாபாரத்தில் தேங்கிக் கிடந்த சரக்குகளை விற்றுத் தீர்ப்பீர்கள். சந்தையில் மதிப்புக் கூடும். புது பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படுவீர்கள். தரமானப் பொருட்களை விற்பனை செய்வதன் மூலமாக புது வாடிக்கையாளர்கள் வருவார்கள். பாக்கிகள் வசூலாகும். முக்கிய பிரமுகர்களின் அறிமுகத்தால் பெரிய நிறுவனத்தின் ஒப்பந்தம் கிடைக்கும். கார்த்திகை, மார்கழி பிற்பகுதியில் புது கிளைகள் தொடங்குவீர்கள். பங்குதாரர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். எண்டர் பிரைசஸ், பெட்ரோ கெமிக்கல், மருந்து, கடல் உணவு வகைகளால் லாபமடைவீர்கள்.

ஜூன் 12 வரை உத்யோகத்தில் எல்லோராலும் மதிக்கப்படுவீர்கள். ஜூன் 13ந் தேதி முதல் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. மூத்த அதிகாரிகளை திருப்திபடுத்த முடியாமல் திணறுவீர்கள். சிலர் தங்களை அறிவாளியாக காட்டிக் கொள்ள உங்களை மட்டம் தட்டி மேலிடத்தில் சொல்லி வைப்பார்கள். வைகாசி, ஆனி, பங்குனி மாதங்களில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். புது பொறுப்புகள் தேடி வரும். சிலர் உத்யோகத்தின் பொருட்டு அயல்நாடு செல்வீர்கள்.

கலைத்துறையினரே! பகட்டாகப் பேசுபவர்களை நம்ப வேண்டாம். மூத்த கலைஞர்களின் நட்பால் ஆதாயமடை வீர்கள். உங்களின் படைப்புகளை போராடி வெளியிட வேண்டி வரும்.

மாணவ மாணவியர்களே! விளையாட்டைக் குறையுங்கள். தொடக்கத்திலிருந்தே படிப்பில் தீவிரம் காட்டுங்கள். நீங்கள் விரும்பிய பாடப்பிரிவில் சிலரின் சிபாரிசு அல்லது அதிக பணம் கொடுத்து சேர வேண்டிய சூழ்நிலை உருவாகும்.

கன்னிப்பெண்களே! காதல் விவகாரத்தில் எச்சரிக்கையாக இருங்கள். உயர்கல்வியில் போராடி வெற்றி பெறுவீர்கள். பெற்றோரின் ஆலோசனைகள் இப்போது கசப்பாக இருந்தாலும் பின்னர் அது சரியானது தான் என்பதை நீங்கள் உணர்வீர்கள்.

இந்த ஜய வருடம் அரைகுறையாக நின்ற வேலைகளை முடிக்க வைப்பதுடன், நீண்ட நாள் ஆசைகளை நிறைவேற்றுவதாக அமையும்.



# கன்னி

மற்றவர்களின் சுதந்திரத்தில் தலையிட விரும்பாதவர்களே! உங்கள் ராசிநாதன் புதன் பரிவர்த்தனை யோகம் பெற்றிருக்கும் நேரத்தில் இந்தாண்டு பிறப்பதால் இடையூறுகளை கடந்து வெற்றி பெறும் சக்தி உண்டாகும். இதமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். தோற்றப் பொலிவுக் கூடும். நட்பு வட்டம் விரிவடையும். இழுபறியாக இருந்த வேலைகள் முடிவடையும். உறவினர்கள் உங்களைப் புரிந்துக் கொண்டு வலிய வந்து உதவுவார்கள். பூர்வீக சொத்தை உங்கள் ரசனைக் கேற்ப மாற்றியமைப்பீர்கள்.

உங்கள் ராசியிலேயே இந்த ஜய வருடம் பிறப்பதால் ஆரோக்யத்தில் கூடுதல் கவனம் செலுத்தப்பாருங்கள். அவ்வப்போது கோபப்படுவீர்கள். அடிக்கடி தலை வலி, வாயுப் பிரச்னையால் நெஞ்சு எரிச்சல், தோலில் நமைச்சல், நரம்புக் கோளாறு வந்து நீங்கும். இரத்தத்தில் சர்க்கரையின் அளவை பரிசோதித்துக் கொள்ளுங்கள். அவசர முடிவுகளை தவிர்க்கப்பாருங்கள்.

வருடம் பிறக்கும் போது செவ்வாய் வக்ரமாகி உங்கள் ராசிக்குள் அமர்ந்திருப்பதுடன், சுக்ரனும் 6ம் வீட்டில் பலவீனமாகி நிற்பதால் மனஇறுக்கம் அதிகமாகும். பணப்பற்றாக்குறை ஏற்படும். மின்சார சாதனங்களை கவனமாக கையாளுங்கள். வாகன விபத்துகள் ஏற்படக் கூடும். சகோதர வகையில் பிணக்குகள் வரும். சொத்துப் பிரச்னையை சுமூகமாக தீர்க்கப்பாருங்கள். எதிர்தரப்பு வாய்தாவால் வழக்குத் தள்ளிப் போகும்.

ஆனி, ஆடி, மார்கழி, மாசி மாதங்களில் திடீர் திருப்பங்களும், யோகங்களும் உண்டாகும்.

ஜூன் 12 வரை குரு 10ல் தொடர்வதால் வேலைச் சுமையால் அசதி, சோர்வு வந்து நீங்கும். தங்க ஆபரணங்களை யாருக்கும் இரவல் தர வேண்டாம். மறைமுக அவமானங்கள் வந்து நீங்கும். உங்களை யாரும் மதிக்கவில்லை, யாருமே புரிந்துக் கொள்ளவில்லையென் றெல்லாம் அவ்வப்போது ஆதங்கப் படுவீர்கள். சொன்ன சொல்லை காப்பாற்ற வேண்டுமே என்ற பயம் வரும்.

ஜூன் 13ந் தேதி முதல் குருபகவான் லாப வீட்டில் சென்று அமர்வதால் பணவரவு திருப்திகரமாக இருக்கும். அறிஞர்களின் நட்பால் உங்கள் பிரச்னைகளுக்கு தீர்வு கிடைக்கும். அடுத்தடுத்து சுப நிகழ்ச்சிகளால் வீடு களைக்கட்டும். குழந்தை பாக்யம் கிடைக்கும். குலதெய்வக் கோவிலை புதுப்பிக்க உதவுவீர்கள். மனைவிவழியில் இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவீர்கள். மகளுக்கு நல்ல வரன் அமையும். ஷேர் மூலம் பணம் வரும். கல்யாணம் கூடி வரும். தாயார் மற்றும் தாய்வழி உறவினர்களுடன் இருந்த மோதல்கள் விலகும். அரசாங்க விஷயம் சாதகமாக முடியும். ஏளனமாகவும், இழிவாகவும் திட்டியவர்கள் எல்லாம் இனி உங்களை பாராட்டுவார்கள். குறைக் கூறிக் கொண்டிருந்த உறவினர்களின் மனசு மாறும். வெளிவட்டாரத்தில் உங்களை நம்பி பெரிய பதவிகள், பொறுப்புகள் தருவார்கள். வேலைக் கிடைக்கும். சித்திரை, வைகாசி, புரட்டாசி மாதங்களில் புதிய முயற்சிகளில் கவனம் தேவை.

ஜூன் 20ந் தேதி வரை கேது உங்கள் ராசிக்கு 8ம் வீட்டிலும், ராகு 2லும் நிற்பதால் உங்கள் பலம், பலவீனத்தை உணர்ந்து செயல்படுவது நல்லது. கண் வலி, வீண் வாக்குவாதம், சிறுசிறு விபத்துகள், மனதில் ஒருவித சஞ்சலம் வந்துச் செல்லும். ஜூன் 21ந் தேதி முதல் ராகு உங்கள் ராசிக்குள்ளேயும், கேது 7ம் வீட்டிலேயும் நுழைவதால் விபத்துகளிலிருந்து மீள்வீர்கள். வீண் டென்ஷன், எதிலும் ஒரு பிடிப்பற்ற போக்கு, பிறர் மீது நம்பிக்கையின்மை, தலைச்சுற்றல், ஹார்மோன் பிரச்னை வந்துச் செல்லும். இரும்பு, சுண்ணாம்புச் சத்துள்ள காய், கனி, கீரை வகைகளை உணவில் அதிகம் சேர்த்துக் கொள்ளுங்கள். வீண் சந்தேகம், ஈகோ பிரச்னையால் கணவன் மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். கடந்த காலத்தில் ஏற்பட்ட இழப்புகள், ஏமாற்றங் களை நினைத்து அவ்வப்போது மனம் கலங்குவீர்கள்.

டிசம்பர் 15 வரை சனி உங்கள் ராசிக்கு 2ல் அமர்ந்து ஏழரைச் சனியில் பாதச் சனி தொடர்வதால் சாதாரணமாகப் பேசப் போய் சண்டையில் முடியும். பார்வைக் கோளாறு வந்து நீங்கும். கர்ப்பிணிப் பெண்கள் நீண்ட தூரப் பயணங்களை தவிர்ப்பது நல்லது. மகள் உங்களை தவறாகப் புரிந்துக் கொள்வாள். மகன் கோபப்படுவார். கூடாப்பழக்கங்களி லிருந்து முழுமையாக வெளியேறுவது நல்லது. டிசம்பர் 16 முதல் ஏழரைச் சனி விலகி 3ம் வீட்டில் சனிபகவான் நுழைவதால் நீங்கள் உழைத்த உழைப்பு, சிந்திய வியர்வைக்கெல்லாம் நல்ல பலன் கிடைக்கும். மகிழ்ச்சியான சம்பவங்கள் குடும்பத்தில் நடக்கும். நிலம், வீடு, மனை வாங்கும் யோகம் உண்டாகும். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலையறிந்து செயல்படத் தொடங்குவார்கள்.

வியாபாரத்தில் நெளிவு, சுளிவுகளைக் கற்றுக் கொண்டு லாபத்தை இரட்டிப்பாக்குவீர்கள். உணவு, இரும்பு, ஸ்பெகுலேஷன் வகைகளால் ஆதாயம் உண்டு. தொழில் ரகசியங்கள் கசியாமல் பார்த்துக் கொள்ளுங்கள். வேலையாட்களால் பிரச்சனைகள் வரும். பங்குதாரர்களை அனுசரித்துப் போங்கள். பாக்கிகளை நயமாகப் பேசி வசூலிக்கப் பாருங்கள். அரசாங்கக் கெடுபிடிகள் தளரும்.

உத்யோகத்தில் ஜூன் 12 வரை குரு 10&ல் தொடர்வதால் மறைமுக எதிர்ப்புகளும், வேலைச்சுமையும் இருக்கும். 13ந் தேதி முதல் தேங்கிக் கிடந்த பணிகளை விரைந்து முடிப்பீர்கள். உங்களின் கடின உழைப்பை உயரதிகாரிகள் புரிந்துக் கொள்வார்கள். பதவி உயர்விற்காக சில தேர்வுகளை எழுத திட்டமிடுவீர்கள். உங்கள் தகுதியை மேம்படுத்திக் கொள்வீர்கள். சம்பள பாக்கி கைக்கு வரும்.

கலைத்துறையினரே! கிசுகிசுத் தொல்லைகள் வரும். உங்களின் படைப்புகளுக்கு வேறொருவர் உரிமை கொண்டாடுவார். புது வாய்ப்புகளும் வரும்.

மாணவ மாணவியர்களே! பொது அறிவுத் திறனை வளர்த்துக் கொள்வீர்கள். உயர்கல்வி, மேற்படிப்பு தொடர எதிர்பார்த்த கல்வி நிறுவனத்தில் சேர கடிதம் வரும். விளையாடும் போது சிறுசிறு காயங்கள் ஏற்படக்கூடும்.

கன்னிப்பெண்களே! தடைப்பட்ட உயர்கல்வியை தொடர்வீர்கள். உங்களை ஏமாற்றி வந்த சிலரிடமிருந்து விடுபடுவீர்கள். பெற்றோரின் ஆலோசனைகள் உதவிகரமாக இருக்கும். போராடி நல்ல நிறுவனத்தில் வேலையில் அமர்வீர்கள். அல்சர், தூக்கமின்மை வந்துச் செல்லும்.

இந்த தமிழ் புத்தாண்டு முற்பகுதி உங்களை முணுமுணுக்க வைத்தாலும் பிற்பகுதி திடீர் யோகங்களையும், அந்தஸ்தையும் தரும்.



# துலாம்

எல்லோரும் எல்லாம் பெற வேண்டுமென்று நினைப்பவர்களே! உங்கள் ராசிநாதன் சுக்ரன் வலுவாக 5ம் வீட்டில் நிற்கும் போது இந்த ஜய வருடம் பிறப்பதால் மறைந்துக் கிடந்த திறமைகள் வெளிப்படும். புதிய யோசனைகள் உதயமாகும். வருங்காலத் திட்டங்கள் நிறைவேறும். அனுபவப் பூர்வமாகவும், அறிவுப்பூர்வமாகவும் பேசி எல்லாரையும் கவருவீர்கள். மழலை பாக்யம் கிடைக்கும். பிள்ளைகள் நீண்ட நாட்களாக கேட்டுக் கொண்டிருந்ததை வாங்கித் தந்து உற்சாகப்படுத்துவீர்கள். பூர்வீக சொத்தை புதுப்பிக்கும் முயற்சியில் இறங்குவீர்கள். விலை உயர்ந்த மின்னணு, மின்சார சாதனங்கள் வாங்குவீர்கள்.

இந்தப் புத்தாண்டு உங்கள் ராசிக்கு விரையஸ்தானமான 12ம் வீட்டில் பிறப்பதால் அலைச்சலுடன் ஆதாயம் உண்டாகும். வெளியூர் பயணங்கள் உண்டு. ஆடம்பரச் செலவுகளால் சேமிப்புகள் கரையும். சில நாட்களில் தூக்கம் குறையும். பழைய கடன் பிரச்னை அவ்வப்போது மனசை வாட்டும். வெளிவட்டாரத் தொடர்புகள் அதிகரிக்கும். நீண்ட நாளாக செல்ல வேண்டுமென நினைத்திருந்த கோவில்களுக்கு குடும்பத்தாருடன் சென்று வருவீர்கள். வீட்டை விரிவுப்படுத்திக் கட்டுவீர்கள்.

ஜூன் 12 வரை குருபகவான் 9ம் வீட்டில் நிற்பதால் பிரச்சனைகளை தொலைநோக்குப் பார்வையுடன் தீர்க்கும் சூட்சுமத்தை உணர்வீர்கள். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். பெரிய மனிதர்களின் நட்பு கிடைக்கும். அரைக்குறையாக நின்ற வீடு கட்டும் பணியை விரைந்து முடிப்பீர்கள். வங்கிக் கடன் உதவி கிடைக்கும். குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். மகனுக்கு நல்ல குடும்பத்திலிருந்து மணமகள் அமைவார். மகளின் உயர் கல்வி சிறப்பாக அமையும். உறவினர், நண்பர்கள் வீட்டு விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். எதிர்த்தவர்கள் நண்பர்களாவார்கள். ஜூன் 13ந் தேதி முதல் குரு 10ம் வீட்டில் நுழைவதால் யாருக்காகவும் எந்த உறுதிமொழியும் தர வேண்டாம். குடும்பத்தினருடன் வெளியூர் செல்வதாக இருந்தால் நகை, பணத்தையெல்லாம் வங்கியில் பாதுகாப்பாக வைத்து செல்வது நல்லது. வீட்டில் களவுப் போக வாய்ப்பிருக்கிறது. சட்டத்திற்கு புறம்பான வகையில் செயல்படுபவர்களுடன் எந்த நட்பும் வேண்டாம்.

ஆனி, ஆடி, ஆவணி, மார்கழி, பங்குனி மாதங்களில் செல்வாக்குக் கூடும். சொத்து வாங்குவது, விற்பது லாபகரமாக முடியும்.

ஜூன் 20ந் தேதி வரை கேது உங்கள் ராசிக்கு 7ம் வீட்டிலும், ராகு ராசியிலேயும் நீடிப்பதால் அவ்வப்போது முன்கோபம் வரும். யாருக்காகவும் ஜாமீன், கேரண்டர் கையெழுத்திடாதீர்கள். இரத்த அழுத்தம் அதிகரிக்கும். செரிமானக் கோளாறு, நெஞ்சு வலி, மூச்சுத் திணறல் வந்துச் செல்லும். மற்றவர்களை சொல்வதையெல்லாம் கேட்டு உங்கள் மனைவியை சந்தேகப்படாதீர்கள். மனைவிக்கு முதுகுத் தண்டு, அடி வயிறு மற்றும் கணுக்கால் வலி வந்துப் போகும். மனைவிவழி உறவினர்களுடன் விரிசல்கள் வரக்கூடும். ஜூன் 21ந் தேதி முதல் ராகு உங்கள் ராசியை விட்டு விலகி 12ல் மறைவதாலும், கேது ராசிக்கு 6ல் அமர்வதாலும் தடைகள் நீங்கும். மருந்து, மாத்திரையிலிருந்து விடுபடுவீர்கள். ஷேர் மூலம் பணம் வரும். விலகி நின்றவர்கள் வலிய வந்துப் பேசுவார்கள். கணவன் மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். திடீர் பயணங்கள் உண்டு. சிலர் அயல்நாடு செல்லும் வாய்ப்பு வரும். ஹிந்தி, தெலுங்குப் பேசுபவர்களால் ஆதாயமடைவீர்கள்.

டிசம்பர் 15 வரை சனி பகவான் உங்கள் ராசிக்குள் உச்சம் பெற்று அமர்ந்திருந்தாலும் ஜென்மச் சனியாக இருப்பதால் உடல் நலம் பாதிக்கும். உணவு விஷயத்தில் கட்டுப்பாடு அவசியம். எண்ணெயில் பொரித்த மற்றும் கொழுப்புச் சத்து அதிகமுள்ள உணவுகளை தவிர்ப்பது நல்லது. தலைச்சுற்றல், எலும்புத் தோய்வால் அவதிப்படுவீர்கள். அவர்களின் உயர்கல்வி, உத்யோகம், திருமணம் சம்பந்தப்பட்ட முயற்சிகள் தாமதமாக முடியும். கர்ப்பிணிப் பெண்கள் மருத்துவரின் ஆலோசனையின்றி எந்த மருந்தையும் உட்கொள்ள வேண்டாம். முக்கிய ஆவணங்களில் கையெழுத்திடும் முன்பு வழக்கறிஞரை கலந்தாலோசிப்பது நல்லது. அரசுக்கு செலுத்த வேண்டிய சொத்து வரி, வருமான வரிகளையெல்லாம் கால தாமதமின்றி செலுத்தப் பாருங்கள். டிசம்பர் 16 முதல் பாதச் சனி தொடங்குவதால் பார்வைக் கோளாறு, பேச்சால் பிரச்னை, குடும்பத்தினருடன் வீண் வாக்குவாதங்கள் வந்துச் செல்லும். காலில் அடிப்பட வாய்ப்பிருக்கிறது.

சித்திரை, ஐப்பசி, மாசி மாதங்களில் அலைச்சல், வீண் டென்ஷன், குழப்பம் வந்துச் செல்லும். செலவினங்கள் அதிகரிக்கும்.

வியாபாரத்தில் போட்டிகளால் லாபம் குறையும். வேலையாட்களுடன் போராட வேண்டி வரும். அயல்நாட்டிலிருப்பவர்கள், திடீரென்று அறிமுகமாகுபவர்களை நம்பி புது தொழில், புது முயற்சிகளில் இறங்க வேண்டாம். வாடிக்கையாளர்களை கடிந்துக் கொள்ளாதீர்கள். சின்னதாக கடன் வாங்கி வியாபாரத்தை விரிவுப்படுத்துவீர்கள். ரியல் எஸ்டேட், பழைய இரும்பு, ப்ளாஸ்டிக் வகைகளால் ஆதாயமடைவீர்கள். மார்கழி மாதத்திலிருந்து வியாபாரம் சூடுபிடிக்கும். பற்று வரவு உயரும்.

ஜூன் 12 வரை குரு 9ல் நிற்பதால் உத்யோகத்தில் மதிப்பு, மரியாதைக் கூடும். ஜூன் 13ந் தேதி முதல் 10ல் குரு நுழைவதால் உத்யோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். சின்ன சின்ன அவமானங்கள், மனக்கலக்கங்கள் வந்துப் போகும். உங்களைவிட அனுபவம் குறைவானவர்கள், வயதில் சிறியவர்களிடமெல்லாம் நீங்கள் அடங்கிப் போக வேண்டிய சூழ்நிலை உருவாகும்.

கலைத்துறையினரே! மறைமுக போட்டிகள் இருக்கும். விமர்சனங்களையும் தாண்டி முன்னேறுவீர்கள்.

மாணவ மாணவியர்களே! உங்களின் தனித்திறமையை வளர்த்துக் கொள்ளுங்கள். அறிவியல், கணிதப் பாடங்களில் அதிக கவனம் செலுத்துங்கள். அலட்சியமாக இருக்காதீர்கள். விடைகளை எழுதிப் பார்ப்பது நல்லது. கலை, விளையாட்டுப் போட்டிகளில் கலந்துக் கொண்டு வெற்றி பெறுவீர்கள்.

கன்னிப் பெண்களே! புதிய நண்பர்களின் வருகையால் மகிழ்ச்சியடைவீர்கள். கூடாபழக்க வழக்கங்களை தவிர்த்துவிடுங்கள். பெற்றோரிடம் எதையும் மறைக்க வேண்டாம். உங்களிடம் அன்பாகப் பேசி சிலர் உங்களை பாதை மாற்றக் கூடும்.

இந்த புத்தாண்டின் முற்பகுதி ஓரளவு பணவரவையும், பிற்பகுதி ஆரோக்யத்தையும் தருவதாக அமையும்.



# விருச்சிகம்

உள்மனம் சொல்வதை மறைக்காமல் வெளிப்படுத்துபவர்களே! உங்கள் ராசிநாதன் செவ்வாய் லாப வீட்டில் இருக்கும் போது இந்தப் புத்தாண்டு பிறப்பதால் எதையும் சாதிக்கும் துணிச்சல் வரும். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். பாதிப் பணம் தந்து முடிக்கப் படாமல் இருந்த சொத்தை மீதிப் பணம் தந்து பத்திரப் பதிவு செய்வீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்கள் வளர்ச்சிக்கு பக்கபலமாக இருப்பார்கள். இந்த ஜய வருடம் உங்கள் ராசிக்கு 11ம் வீட்டில் சந்திரன் நிற்கும் போது பிறப்பதால் எதிலும் வெற்றி பெறுவீர்கள். பேச்சில் கனிவு பிறக்கும். உங்கள் ரசனைக்கேற்ப வீடு, வாகனம் அமையும். தொழிலதிபர்களின் அறிமுகம் கிடைக்கும். புது வாய்ப்புகளும், பொறுப்புகளும் தேடி வரும். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும்.

ஜூன் 12 வரை குருபகவான் 8ல் மறைந்து நிற்பதால் மறைமுக எதிரிகளால் ஆதாயமடைவீர்கள். திடீர் பயணங்களால் அலைச்சல் அதிகரிக்கும். எவ்வளவு பணம் வந்தாலும் எடுத்து வைக்க முடியவில்லையே என ஆதங்கப்படுவீர்கள். சந்தேகத்தால் நல்லவர்களின் நட்பை இழக்க நேரிடும். பலவருடங்கள் நெருக்கமாக பழகியவர்கள் கூட உங்களை குறை கூறுவார்கள். ஜூன் 13ந் தேதி முதல் குருபகவான் உங்கள் ராசிக்கு 9ம் வீட்டில் நுழைவதால் திடீர் பணவரவு, யோகம் எல்லாம் உண்டாகும். உங்களைப் பற்றிய இமேஜ் ஒருபடி உயரும். குடும்பத்தில் இருந்த சச்சரவுகள் குறையும். வீடு வாங்க, கட்ட வங்கி லோன் கிடைக்கும். மகளின் திருமணத்தை சிறப்பாக நடத்துவீர்கள். மகனுக்கு எதிர்பார்த்த நிறுவனத்தில் உயர்கல்வி, உத்யோகம் அமையும். பூர்வீக சொத்துப் பிரச்னை முடிவுக்கு வரும். அடுத்து சுப நிகழ்ச்சிகளால் வீடு களைக்கட்டும்.

ஜூன் 20ந் தேதி வரை கேது உங்கள் ராசிக்கு 6ம் வீட்டில் நிற்பதால் வேற்றுமதத்தவர்கள், வெளிநாட்டிலிருப்பவர்களால் ஆதாயமடைவீர்கள். பழைய நண்பர்கள் தேடி வந்துப் பேசுவார்கள். வெளிவட்டாரத்தில் செல்வாக்குக் கூடும். கோவிலை புதுப்பிக்க நன்கொடை வழங்குவீர்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். ஜூன் 21ந் தேதி முதல் கேது ராசிக்கு 5ம் வீட்டில் நுழைவதால் பிள்ளைகளிடம் உங்களின் எண்ணங்களைத் திணிக்க வேண்டாம். சிலர் உயர்கல்வி, உறவினர்களில் சிலர் உங்களை காரியம் ஆகும் வரை பயன்படுத்திக் கொண்டு விலகுகிறார்கள் என்று ஆதங்கப் படுவீர்கள். பூர்வீக சொத்தை சீர் செய்வீர்கள்.

ஜூன் 20ந் தேதி வரை ராகு ராசிக்கு 12ம் வீட்டில் மறைந்திருப்பதால் பழைய பகை, கடனை நினைத்து கலங்குவீர்கள். அடுத்தவர்களின் குடும்ப விஷயத்தில் அத்துமீறி தலையிட வேண்டாம். தாயாருக்கு கை, முழங்கால் வலி, சிறுசிறு அறுவை சிகிச்சை வந்துச் செல்லும். எதிர்காலம் பற்றிய பயம் வரும். ஜூன் 21ந் தேதி முதல் ராகு லாப வீட்டில் நுழைவதால் எதிர்ப்புகள் விலகும். ஷேர் மூலம் பணம் வரும். வேற்றுமொழிப் பேசுபவர்கள் நண்பர்களாவார்கள். புது வேலைக்கு முயற்சி செய்தீர்களே! நல்ல பதில் வரும். தடைப்பட்ட கல்யாணம் கூடி வரும். குழந்தை பாக்யம் கிடைக்கும். சொந்த ஊரில் மதிப்பு, மரியாதைக் கூடும். உங்களை ஏளனமாகவும், இழிவாகவும் பேசியவர்களெல்லாம் வலிய வந்து நட்பு பாராட்டுவார்கள். புது பதவிக்கு உங்களது பெயர் பரிந்துரை செய்யப்படும். சிலர் அயல்நாடு செல்வீர்கள்.

டிசம்பர் 15 வரை ஏழரைச் சனியில் விரையச் சனி இருப்பதால் தூக்கம் குறையும். திடீர் பயணங்கள், வீண் அலைச்சல், விரையம் வந்துச் செல்லும். வரவுக்கு மிஞ்சிய செலவுகள் இருக்கும். குடும்ப அந்தரங்க விஷயங்களை மற்றவர்களிடம் சொல்லி உங்கள் சுய மரியாதையைக் குறைத்துக் கொள்ள வேண்டாம். உங்களுக்கு நெருக்கமாக உள்ள முக்கியஸ்தர்களை யாருக்கும் பரிந்துரை செய்யாதீர்கள். திடீரென்று அறிமுகமாகும் நண்பரை நம்பி பெரிய முடிவுகளெல்லாம் எடுக்க வேண்டாம். அரசுக்கு செலுத்த வேண்டிய வரிகளில் தாமதம் வேண்டாம். முக்கிய கோப்புகளை கையாளும் போது அலட்சியம் வேண்டாம். டிசம்பர் 16ந் தேதி முதல் உங்கள் ராசிக்குள் நுழைந்து ஜென்மச் சனியாக அமர்வதால் அதுமுதல் ஆரோக்யத்தில் கூடுதல் கவனம் செலுத்தப்பாருங்கள். பெரிய நோய் இருப்பதற்கான அறிகுறிகள் தெரியும். நெஞ்சு வலி, சிறுசிறு அறுவை சிகிச்சைகள் வந்துச் செல்லும். சட்டத்திற்கு புறம்பான வகையில் யாருக்கும் உதவ வேண்டாம்.

வியாபாரத்தில் அனுபவ அறிவால் லாபம் ஈட்டுவீர்கள். வாடிக்கையாளர்களின் ரசனையைப் புரிந்துக் கொண்டு அதற்கேற்ப புதுத் துறையில் முதலீடு செய்வீர்கள். வேலையாட்களை அவர்கள் போக்கிலேயே விட்டுப் பிடிப்பது நல்லது. தள்ளிப் போன ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். வாடிக்கையாளர்களின் நம்பிக்கையைப் பெறுவீர்கள். உரிய ஆவணங்கள் இல்லாமல் பணம் கொடுக்கல் வாங்கல் வைத்துக் கொள்ள வேண்டாம். சிலர் சொந்த இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். கமிஷன், ரியல் எஸ்டேட், செங்கல் சூளை, ஸ்டேஷனரி, பதிப்பகம் வகைகளால் லாபமடைவீர்கள். வேற்றுநாட்டு நிறுவனங்கள் மூலம் ஆதாயம் அடைவீர்கள்.

உத்யோகத்தில் ஜூன் 12ந் தேதி வரை பணிகளை போராடி முடிக்க வேண்டி வரும். ஜூன் 13ந் தேதி முதல் வேலைச்சுமை குறையும். உயரதிகாரிகளின் ராஜதந்திரத்தை உடைத்தெறிவீர்கள். சம்பள பாக்கி கைக்கு வரும். உங்கள் மீது தொடரப்பட்ட பொய் வழக்கு தள்ளுபடியாகும். வெகு நாட்களாக எதிர்பார்த்தும் கிடைக்காமல் போன பதவியுயர்வு கிட்டும். அயல்நாட்டுத் தொடர்புடைய நிறுவனங்களிலிருந்து புது வாய்ப்புகள் தேடி வரும். சக ஊழியர்களின் ஒத்துழைப்பால் நினைத்ததை முடிப்பீர்கள்.

கலைத்துறையினரே! உங்களுடைய படைப்புகள் வெளியாவதில் இருந்த தடைகள் நீங்கும். மக்களால் பாராட்டப்படுவீர்கள். உங்களின் புது முயற்சிகள் மூத்த கலைஞர்களின் ஆதரவால் வெற்றியடையும்.

மாணவ மாணவியர்களே! படிப்பில் மதிப்பெண் கூடும். நண்பர்களுடன் இருந்த கருத்து மோதல்கள் சரியாகும். போட்டித் தேர்வுகளில் வெற்றி உண்டு. உயர்கல்வி எதிர்பார்த்த கல்விபிரிவில், எதிர்பார்த்த நிறுவனத்தில் கிடைக்கும்.

கன்னிப் பெண்களே! நிஜம் எது, நிழல் என்பதை தெளிவாக உணர்வீர்கள். காதல் குழப்பங்கள் நீங்கும். உயர்கல்வியில் வெற்றி கிட்டும். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். திருமணத் தடைகள் நீங்கும்.

இந்தப் புத்தாண்டு நெடுநாள் ஆசைகளை நிறைவேற்றுவதுடன், செல்வம் செல்வாக்கையும் தருவதாக அமையும்.



## தனுசு

சட்ட திட்டங்களை உருவாக்குவதுடன் பின்பற்றுவதிலும் வல்லவர்களே! இந்த ஜய வருடம் உங்கள் ராசிக்கு 10ம் வீட்டில் பிறப்பதால் உங்களின் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். வேலைக்கு விண்ணப்பித்து காத்திருந்தவர்களுக்கு நல்ல நிறுவனத்தில் வேலைக் கிடைக்கும். அதிகாரப் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படுவீர்கள். குடும்ப வருமானம் உயரும். சொத்து வாங்கும் யோகம் உண்டாகும். பணப்புழக்கம் அதிகரிக்கும். உங்கள் ராசிக்கு சாதகமான நட்சத்திரத்தில் புதன் சென்றுக் கொண்டிருக்கும் போது இந்தப் புத்தாண்டு பிறப்பதால் உற்சாகமாக எதையும் செய்யத் தொடங்குவீர்கள். பழைய வீட்டை இடித்துக் கட்டுவீர்கள். சிலர் வீட்டில் கூடுதலாக ஒரு அறை அல்லது தளம் அமைப்பீர்கள். மனைவி வழியில் ஆதரவுப் பெருகும். நினைத்திருந்த டிசைனில் ஆடை, ஆபரணங்கள் வாங்குவீர்கள். உறவினர்களால் ஆதாயம் கிடைப்பதுடன் கௌரவமும் ஒருபடி உயரும். சகோதர வகையில் இருந்த பிணக்குகள் நீங்கும்.

ஜூன் 12 வரை உங்கள் ராசிநாதன் குருபகவான் 7ல் அமர்ந்து உங்கள் ராசியைப் பார்த்துக் கொண்டிருப்பதால் திருமணம், சீமந்தம் என அடுத்தடுத்த சுப நிகழ்ச்சிகளால் வீடு களைக்கட்டும். கணவன் மனைவிக்குள் அன்யோன்யம் அதிகரிக்கும். தள்ளிப் போன கல்யாணம் கூடி வரும். புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று முடிந்து வைத்திருந்த காணிக்கையை செலுத்துவீர்கள். வி.ஐ.பிகளின் தொடர்பு கிடைக்கும். மனைவிவழி உறவினர்கள் மத்தியில் செல்வாக்குக் கூடும். ஜூன் 13ந் தேதி முதல் குருபகவான் ராசிக்கு 8ல் சென்று மறைவதால் வீண் அலைச்சல் அதிகரிக்கும். செலவுகள் கட்டுக்கடங்காமல் போகும். சில வேலைகளை போராடி முடிக்க வேண்டி வரும். தாயாருக்கு மருத்துவச் செலவுகள் ஏற்படும். பெயர், புகழ், கௌரவம் குறைந்து விடுமோ என்ற ஒரு பயம் வரும். வாகனத்தை இயக்கும் போது அலைப்பேசியில் பேச வேண்டாம். வங்கிக் கணக்கில் போதிய பணம் இருக்கிறதா என்று பார்த்துவிட்டு காசோலை தருவது நல்லது.

ஜூன் 20ந் தேதி வரை கேது உங்கள் ராசிக்கு 5ல் நிற்பதால் பிள்ளைகள் இன்னும் கொஞ்சம் கடினமாக உழைத்தால் நல்லது என நினைப்பீர்கள். உங்கள் இளமைக் காலத்துடன் அவர்களை ஒப்பிட்டுப் பார்த்து கொஞ்சம் பெருமூச்சு விடுவீர்கள். பூர்வீகச் சொத்துக்கான வரியை செலுத்தி சரியாக பராமரியுங்கள். சிலருக்கு கர்ப்பச் சிதைவு ஏற்படக்கூடும். என்றாலும் ராகு உங்கள் ராசிக்கு லாப வீட்டில் நிற்பதால் அமைதியாக இருந்து சாதிப்பீர்கள். பெரிய மனிதர்களின் நட்பு கிடைக்கும். வழக்கில் வெற்றி பெறுவீர்கள். தன்னார்வத் தொண்டு நிறுவனங்களில் உங்களை இணைத்துக் கொள்வீர்கள். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். கோவில் கும்பாபிஷேகத்தை முன்னின்று நடத்துவீர்கள்.

ஜூன் 21ந் தேதி முதல் ராகு உங்கள் ராசிக்கு 10ம் வீட்டிலும், கேது 4லும் அமர்வதால் வாகனப் பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும். உங்களுக்கு களங்கம் ஏற்படுத்த சிலர் முயற்சி செய்வார்கள். தாயாருடன் மனத்தாங்கல் வரும். தாய்வழி சொத்தைப் பெறுவதில் சிக்கல்கள் வந்துச் செல்லும். அரசு விவகாரங்களில் அலட்சியம் வேண்டாம். உத்யோகத்தில் அடிக்கடி இடமாற்றங்கள் வரும். சின்ன சின்ன அவமானங்கள் ஏற்படக்கூடும். யாருக்காகவும் கேரண்டர் கையெழுத்திட வேண்டாம். பழைய கசப்பான அனுபவங்களை நினைத்து பெருமூச்சுவிடுவீர்கள். வெளிவட்டாரத்தில் யாரையும் தாக்கிப் பேச வேண்டாம்.

டிசம்பர் 15 வரை சனிபகவான் லாப வீட்டில் நிற்பதால் நீண்ட நாள் கனவுகளெல்லாம் நனவாகும். துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். இளைய சகோதர வகையில் உதவிகள் உண்டு. பங்குச் சந்தை மூலமாக ஆதாயமடைவீர்கள். நல்ல காற்றோட்டம், குடிநீர் வசதியுள்ள வீட்டிற்கு குடிப்புகுவீர்கள். விருந்தினர்களின் வருகை அதிகரிக்கும். சொந்த ஊர் பொது காரியங்களையெல்லாம் முன்னின்று செய்வீர்கள். அரசியலில் செல்வாக்குக் கூடும். அக்கம் பக்கம் வீட்டாருடன் இணக்கமான சூழ்நிலை உருவாகும். டிசம்பர் 16ந் தேதி முதல் சனிபகவான் 12ல் மறைந்து ஏழரைச் சனியின் முதல் கட்டமான விரையச் சனி தொடங்கயிருப்பதால் ஆழ்ந்த உறக்கம் இல்லாமல் போகும். அடிக்கடி மனஅழுத்தத்திற்குள்ளாவீர்கள். திடீர் பயணங்கள், செலவுகளால் திணறுவீர்கள். முக்கிய காரியங்களையெல்லாம் நீங்களே நேரடியாக சென்று முடிப்பது நல்லது.

வியாபாரத்தில் புது முயற்சிகள் வெற்றியடையும். சந்தை ரகசியங்களை தெரிந்துக் கொள்வீர்கள். வியாபார சங்கத்தில் முக்கிய பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படுவீர்கள். புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். வேற்றுமொழிக்காரர்கள், வேற்றுமாநிலத்தை சேர்ந்தவர்களை வேலையாட்களாக அமர்த்துவீர்கள். விசாரித்து சேர்ப்பது நல்லது. வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். வேற்றுமாநிலம், வெளிநாட்டை சேர்ந்தவர்கள் பங்குதாரர்களாக அறிமுகமாவார்கள். பெட்ரோ கெமிக்கல், மருந்து, உணவு, ஃபைனான்ஸ் வகைகளால் ஆதாயமடைவீர்கள்.

ஜூன் 12ந் தேதி குரு சாதகமாக இருப்பதால் உத்யோகத்தில் பாராட்டப்படுவீர்கள். ஜூன் 13ந் தேதி முதல் குரு 8ல் மறைவதால் கொஞ்சம் டென்ஷன் இருக்கத்தான் செய்யும். தலைமையின் நம்பிக்கையைப் போராடிப் பெறுவீர்கள். நீங்கள் செய்து முடித்த வேலைக்கு சக ஊழியரோ, அல்லது மூத்த அதிகாரியோ உரிமைக் கொண்டாடுவார்கள். எதிர்பார்த்த சலுகைகளும், சம்பள உயர்வும் தாமதமாக கிடைக்கும். உரிமைக்காக நீதி மன்றங்கள் செல்ல நேரிடும்.

கலைத்துறையினரே! கிசுகிசுத் தொந்தரவுகள், வதந்திகளெல்லாம் வந்தாலும் அஞ்சமாட்டீர்கள். உங்கள் திறமைக்கு நல்ல வாய்ப்புகள் கிட்டும். உங்களின் கற்பனைத் திறன் வளரும்.

மாணவ மாணவிகளே! உங்களுடைய பொது அறிவுத் திறன் வளரும். அரசுத் தேர்வில் மதிப்பெண் கூடும். கெட்ட நண்பர்களிடமிருந்து விடுபடுவீர்கள். நீங்கள் எதிர்பார்த்த நிறுவனத்தில் உயர்கல்வியை தொடருவீர்கள்.

கன்னிப் பெண்களே! தடைப்பட்ட உயர்கல்வியை தொடர்வீர்கள். மனசை அலைபாயவிடாமல் ஒருநிலைபடுத்துங்கள். போராடி நல்ல நிறுவனத்தில் வேலையில் அமர்வீர்கள். தாயாரை தவறாகப் புரிந்துக் கொள்ள வேண்டாம். பால்ய நண்பர்களை சந்தித்து மகிழ்வீர்கள்.

இந்தப் ஜய வருடம் சுபச் செலவுகளையும், தொலை தூரப் பயணங்களையும் தருவதுடன் உங்கள் புதிய திட்டங்கள் நிறைவேறுவதற்கு உதவியாக அமையும்.



# மகரம்

அனைத்ததையும் அறிந்துக் கொள்ள ஆர்வப்படுபவர்களே! உங்கள் ராசிக்கு 9ம் வீட்டில் இந்த ஜய வருடம் பிறப்பதால் தொலைநோக்குச் சிந்தனை அதிகரிக்கும். உங்கள் மீது உங்களுக்கே இருந்து வந்த அவ நம்பிக்கைகள் நீங்கும். சாதிக்கும் எண்ணம் உருவாகும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். வி.ஐ.பிகள் அறிமுகம் கிடைக் கும். ராஜதந்திரமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். சமூகத்தில் மதிக்கத்தகுந்த கௌரவப் பதவிகள் தேடி வரும். புதிதாக வீடு, மனை வாங்கும் யோகம் உண்டாகும்.

உங்கள் ராசிக்கு தனஸ்தானத்தில் சுக்ரன் நிற்கும் போது இந்தப் புத்தாண்டு பிறப்பதால் மாதக்கணக்கில் தடைப்பட்டு வந்து தள்ளிப் போன காரியங்களெல்லாம் விரைந்து முடியும். அயல்நாட்டிலிருக்கும் நண்பர்களால் ஆதாயமடைவீர்கள். பிள்ளைகள் தங்கள் தவறை உணரு வார்கள். பூர்வீக சொத்து பங்கை கேட்டு வாங்குவீர்கள். சொந்த பந்தங்கள் மதிக்கும்படி நடந்துக் கொள்வீர்கள். படித்து பட்டம் வாங்கியும் உங்கள் கல்வித் தகுதிக் கேற்ப ஒரு உத்யோகம் இல்லாமல் இருந்தவர்களுக்கு நல்ல நிறுவனத்திலிருந்து அழைப்பு வரும்.

ஆனி, ஆவணி, ஐப்பசி, கார்த்திகை, பங்குனி மாதங்களில் திடீர் பணவரவு, வீடு, வாகன சேர்க்கை உண்டாகும்.

ஜுன் 12 வரை குருபகவான் உங்கள் ராசிக்கு 6ம் வீட்டில் மறைந்துக் கிடப்பதால் முதல் முயற்சியிலேயே சில வேலைகளை முடிக்க முடியாமல் இரண்டு, மூன்று முறை போராடி முடிப்பீர்கள். வீண் சந்தேகத்தால் நல்லவர்களின் நட்பை இழக்க நேரிடும். சிலர் உங்களை தவறான போக்கிற்கு தூண்டுவார்கள். வீண் பழிகள் வரக்கூடும். வெளியூர் பயணகளால் அலைச்சல் அதிகரிக்கும். கனவுத் தொல்லையால் தூக்கம் குறையும். ஜுன் 13ந் தேதி முதல் குரு 7ம் வீட்டில் அமர்ந்து உங்கள் ராசியை பார்க்க இருப்ப தால் உங்களின் திறமைக்கு ஒரு அங்கீகாரம் கிடைக்கும். அழகு, இளமைக் கூடும். திருமணம் தள்ளிப் போனவர் களுக்கு கூடி வரும். கணவன் மனைவிக்குள் இருந்து வந்த பனிப்போர் நீங்கும். குடும்பத்தில் குழப்பத்தை ஏற்படுத்திய வர்களை இனம் கண்டறிந்து ஒதுக்குவீர்கள். பழைய பிரச்னைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். அடகிலிருந்த நகைகளை மீட்பீர்கள். குழந்தை பாக்யம் கிடைக்கும். திருமணம், சீமந்தம், கிரகப்பிரவேசம் போன்ற சுப நிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும்.

ஜுன் 20ந் தேதி வரை கேது உங்கள் ராசிக்கு 4ம் வீட்டில் நிற்பதால் வேலைச்சுமை இருந்துக் கொண்டே யிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். தாயாருடன் கருத்து மோதல்கள் வரும். வாகனத்தில் செல்லும் போதும், சாலைகளை கடக்கும் போதும் நிதானம் அவசியம். சிறுசிறு விபத்துகள் ஏற்படக்கூடும். ஜுன் 21ந் தேதி முதல் கேது 3ம் வீட்டில் அமர்வதால் தடைகள், எதிர்ப்புகளெல்லாம் குறையும். வீரியத்தை விட காரியம் தான் முக்கியம் என்பதை உணர்ந்து செயல்படத் தொடங்குவீர்கள். கடந்த காலத்தில் உங்களுக்கு எதிராக செயல்பட்டவர்கள் இப்போது உங்களுக்கு ஆதரவாக செயல்படத் தொடங்குவார்கள். ஷேர் மூலம் பணம் வரும்.

ஜுன் 20ந் தேதி வரை ராகு 10ல் நிற்பதால் சிலர் உங்களை மதிக்காமல் போவார்கள். அதற்காக கவலைப்பட வேண்டாம். உத்யோகத்தில் பிடிப்பற்றப் போக்கு நிலவும். உங்களைப் பற்றிய வதந்திகளை சிலர் பரப்புவார்கள். ஜுன் 21ந் தேதி முதல் ராகு 9ம் வீட்டில் நுழைவதால் அநாவசியச் செலவுகளால் சேமிப்புகள் கரையும். கடன் வாங்க வேண்டிய சூழ்நிலையும் உருவாகும். தந்தையாருக்கு நெஞ்சு வலி, சோர்வு, களைப்பு வந்துப் போகும். பிதுர்வழி சொத்துப் பிரச்னையில் மூக்கை நுழைக்காதீர்கள்.

டிசம்பர் 15 வரை உங்கள் ராசிநாதன் சனிபகவான் 10ம் வீட்டிலேயே நிற்பதால் கடந்த காலத்தில் ஏற்பட்ட வெற்றிகள், பாராட்டுகளை நினைவுக் கூர்ந்து மகிழ்வீர்கள். முக்கிய பதவியில் இருக்கும் பால்ய நண்பர்களால் ஆதாய மடைவீர்கள். வெளிநாடு செல்லும் வாய்ப்பு வரும். வேற்று மொழிப் பேசுபவர்கள், வெளிநாட்டிலிருப்பவர்கள் ஆதரவாக இருப்பார்கள். சொந்த ஊரில் இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவீர்கள். வேலைச்சுமை அதிகரிக்கும். டிசம்பர் 16 முதல் சனிபகவான் உங்கள் ராசிக்கு லாப வீடான 11ம் வீட்டில் நுழைவதால் பிரபலங்கள் பட்டியலில் இடம் பிடிப்பீர்கள்.

வியாபாரத்தில் கடந்தாண்டை விட இந்த வருடம் லாபம் அதிகரிக்கும். தரமான சரக்குகளை மொத்த விலைக்கு வாங்குவீர்கள். புது நண்பர்களின் உதவியால் முன்னேறுவீர்கள். கடையை விரிவுப்படுத்தி, அழகுப்படுத்து வீர்கள். பெரிய நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வதன் மூலம் உங்கள் நிறுவனத்தின் புகழ் கூடும். பழைய வாடிக்கை யாளர்களும் தேடி வருவார்கள். அனுபவமிக்க வேலையாட் களை பணியில் அமர்த்துவீர்கள். சந்தையில் மதிக்கப்படு வீர்கள். இரும்பு, மூலிகை, கன்ஸ்ட்ரக்ஷன், அழகு சாதனப் பொருட்கள், துணி வகைகளால் ஆதாயமடைவீர்கள்.

உத்யோகத்தில் சூழ்ச்சியாலும், மறைமுக எதிரிக ளாலும் இழந்த சலுகைகள், பதவிகளை மீண்டும் பெறுவீர்கள். புது வாய்ப்புகள் தேடி வரும். அலுவலகத்தில் மதிப்பு மரியாதை கூடும். உங்களுடன் பகைமை பாராட்டிக் கொண்டிருந்த உயரதிகாரி வேறு இடத்திற்கு மாற்றப் படுவார். சக ஊழியர்கள் உங்களின் புதுத் திட்டங்களை வரவேற்பார்கள். என்றாலும் டிசம்பர் 15 வரை சனி உத்யோக ஸ்தானத்தில் நிற்பதால் அதிகாரப் பதவியில் அமர்ந்தாலும் சட்டத்திற்கு புறம்பாக எதையும் செய்ய வேண்டாம். உங்கள் உழைப்பிற்கு ஒரு அங்கீகாரம் இல்லாமல் போகும். வேலையில் நீடிப்போமோ, நீடிக்க மாட்டோ என்ற ஒரு அச்சம் வரும்.

கலைத்துறையினரே! உங்களுடைய படைப்புகள் வெளியாவதில் இருந்த தடைகள் நீங்கும். மக்களால் பாராட்டப்படுவீர்கள். பழைய நிறுவனத்திலிருந்தும் புது வாய்ப்புகள் வரும்.

மாணவ மாணவிகளே! எண்ணங்கள் நிறைவேறும். படிப்பில் மதிப்பெண் கூடும். விரும்பிய கோர்ஸில் சேருவீர்கள். அயல்நாடு சென்று படிக்கும் வாய்ப்பும் தேடி வரும். ஆசிரியர் உறுதுணையாக இருப்பார்கள்.

கன்னிப் பெண்களே! கல்வியும் இனிக்கும், காதலும் இனிக்கும். உங்கள் ரசனைக் கேற்ப நல்ல வாழ்க்கைத் துணையும் அமையும். பெற்றோரின் பேரன்பில் மகிழ்வீர்கள். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு.

இந்த ஜய வருடம் அடிப்படை வசதிகளை அதிகப்படுத்துவதாகவும், சமூகத்தில் அந்தஸ்தையும் வழங்கிச் செல்லும்.

## கும்பம்

அடக்கமாகும் வரை அடக்கமாயிரு என்பதை அறிந்து வைத்திருப்பவர்களே! உங்கள் ராசிக்கு 5ம் வீட்டில் குரு வலுவாக அமர்ந்திருக்கும் நேரத்தில் இந்த ஜய வருடம் பிறப்பதால் எதிர்ப்புகள் அடங்கும். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் அறிமுகம் கிடைக்கும். தள்ளிப் போன அரசாங்க விஷயங்கள் நல்ல விதத்தில் முடிவடையும். குடும்பத்தில் நிம்மதி உண்டாகும். பணப்புழக்கம் கணிசமாக உயரும். எதிர்த்தவர்கள் நண்பர்களாவார்கள். வீடு கட்ட அரசாங்க அனுமதி கிடைக்கும். வங்கிக் கடன் உதவியும் கிட்டும். மனைவி உங்களின் புதுத் திட்டங்களை ஆதரிப்பார். மனைவிவழி உறவினர்கள் மத்தியில் மரியாதைக் கூடும்.

உங்கள் ராசிக்கு 8ம் வீட்டில் சந்திரன் நிற்கும் போது இந்தப் புத்தாண்டு பிறப்பதால் அலைச்சலுடன் ஆதாயம் உண்டாகும். சவால்களை சமாளிக்கும் வல்லமை கிடைக்கும். பணப்பற்றாக்குறையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். அதிக வட்டிக் கடனை குறைந்த வட்டிக்கு கடன் வாங்கி பைசல் செய்வீர்கள்.

ஆனி, ஆடி, ஆவணி மாதப் பிற்பகுதி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, பங்குனி ஆகிய மாதங்களில் ஓரளவு பணவரவும், பதவியும் வந்து சேரும். மகளுக்கு திருமணத்தை சிறப்பாக முடிப்பீர்கள்.

உங்கள் ராசிக்கு 8ல் செவ்வாய் நிற்கும் போது ஜய வருடம் பிறப்பதால் அடிவயிற்றில் வலி, சிறுசிறு விபத்துகள், சகோதர வகையில் மனத்தாங்கல், சொத்து வாங்குவது, விற்பதில் சிக்கல்கள் வந்துச் செல்லும். யாருக்காகவும் சாட்சி கையெழுத்திட வேண்டாம்.

ஜூன் 12ந் தேதி வரை குருபகவான் சாதகமாக இருப்பதால் திருமணம், சீமந்தம், கிரகப் பிரவேசம் போன்ற சுப நிகழ்ச்சிகள் வீட்டில் ஏற்பாடாகும். குழந்தை பாக்யம் கிடைக்கும். மகளின் திருமணத்தை சீரும், சிறப்புமாக நடத்துவீர்கள். மகனுக்கு அயல்நாடு தொடர்புடைய பெரிய நிறுவனத்தில் வேலைக் கிடைக்கும். பூர்வீக சொத்து கைக்கு வரும். ஜூன் 13ந் தேதி முதல் குருபகவான் உங்கள் ராசிக்கு 6ம் வீட்டில் மறைவதால் வரவுக்கு மிஞ்சிய செலவுகள் இருக்கும். வங்கிக் காசோலையில் முன்னரே கையொப்பமிட்டு வைக்க வேண்டாம். உங்கள் மீது சிலர் வீண் பழி சுமத்த முயற்சிப்பார்கள். புகழ், கௌரவம் குறைந்துவிடுமோ என்ற ஒரு அச்சம் வரும். தன்னம்பிக்கை குறையும். சில நேரங்களில் நெருக்கடிகளையும், தர்மசங்கடமான சூழ்நிலைகளையும் சமாளிக்க வேண்டி வரும். உங்களை நீங்களே குறைத்து மதிப்பிடாதீர்கள்.

ஜூன் 20ந் தேதி வரை கேது உங்கள் ராசிக்கு 3ம் வீட்டில் நிற்பதால் தைரியம் கூடும். தன்னிச்சையாக சில முக்கிய முடிவுகள் எடுக்கத் தொடங்குவீர்கள். சொத்து சேர்க்கை உண்டு. ஆன்மிக விழாக்களை முன்னின்று நடத்துவீர்கள். ஷேர் மூலமாக பணம் வரும். வேற்று மதத்தவர்களால் திடீர் திருப்பம் உண்டாகும். ஆனால் ராகு 9ம் வீட்டில் நீடிப்பதால் தந்தைக்கு வேலைச்சுமை, டென்ஷன், அவருடன் கருத்து மோதல்கள், வீண் விரையம் வந்துச் செல்லும். சேமிப்புகள் கரையும். ஜூன் 21ந் தேதி முதல் கேது உங்கள் ராசிக்கு 2ம் வீட்டிலும், ராகு 8லும் மறைவதால் யதார்த்தமாக நீங்கள் பேசுவதைக் கூட சிலர் தவறாகப் புரிந்துக் கொண்டு உங்களை விமர்சிப்பார்கள். வாகனத்தில் அதிக வேகம் வேண்டாம். இரவு நேரப் பயணங்களை தவிர்ப்பது நல்லது. கண் எரிச்சல், பார்வைக் கோளாறு, பல் வலி வந்துச் செல்லும். குடும்பத்தில் கணவன் மனைவிக்குள் வாக்குவாதங்கள் வந்துப் போகும்.

டிசம்பர் 15ந் தேதி வரை உங்கள் ராசிநாதன் சனி பகவான் 9ம் வீட்டில் நிற்பதால் எல்லாப் பிரச்னைகளிலிருந்தும் நூலிழையில் வெளிவருவீர்கள். பிதுர்வழி சொத்துப் பிரச்னை முடிவுக்கு வரும். வழக்கில் எதிர்பார்த்த படி நல்ல தீர்ப்பு வரும். தந்தைவழியில் ஆதாயமடைவீர்கள். நீண்ட நாட்களாக எதிர்பார்த்து காத்திருந்த விசா கிடைக்கும். உள் மனதில் தொக்கி நிற்கும் தாழ்வு எண்ணங்களை தூக்கி எறிவீர்கள். புது வேலைக் கிடைக்கும். டிசம்பர் 16ந் தேதி முதல் 10ம் வீட்டில் சனி நுழைவதால் வீண் வதந்திகள், அக்கம் பக்கம் வீட்டாருடன் பிரச்னைகள், உத்யோகத்தில் வேலைச்சுமை வந்துச் செல்லும்.

வியாபாரத்தில் கொஞ்சம் ஏற்ற இறக்கங்கள் இருக்கத்தான் செய்யும். புதிது புதிதாக வரும் போட்டியாளர்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறுவீர்கள். லாபம் கணிசமாக உயரும். ஆழம் தெரியாமல் பெரிய முதலீடுகள் போட்டு சிக்கிக் கொள்ளாதீர்கள். தேங்கிக் கிடந்த சரக்குகளை தள்ளுபடி விலைக்கு விற்றுத் தீர்ப்பீர்கள். வேலையாட்களிடம் தொழில் ரகசியங்களை சொல்லிக் கொண்டிருக்க வேண்டாம். லாபத்தை அதிகப்படுத்த விளம்பரம் மற்றும் நவீன யுக்திகளை கையாளுங்கள். பாக்கிகளை நயமாகப் பேசி வசூலிக்கப் பாருங்கள். வேற்றுமதத்தவர்களின் உதவி மற்றும் கடன் உதவியால் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். அரசாங்கத்தால் நெருக்கடிகளை சந்திக்க நேரிடும். புது ஏஜென்சியை யோசித்து எடுக்கப்பாருங்கள். பங்குதாரர்களின் ஒத்துழைப்பு சுமாராக இருக்கும்.

உத்யோகத்தில் உங்களின் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். உங்களைக் குறை கூறிக் கொண்டிருந்த மேலதிகாரியின் மனசு மாறும். என்றாலும் சக ஊழியர்களின் விடுப்பால் மற்றவர்களை வேலைகளையும் சேர்த்து பார்க்க வேண்டி வரும். எதிர்பார்த்த சம்பள உயர்வு, பதவி உயர்வு தாமதமாகும். உங்களுக்கு நியாயமாக கிடைக்க வேண்டிய சலுகைகளை போராடி பெறுவீர்கள்.

கலைத்துறையினரே! கிடைக்கின்ற வாய்ப்பை சரியாகப் பயன்படுத்தி முன்னேறப்பாருங்கள். மூத்த கலைஞர்கள் உதவிகரமாக இருப்பார்கள். சம்பள பாக்கி கைக்கு வரும்.

மாணவ மாணவிகளே! அன்றைய பாடங்களை அன்றே முடிப்பது நல்லது. வகுப்பறையில் ஆசிரியரிடம் சந்தேகங்களை கேட்க தயங்காதீர்கள். கெட்ட நண்பர்களை அறவே ஒதுக்கிவிட்டு படிப்பில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. பள்ளி மாற வேண்டி இருக்கும். போராடி சில பாடங்களில் வெற்றி பெறுவீர்கள்.

கன்னிப் பெண்களே! சிலரின் ஆசை வார்த்தைகளை நம்பி ஏமாற வேண்டாம். நல்ல நிறுவனத்தில் வேலை கிடைக்கும். கல்யாணம் கொஞ்சம் தாமதமானாலும் நல்லபடியாக முடியும்.

இந்த ஜய வருடம் உங்களின் எதிர்பார்ப்புகளை ஓரளவு நிறைவேற்றுவதுடன் உறவினர்கள் மத்தியில் மரியாதையைக் கூட்டுவதாகவும் அமையும்.



# மீனம்

வாய்ப்புகள் கை நழுவிப் போன பின் ஏங்குபவர்களே! உங்கள் ராசிக்கு 7ம் வீட்டில் இந்த ஜய வருடம் பிறப்பதால் உங்களுடைய அறிவாற்றலை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும். அழகு, இளமைக் கூடும். உங்களுடைய ஆலோசனைகள் எல்லோரும் ஏற்கும்படி இருக்கும். வாட்டி வதைத்துக் கொண்டிருந்த பிரச்சனைகளுக்கெல்லாம் இனி தீர்வு கிடைக்கும். தள்ளிப் போன திருமணம் உடனே முடியும். உங்கள் பலவீனங்களையெல்லாம் பட்டியலிட்டு அவற்றையெல்லாம் மாற்றிக் கொள்வீர்கள்.

சுக்ரனும், புதனும் சாதகமான நட்சத்திரத்தில் செல்லும் போதும் இந்த வருடம் பிறப்பதால் வீராவேசமாக பேசி விமர்சனங்களுக்குள்ளாவதை விட கனிவாகப் பேசி எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பது தான் நல்லது என்ற முடிவுக்கு வருவீர்கள். பணப்பற்றாக்குறையை போக்க கூடுதலாக உழைப்பீர்கள். சுற்றியிருப்பவர்களின் சுயரூபம் தெரிய வரும். உங்களைப் பற்றிய நல்ல அபிப்ராயம் மனைவிவழி உறவினர்கள் மத்தியில் அதிகரிக்கும். பிரபலங்களுக்கு நெருக்கமாவீர்கள். விலை உயர்ந்த சமையலறை சாதனங்கள் வாங்குவீர்கள்.

ஜூன் 12 வரை உங்கள் ராசிநாதன் குருபகவான் 4ம் வீட்டில் நிற்பதால் வீடு, வாகனப் பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும். தாயாரின் உடல் நிலை பாதிக்கும். உங்களைப் பற்றிய விமர்சனங்களும் அதிகரிக்கும். எதிர்மறை எண்ணங்களும் ஏற்படும். ஜூன் 13ந் தேதி முதல் குரு உங்கள் ராசிக்கு 5ம் வீட்டில் நுழைவதால் வசதி, வாய்ப்புகள் ஓரளவு பெருகும். வருமானத்தை உயர்த்த அதிரடி திட்டங்கள் தீட்டி உழைப்பீர்கள். பிரபலங்கள், தொழிலதிபர்களின் நட்பு கிடைக்கும். கல்யாணம், கச்சேரி என்று வீடு களை கட்டும். மனை வாங்கி போட்டு வெகுநாட்களாகிவிட்டதே! அதில் இப்போது வீடு கட்டி முடிப்பீர்கள். பிள்ளைகளிடம் இருந்த பிடிவாத குணம் மாறும். மகளுக்கு எதிர்பார்த்தபடி நல்ல வரன் அமையும். மகனின் கூடா நட்பு விலகும். பொறுப்பாக நடந்துக் கொள்வார். பூர்வீக சொத்து கைக்கு வரும். அரசாங்க விஷயங்களில் இருந்து வந்த தேக்க நிலை மாறும்.

ஜூன் 20ந் தேதி வரை ராகு 8ம் வீட்டிலும், கேது 2லும் நிற்பதால் கணவன் மனைவிக்குள் வீண் சந்தேகங்கள் வரும். ஈகோப் பிரச்னையால் பிரிவுகள் ஏற்படக்கூடும். பேச்சில் காரம் வேண்டாம். எனவே இடம், பொருள், ஏவல் அறிந்து செயல்படப்பாருங்கள். பல், காது மற்றும் தொண்டை வலி வரக்கூடும். சிறுசிறு விபத்துகள் நிகழக்கூடும். ஜூன் 21ந் தேதி முதல் கேது உங்கள் ராசிக்குள் நுழைவதால் ஆரோக்யத்தில் கூடுதல் கவனம் செலுத்துங்கள். பொறித்த, வறுத்த மற்றும் வெளி உணவுகளை தவிர்ப்பது நல்லது. அவ்வப்போது முன்கோபம் வரக்கூடும். ராகுவும் 7ம் வீட்டில் அமர்வதால் மன உளைச்சல், விரக்தி, விரையம் வந்துப் போகும். தலைசுற்றல் ஏற்படும். அவ்வப்போது குடும்ப வாழ்க்கையில் பற்றில்லாமல் போகும். எவ்வளவு பணம் வந்தாலும் பணத்தட்டுபாடு இருக்கும். மனைவிக்கு ஃபைப்ராய்டு, முதுகு தண்டில் வலி, சிறுசிறு அறுவை சிகிச்சைகள் வந்துப் போகும். யாரை நம்புவது என்கிற மனக்குழப்பத்திற்கு ஆளாவீர்கள்.

டிசம்பர் 15 வரை அஷ்டமத்துச் சனி நடைபெறுவதால் திடீரென்று அறிமுகமாகுபவர்களை வீட்டிற்கு அழைத்து வர வேண்டாம். மற்றவர்களை நம்பி பெரிய முடிவுகளை தவிர்ப்பது நல்லது. நகை, பணம், முக்கிய சொத்து ஆவணங்களையெல்லாம் வங்கி லாக்கரில் பாதுகாப்பாக வைப்பது நல்லது. வீட்டில் களவுப் போக வாய்ப்பிருக்கிறது. வழக்கில் வழக்கறிஞரை மாற்ற வேண்டிய சூழ்நிலை வரும். பழைய பிரச்னைகளெல்லாம் மீண்டும் வந்துவிடுமோ என்ற அச்சம் அடிமனதில் இருந்துக் கொண்டேயிருக்கும். நெஞ்சு வலி, ஹார்மோன் பிரச்னை, ஆழ்ந்த உறக்கமின்மை வந்துச் செல்லும். கை, கால் மரத்துப் போகும். குறுக்கு வழியில் ஆதாயம் தேட வேண்டாம். டிசம்பர் 16ந் தேதி முதல் சனி உங்கள் ராசிக்கு 9ம் வீட்டில் நுழைவதால் மனப் போராட்டங்களிலிருந்து விடுபடுவீர்கள். தைரியமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். தாழ்வுமனப்பான்மை நீங்கும். ஷேர் மூலம் பணம் வரும். வேற்றுமதத்தவர், மொழியினரால் ஆதாயமடைவீர்கள். பிரிந்த கணவன் மனைவி ஒன்று சேருவீர்கள்.

வைகாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை மாதங்களில் பணவரவு அதிகரிக்கும். வேலைக் கிடைக்கும். சொத்து அமையும்.

வியாபாரத்தில் சென்ற வருடத்தை விட இந்தாண்டு லாபம் கணிசமாக உயரும். என்றாலும் அஷ்டமத்துச் சனி தொடர்வதால் புதியவர்களை நம்பி முதலீடுகள் செய்து ஏமாற வேண்டாம். ஆனால் ஜூன் 13ந் தேதி முதல் ராசிநாதன் குரு உச்சமடைவதால் லாபம் ரெட்டிப்பாகும். கடையை மாற்றுவீர்கள். சிலர் விரிவுப்படுத்துவீர்கள். பங்குதாரர்களின் தொந்தரவுகள் குறையும். கல்வி, ஸ்டேஷனரி, உணவு, ரியல் எஸ்டேட், வாகன உதிரி பாகங்கள், ஏற்றுமதி இறக்குமதி வகைகளால் ஆதாயமுண்டு.

ஜூன் 13ந் தேதி முதல் குரு 5ல் அமர்வதால் உத்யோகத்தில் பழைய சிக்கல்களெல்லாம் பனியாய் விலகும். உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். எதிர்பார்த்த சலுகைகளும், சம்பள உயர்வும் கிடைக்கும். சக ஊழியர்களின் ஆதரவு உண்டு. என்றாலும் அஷ்டமத்துச் சனி தொடர்வதால் இடமாற்றம், மறைமுக எதிர்ப்புகள், முகவரி இல்லாத குற்றச்சாட்டு கடிதங்களின் அடிப்படையில் சின்ன சின்ன விசாரணைகளை சந்திக்க வேண்டிய சூழல் வரும். உங்கள் வேலையை மற்றொருவரிடம் ஒப்படைக்க வேண்டாம்.

கலைத்துறையினர்களே! கௌரவிக்கப்படுவீர்கள். உங்களுக்கு எதிராக விமர்சனங்கள் வந்தாலும் அஞ்ச வேண்டாம். பெரிய நிறுவனங்களிலிருந்து புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

மாணவ மாணவிகளே! புத்தகத்தை பிரித்தாலே தூக்கம் வந்ததே! இனி உற்சாகமாக படிப்பீர்கள். விளையாட்டில் பதக்கம் உண்டு. கூடா நண்பர்களை தவிர்த்து நல்ல நட்புச் சூழலை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.

கன்னிப்பெண்களே! காதல் விவகாரங்களை தள்ளி வைத்து விட்டு உயர்கல்வியில் கவனம் செலுத்துங்கள். வேலைக் கிடைக்கும். பெற்றோரின் விருப்பப்படி திருமணம் முடியும். ஹார்மோன் கோளாறுகள் வந்து நீங்கும். காய், கனிகளை அதிகம் உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள்.

இந்த ஜய வருடம் முற்பகுதி கசந்தாலும், மையப் பகுதி மகிழ்ச்சியையும், இறுதிப் பகுதி வசதி, வாய்ப்புகளையும் அதிகப்படுத்துவதாக அமையும்.

# பவுர்ணமியின் தனிச்சிறப்பு!



சந்திரன் படிப்படியாக, ஒளி குறைந்து, முற்றுமாக, நம் கண்ணுக்குத் தென்படாத தினத்தை அமாவாசை என்றும், அதன் பிறகு, படிப்படியாக ஒளி கூடி, முழு இரவும் முழுமையாகத் தென்படும் நாளை பவுர்ணமி என்றும் கூறுகிறோம். பகலில் சூரியனும்; இரவில் சந்திரனுமாக, ஒரு நாளில் 24 மணி நேரமும், விண் ஒளிகள், நம்மீது, இயற்கையாகவே படர்வது பவுர்ணமி அன்று மட்டுமே. இதனால் தான் பரம்பொருள் வழிபாட்டில் மற்ற நாட்களில் செய்யப்படும் வழிபாடுகளை விட பவுர்ணமி பூசையை மிகச் சிறந்ததாகப் போற்றி வந்திருக்கின்றனர். பொதுவாக, ஒவ்வொரு திதியையும், குறிப்பிட்ட ஒரு தெய்வ வழிபாட்டுக்கே மிக உகந்ததாக கருதப்படுவதை அறிவோம். உதாரணமாக, சதுர்த்தி விநாயகருக்கும், சஷ்டி முருகனுக்கும், அஷ்டமி, நவமி அம்மனுக்கும், ஏகாதசி விஷ்ணுவுக்கும், திரயோதசி, சதுர்த்தசி சிவபெருமானுக்கும் ஏற்றதாகக் கூறப்படுகிறது. இதற்கு மாறாக, பவுர்ணமியை மட்டும், சிவனுக்கும், விஷ்ணுவுக்கும், முருகனுக்கும் அன்னை பராசக்திக்கும், லக்ஷ்மிக்கும் என்று பல தெய்வ வழிபாடுகளுக்கும் மிக மேன்மையாகக் கருதுவது குறிப்பிடத்தக்கது. பவுர்ணமியில் பூசை பண்ணியதும் பலன் என்று கூறுமளவுக்கு முழுநிலவன்று வழிபடுவது மிக்க சிறப்புடையது.

காலத்தைக் கணக்கிடும் பல முறைகளில், சூரியமானம், சந்திரமானம் என்பவை மிக முக்கியமானவை. பொதுவாக, வடபாரத மாநிலங்களில் தான், சந்திரனின் நகர்வை அடிப்படையாகக் கொண்டாலும், சூரியனின் நகர்வைப் பின்பற்றும் தழிகத்திலும் பலமுக்கிய செயல்பாடுகளுக்கு நிலவின் நிலையும் கருதப்பட்டிருக்கிறது. குறிப்பாக, இறைவழிபாட்டில், அதுவும், ஆலய வழிபாட்டில் பவுர்ணமியும் அதை ஒட்டிய நக்ஷத்திரமுமே மிகவும் மேன்மையாகக் கருதப்பட்டிருக்கின்றன. சித்திரைத் தேர் முதல், பங்குனிக் காவடி வரை, லட்சக்கணக்கானோர் கலந்து கொள்ளும் மிகப்பெரிய திருவிழாக்கள் அநேகமாக முழுநிலவு நாளன்றே நடைபெறுகின்றன. இத்தகு முக்கிய திருவிழாக்களில் ஒன்று தான் திருவண்ணாமலையில் திருக்கார்த்திகையன்று நடைபெறும் தீபவிழாவும் ஆகும். அண்மையில் பிரபலமாகியுள்ள கிரி வலம் வரும் வழிபாடும் பவுர்ணமியின் மேன்மை கருதியே

---

# எண் 7ன் சிறப்புகள் தெரியுமா?



1. பிறப்புகள் : தேவர், மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம்
2. பெண்களின் பருவம் : பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, திரிவை, பேரிளம்பெண்
3. தினங்கள் : ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி
4. கன்னிகள் : அபிராமி, மகேஸ்வரி, கவுமாரி, நாராயணி, வராகி, காளி, இந்திராணி
5. மண்டலங்கள் : வாயு, வருணன், சந்திரன், சூரியன், நட்சத்திரம், அக்கினி, திரிசங்கு
6. மேகங்கள் : சம்வர்த்தம், ஆவர்த்தம், புட்கலாவத்தம், சங்காரித்தம், துரோணம், காளமுகி, நீலவருணம்
7. கடல்கள் : உவர்நீர், நன்னீர், பால், தயிர், நெய், தேன், கருப்பஞ்சாறு
8. சுவரங்கள் : ச ரி க ம ப த நி
9. இசைகள் : குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி,விளரி, தாரம்
10. நகர்கள் : அயோத்தி, மதுரா, காசி, காஞ்சி, மாயா, அவந்தி, துவாரகா
11. அகத்திணைகள் : குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, கைக்கிளை, பெருந்திணை
12. தலை வள்ளல்கள் : சகரன், காரி, நளன், துந்துமாரி, நிருதி, செம்பியன், விராடன்
13. இடை வள்ளல்கள் : அக்குலன், அந்திமான், கன்னன், சந்தன், சந்திமான், சிசுபாலன், வக்கிரன்
14. கடை வள்ளல்கள் : பாரி, ஆய், எழினி, நள்ளி, மலையன், பேகன், ஓரி.
15. ரிஷிகள் : அகத்தியர், அங்கீரசர், கவுதமர், காசிபர், புலத்தியர், வசிட்டர், மார்க்கண்டேயர்
16. சிரஞ்சீவிகள் : அசுவத்தாமன், விபீஷணன், மாபலி, அனுமன், வியாசர், பரசுராமர், கிருபாசாரியன்


லண்டனில் அதிக
காய்கறி வகைகளை
இறக்குமதி செய்து
விற்பனை செய்பவர்கள்








4/2014


Lycamobile
Call the world for less
Sri Lanka
5 p/min Landline
5 p/min Mobile
Text "ACT SAVE" to 2525
For your FREE Lycamobile SIM visit www.lycamobile.co.uk or call 020 7132 0322
Top-up your SIM online or where you see the following signs:
top-up
PayPoint
epay
payzone
phones 4u
TESCO
Martin McColl
Sainsbury's
WHSmith
Carphone Warehouse
Customers may not be able to use Electronic Top-Up at all locations where the top-up logo appears
Offer valid for new and existing Lycamobile customers. The above special rates are applicable for those customers who joined on or after 08.02.2014. Existing customers who joined before 08.02.2014 should opt-in by texting ACT SAVE to 2525. If you are a National plan ( UK PLAN 10,12,20,30 & 40) customer, you will eligible for the Special discounted international rate. Existing customers who joined before 08.02.2014 who do not opt-in will be charged at the standard rate. Promotion valid from 08.02.2014.
Lyca mobile
Call the world for less